தமிழ் இலக்கிய வரலாறு

பட்டப் படிப்பு மாணவர்க்கும் போட்டித் தேர்வுகள எழுதுவார்க்கும் பயன்படும் வகையில் எழுதப்பட்டது.

ஆசிரியர்:

செ. யா. திருந்திளையன், எம். ஏ.,

வெளியீட்டெண்: 10

வெளியிடுவோர்:

தமிழ்ச் சங்கம்

காஞ்சிபுரம்.

தமிழ்
இலக்கிய வரலாறு

அரும்பிய தமிழார் வத்தை
ஆர்வமாய் வளர்த்த அய்யா
நறுந்தமிழ்ச் சுவையை நாளும்
நயமுடன் பகர்ந்த வேந்தர்
திருத்தகு புகழார் ஆசான்
செம்மைசால் வளன ரைசு
திருவடி வணங்கித் தந்தேன்
சிறுநூற் காணிக்கை ஏற்க!

செ. யா. திருந்திளையன், எம்.ஏ.,

தமிழ்ச் சங்கம்
காஞ்சிபுரம்-631 501.

முதற்பதிப்பு: 1985

விலை: ரூ. 11-00

அச்சிட்டோர்:

ஜெயவேல் அச்சகம்,
தேரடி, காஞ்சிபுரம்.

பதிப்புரை

சீலத்திரு ஞானப்பிரகாச சுவாமிகளின் அருளாணைப் படித் துவங்கப் பெற்ற (காஞ்சிபுரம்) தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழாவினை யொட்டி இரு நூல்களை வெளியிடத் திட்டமிட்டோம். அவற்றுள், தமிழ் இலக்கிய வரலாறு எனும் இந்நூல் ஒன்றாகும். சிறந்த தமிழார்வலரும், நாவீறு மிக்க பேச்சாளரும், நல்ல தமிழ் கைவந்த வல்லாளரும் ஆகிய **திரு. செ. யா. திருநந்திளையான், எம். ஏ.,** அவர்கள் எழுதித் தொகுத்து வைத்திருந்த கட்டுரைகளைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக நூலாக வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம். இந்நூல் மாணவர்க்கும் மற்றவர்க்கும் தமிழின் பெருமை யுணர்த்தி, சுவையுணரத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை,

தமிழ்ச் சங்கத்தின் பத்தாவது வெளியீடாக இந்நூல் வெளிவருகிறது.

அரிய தமது படைப்பின் முதற்பதிப்பினை வெளியிட்டுக்கொள்ளும் உரிமையைத் தமிழ்ச் சங்கத்தின் நலங்கருதித் தந்துள்ள ஆசிரியர்க்குச் சங்கத்தின் நன்றி உரித்து. இந்நூலைத் தம் கைம்மலர்களான் வெளியிட முன்வந்த காஞ்சிபுரம் பச்சையப்பன் மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் கவிஞர் திரு. மு. **சண்முகம்**, எம். ஏ. பி. டி., அவர்களுக்கும் சங்கத்தின் நன்றிப் பெருக்கை உரித்தாக்குகிறோம்.

இந்நூலை மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஜெயவேல் அச்சகத்தாரிக்கும் எமது நன்றி என்றும் உரியது.

தமிழ் கூறும் நல்லுலகம் இப்படைப்பினை வரவேற்று மகிழுமாக!

இவண்,
தமிழ்ச் சங்கத்தார்,
காஞ்சிபுரம்.

ஆசிரியர் உரை

இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்பது புலவர்தம் பெருமிதக் கூற்று. பண்டைத் தமிழிலக்கியங்களின் செழுமைக் கூறும், முழுமைப் பேறும் ஞாலத்தின் கண்களை வியப்பான் விரியச் செய்யும். தமிழைத் தெய்வமாகவும், தாயாகவும் ஏற்று மொழிந்து, போற்றிப் புகழ்ந்த அக்காலப் புலவர்கள் தாய்மொழியை வாழ்விப்பதிலும், வளர்ப்பதிலும் பெருமிதப் படும் வகையில் பங்கு கொண்டு, பெருந்தொண்டாற்றியுள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.

கலைகளுள் இலக்கியக் கலைக்குச் சிறப்பிடமுண்டு அவற்றுள்ளும் பாட்டிலக்கியம் செல்வாக்கு மிக்கதாம். கருத்துச் சிறப்பும், கற்பனை வளமும், உணர்வு ஓட்டமும், வடிவ அமைதியும் கூடிப் பிறந்த பாட்டு, வாயினில் தவழும் போதே நெஞ்சத்தைப் பிணித்து நிலைப்படுத்திவிடும் ஆற்றல் மிக்கது. இசைக்கு இசையார் எவருமிலர். வடிவ அமைதிமிக்க பாடல்கள் சூழ்நிலைக்கேற்ற இசை நயத்தைக் கொண்டு விளங்கும் தன்மையன என்பதாலேயே பாட்டிலக்கியம் யாவரையும் வயப்படுத்தி நிலைப்படுத்தி விடுகிறது. சந்த நயமிக்க பாடல்களான் எந்தக் கருத்தையும் எளிதில் மிக ஆழமாகப் பதியவைத்துவிட முடியும் எனுங் கருத்துணர்ந்தே புலவர் பெருமக்கள் வேறுபட்ட சுவைபயக்கும் பாட்டிலக்கணத்தை வரையறுத்துப் பின்பற்றியுள்ளனர். சங்கப் புலவர் முதற்கொண்டு, பாரதிதாசன் வரை பாட்டிலக்கணத்துறை வளர்ந்தும், வளம் பெற்றும் வந்துள்ளதை அறிகிறோம்.

இளங்கலை இடையாண்டு பயிலும் மாணவர்க்கும், தமிழ் நாட்டுப் பொதுப்பணி விரிவாயத் தேர்வு (TNPSC

Exam Groups I & II) எழுதுவோர்க்கும் பயன்படும் வகையில் இலக்கிய வரலாறு குறித்த செய்திகளை எளிமையாகச் சுவை படத் தொகுத்துத் தரவேண்டும் என்ற ஆவலின் விளைவே இந்நூல்.

இலக்கிய வரலாற்றைச் சுவைபடக் கூறினால், மாண வரும் மற்றவரும் தமிழ் இலக்கியத்தை நாட்டங் கொண்டு கற்க முனைவர் என்பது திண்ணம். அரிய இலக்கியக் கருவூலங் களைக் கொண்டுள்ள தமிழினம், அவற்றின் பெருமையுணரத் தவறிவிட்டது என்பது கடந்தகாலச் செய்தி மட்டுமல்ல; நிகழ்கால உண்மையுங் கூட. இவ்வுண்மை புரிந்திருந்தும் தமிழார்வலரில் சிலர் பண்டித மனப்பான்மையுடன் நான்கு சுவர்களுக்கிடையில் இலக்கியத்தைச் சிறை பிடிக்கும் எண்ணத்தவராய் இருந்து விடுகின்றனர். எனவே தமிழிலக்கியம் மக்கள் பார்வைக்கு மறைவாகிவிடும் —தொலைவாகச் செல்லும் அவலத்தைக் காண்கிறோம். சமய இலக்கியங்கள் மட்டும் இவ்வகையில் விதிவிலக்கு எனக் கூறலாம்.

இந்நூல் தமிழிலக்கியத்தை மக்கள் பார்வைக்கு நெருக்கமாகக் கொணரும் கருவியாகப் பயன்படுமெனின் நான் மிகவும் மகிழ்வேன். தமிழர்க்குத் தமிழுணர்வை மெய் யாகவே ஊட்டுமெனின் அதைவிடச் சிறந்த இன்பம் வேறெது வும் கிடையாது. இந்நூலை அச்சுக்குக் கொடுத்த பின்னர் மெய்ப்புப்படி பார்ப்பதற்குக் காலம் இடந்தரவில்லை. எனினும் அச்சக உரிமையாளர் அவர்களே கையெழுத்துப் படியை ஒப்பிட்டுச் சரிபார்த்துதவினார். கையெழுத்துப் புரியாத காரணத்தினால் அச்சுப் பிழைகள் ஏற்பட்டு விட்டன. எனவே பிழை திருத்தம் தனியே இணைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. யான் இளங்கலை பயிலும் போது தமிழிலக்கிய வரலாறு பாடத்திட்டத்தை யொட்டி,பல நூல்களைப் படித்துத் தொகுத்த கருத்துக்கள் பல இந்நூல் சிறப்பாக அமைவதற்கு உதவின. எனவே அவ்வவ்வாசிரியர்களை நன்றியோடு நினைக்கிறேன். குறிப்பாக டாக்டர் இராசமாணிக்கனார், வ. சுப. மாணிக் கனார், சாமி சிதம்பரனார், கா.சு. பிள்ளை, டாக்டர் மு.வ., போன்ற அறிஞர் பெருமக்களை எண்ணி வணங்குகிறேன், நூலின் விரிவஞ்சி பல செய்திகளையும், சில கட்டுரைகளையும்

இப்பதிப்பில் சேர்க்க முடியவில்லை. தமிழுலகம் ஆதரிப்பின் மறுபதிப்பை விரிவாகக் கொணர்வல்.

இந்நூலை அழகுறப் பதிப்பித்துத் தந்த ஜெயவேல் அச்சக உரிமையாளர்க்கும், எனது கட்டுரைகளைப் படித்து நூலாக வெளியிடுவதற்குத் தூண்டித் துணைபுரிந்த நண்பர்களுக்கும், இந்நூலை வெளியிட்டுள்ள காஞ்சி தமிழ்ச் சங்கத்தார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

அன்பன்,

செ. யா. திருந்திளையன்.

சங்க காலம்

சங்க காலம் இலக்கிய உலகின் பொற்காலம்:

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றி மூத்துச் சிறந்த மொழி தமிழ்மொழி, சங்கம் என்னும் தொட்டிலிட்டுத் தாலாட்டப் பெற்ற பெருமை அதற்குண்டு, பாவலரொடு காவலரும் இணைந்து நின்று, கவிபல புனைந்து கன்னித் தமிழ் வளர்த்த காலம் சங்க காலமேயாம், அக்காலப் புலவர்கள் சாதிப் பிணக்சிற்கோ, சமயப் பிரிவிற்கோ, புலமைக் காய்ச்சலுக்கோ இடந் தந்தாரிலர். சொல்லும் பொருளும் செறிவுற்றமைந்த கவிகளைப் புனைந்து தமிழ்த்தாயின் திருவடிகளில் படைப் பதையே பேரின்பமாகக் கண்டனர், அவர்கள், தமிழிலக்கிய உலகில் தலைசிறந்த காலமாகத் திகழும் அக்காலத்தைப் பொற்காலம் எனப் போற்றி மகிழ்கிறோம்.

தொன்மைச் சிறப்பு:

சங்க காலம் என்பது கி. மு. இரண்டாம் நூற்றாண் டிற்கும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமென்பர். பாண்டிய மன்னர்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த காலத்தையே நாம் சங்க காலம் என்கிறோம். "தலைச்சங்கம், இடைச்சங்கம். கடைச்சங்கம் என மூவகைப் பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள்" என்பது இறையனார் அகப் பொருளுரை. அழிந்தது போக மீந்துள்ள நூல்களாகிய எட்டும், பத்தும் கடைச்சங்க கால நூல்களாகும்.

ஏற்றமும் இயற்கைத் தோற்றமும்:

சங்க இலக்கியங்கள் சுவையும் மணமும் ஒருங்கே கொண்ட செழுங்கனிகள் ஆகும்; மக்கள் வாழ்க்கையொடு இயற்கையை இயைத்துக் காட்டுவதில் சங்கப் புலவர்கள் ஈடிணையற்று விளங்குகின்றனர். வாழ்வியற் கூறுகளை அவர்கள் நுனித்தறிந்து உரைக்கும் முறைமையும் திறமையும் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. ''ஆயுந்தொறும் தொறும் இன்பந்தரும் தமிழாய்ச்'' சுவையை அள்ளித்தரும் அவ்விலக்கியங்கள் இயற்கை எழிலின் ஓவியங்களாய்த் திகழும் பொற்புடையன.

பொருளும் பொலிவும்:

பண்டைத் தமிழிலக்கியம் அகம்புறம் என்னும் இரு துறைகளில் தழைத்தோங்கிற்று. காதலும் வீரமும் சிறப்பாக மதிக்கப்பட்டன. புறப்பொருளினும் அகப்பொருளை மிக நுட்பமாகக் கையாண்டனர், புலவர் பெருமக்கள். மெல்லிய உணர்வுகளையும் மிகச் சிறப்பாகப் படமாக்கிக் காட்டினர்.

''யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''

(குறுந்; 40)

எனக் குறுந்தொகைத் தலைவன், தலைவியிடம் உளம் நெகிழ்ந்து உரைப்பான். சங்கப் பாடல்கள் 2381 ஆகும் அவற்றுள் அகம் பற்றியன 1862. எட்டுத்தொகை நூல்களுள் ஐந்து அகம் பற்றியன. பரிபாடல் அகமும் புறமும் கலந்தமைந்தது. பத்துப்பாட்டுள் ஆற்றுப் படையும், மதுரைக் காஞ்சியும் தவிர்த்த நான்கும் அக நூல்களே. இப்பொருட் பகுப்பு முறை தமிழிலக்கியத்தின் தனிச்சிறப்பாக மிளிர்கின்றது.

திணையும் பிரிவும்:

உளவியற் சிந்தனை தமிழனுக்குப் புதிதன்று. நிலவியல் புகட்கேற்ப மனித மன உணர்வுகளும் மாற்றங்காணும் என்பதை அன்றே உணர்ந்தவன் தமிழன். எனவேதான் நில வடிப்படையில் திணைகளைப்பகுத்து, அவற்றுக்குரிய முதல் கருஉரிப் பொருட்களையும் சுட்டினான். உரிப் பொருளைப் பாடுங்கால் மனித மன வுணர்வுகளைச் சித்திரிக்கும் போக்கு அழகாகவும் சிறப்பாகவும் அமைந்துள்ளன.

உள்ளுறை உவமம்-இறைச்சி:

உள்ளுறையுவமம் தமிழன் கண்ட தனி இலக்கிய உத்தியாகும். இயற்கைக் காட்சிகளை (கருப்பொருள்) வருணிக்கும் புலவன் அவற்றைத் தலைமகனின் செயல்களுக்கு உவமித்துக் கூறுவான் அவ்வாறு உவமித்துக் கூறும்போது, அவ்வருணனைகளின் ஒவ்வொரு கூறும் தலைமகனின் செயல்கள் ஒவ்வொன்றொடும் பொருந்தி யமைந்து உட்பொருள் ஒன்றையும் குறிப்பாகத் தருமாறு கூறி விடுவான். அதுவே உள்ளுறையுவமாகும்.

> "நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
> யாணர் ஊரன்"

எனத் தலைவனைப் பார்த்துத் தோழி கூறுவாள். பூக்கள் மணம் வீசும் கொம்புகளில் புலால் வாடை மிக்க மீன்கள் துள்ளிப் பாய்வதுபோல், பரத்தையைத் தழுவிய தலைவன் கற்பு நிறைந்த தலைவியை நாடி வருகிறான் என்னும் குறிப்புப் பொருள் ஒன்றையும் உள்ளுறுத்து உரைப்பதால் இஃது உள்ளுறையுவமம் ஆயிற்று.

இறைச்சியும் இத்தகைத்தே எனினும் தலைவன் இன்னது செய்கிறான் என உரைக்காமல் இன்னதைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பான் புலப்படுத்தும் வகையில் சிறிய வேறுபாட்டுடன் அமைவதாகும்.

தூய்மை வழக்கு:

மொழித் தூய்மையைப் பேணிக்காத்தவர் பழந் தமிழர். அவர்தம் படைப்புகளில் வடசொற் கலப்பு அருகியே காணப்படும் வடசொற்களை இயன்ற மட்டும் ஒருவித் தமிழ்ப் படுத்தியே வழங்கியுள்ளனர் "உத்தரம்" என்பதை "நாளொடு பெயரிய கோளமை விழுமரம்" என்றே குறிப்பர், நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் அந்தணர் வழிப்பாட்டைத் தமிழ்ப்படுத்தியே உரைப்பதைக் காண் கிறோம். இது போன்ற பல சான்றுகளைக் காட்ட இயலும்.

சொல்லும் நயமும்:

சங்கப் புலவர்கள் சொல்லை எடுத்தாளும் முறையில் தனிக்கலைநயம் இழைந்தோடுகிறது. சுவைக்காகச் சிறி தளவே உணவோடு சேர்க்கப்படும் உப்பைச் "சில்பத உணவு" எனக் குறிப்பர், ஆறு கால்களைக் கொண்ட வண்டு பறக்கக் கூடிய தாகையால் அதனைப் "பல் காற் பறவை" என அழைப்பர். நோக்கினார் கண்ணுள்ளே தம் கைபுனை திறப்பை நிறுத்தும் ஓவிய வல்லார் "கண்ணுள் வினைஞர்" எனப்படுவர்.

முரண் தொடைகளை அமைத்துச் செய்யுள் சுவையை மிகுவிப்பதிலும் சங்கப் புலவர்கள் சிறந்தவராவர். "ஞாழற் சிறியிலைப் பெருஞ்சினை" (ஐங் 145) " பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை" "சிறுசுளைப் பெரும் பழம்" "நெடுஞ்செவிக் குறுமுயல்" "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" என்பன போன்ற முரண்தொடைகளைப் பரக்கக் காண்கிறோம் "கண்தர வந்த காம ஒள்ளெரி" என்பது போன்ற, சிறப்பான சொல்விளக்கங்களையும் சுவைத்தின்புற முடிகிறது.

விரிந்த உள்ளமும் உலகபெருநோக்கும்:

சங்கத் தமிழர் பண்பட்ட நெஞ்சத்தினர். அவர்தம் இலக்கியங்களும் பண்பு நிறைந்த வாழ்வையே வலியுறுத்தின. உலக மக்கள் அனைவரையும் தம் சுற்றத்தராகவே கருதி வாழும் பரந்த மனப்பான்மை அவர்களிடம் காணப்பட்டது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனார் பாடல். கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதியார் "தமக்கென வாழாப் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது என்பர். சிறந்த மனத்தின் சிறந்த உணர்வு விளக்கமே கவிதை என்ற சொல்லின் கூற்றிற்கு இயைந்த பாடல்கள் சங்கப்பாடல்களாகும்.

நாடகச் சாயல்:

சங்க இலக்கியங்களைப் பயில்வார் அவற்றில் நாடகச் சாயல் நிறைந்துள்ளது என்பர். தலைவன், தலைவி, தோழி ஆகியோர் தம் கூற்றுக்களெல்லாம் நாடகத் தனியுரைகளாகவே மிளிர்கின்றன.

"முல்லை வாழியோ முல்லைநீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியர் மாட்டே"
(ஐங் 166)

எனத் தோழி முல்லைக் கொடியையாடு பேசுவாள்.

காலங் கடந்து வாழ்வன:

சங்க இலக்கியங்கள் "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றிய வாய்ச்" சிறந்திலங்குவனவாம். ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னவையாயினும் அவை இன்றும் பசுமையான நினைவுகளைத்தர வல்லன. குடவாயிற் கீரத்

தனார் ஒல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன் மறைந்த போது,

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்னர்
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"
(புறம் 242)

எனப் பாடும் பாடல் உள்ளத்தை உருக வைக்கும்.

"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே"
(குறுந் 49)

என்பன போன்ற பாடல்கள் காலத்தை வென்று வாழும் தன்மையன.

மெய்யுரை நோக்கு:

உண்மை நிகழ்ச்சிகளை ஓவியமாக்கித் தருவதிலேயே சங்கப் புலவர்கள் ஈடுபாடு காட்டினர். வாழ்க்கையின் உள்ளும் புறமும் ஆய்ந்து, உயர்வான கருத்துக்களை வலியுறுத்திய புலவர் பெருமக்கள் உள்ளதை உள்ளபடியே கூறும் தன்மையுடையவராக விளங்கினர். வளமிகுந்த நாட்டையும், செங்கோலாட்சியையும் குறித்துச் சிறப்பித்துப் பாடிய புலவர்கள், வறுமைப் பிடியில் வேளைக் கீரையைக் கொய்துண்ட வாழ்க்கைக் காட்சியையும் காட்டத் தவற வில்லை, "வாழ்தல் வேண்டிப் பொய்கூறேன்; மெய் கூறுவல்" என்ற பெருநெறியைக் கைக்கொண்டு புலவர்கள் வாழ்ந்ததால், பழந்தமிழ் நாட்டின் வரலாறு விளக்கும் காலக் கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன.

இவ்வாறு ஒவ்வொரு தன்மையிலும் தனி சிறந்து விளங்கும் சங்க இலக்கியங்களைப் படைத்துத் தந்த புலவர் பெருமக்கள் தமிழ்த்தாயின் பெருமைக்கு உரமூட்டிய வித்தகர் ஆவர். தமிழர் தம் தவக் குறைவின் காரணமாகப் பல இலக்கியங்கள் கடற்கோளுக்கும் கரையானுக்கும் இரையாகிய போதிலும் நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ்ப் படைப்புகள், தமிழனைத் தலைநிமிர வைத்துள்ள இலக்கியக் கருவூலங்கள் என்பதில் ஐயமில்லை,

2 முச்சங்கம் உண்மையா?

என்றுமுள தென்றமிழ் இசை பெற்றோங்கவும், வளம் பெற்றுச் சிறக்கவும் விழைந்து முனைந்த பாண்டிய மன்னர்கள் சங்கங்கள் நிறுவித் தமிழ் வளர்த்தனர். அவ்வாறு அவர்கள் நிறுவியும், புரந்தும் வந்த சங்கங்கள் மூன்றாம் புலவர் பெருமக்கள் ஒருங்கிருந்து தமிழாயவும், நானில மெங்கும் தமிழ்ப் பெருமை துவங்கவும் இச்சங்கங்கள் துணை புரிந்தன. இறையனராகப் பொருளுரை எனும் களவியலுரையே முச்சங்கங்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகளை விவரித்துரைக்கின்றது.

முதற்சங்கம்: கடற்கோளுக்கு முற்பட்ட தென் மதுரையில் முதற் சங்கம் அமைந்திருந்ததாகக் களவியலுரை கூறுகிறது. இதனைக் காய்சின வழுதி என்ற மன்னவன் நிறுவிட, கடுங்கோன் ஈறாக உள்ள 89 பாண்டிய மன்னர்கள் புரந்து வந்தனர். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலை பெற்றிருந்தது. அகத்தியர், சிவபெருமான், முருகவேள், முரஞ்சியூர் முடி நாகராயர் போன்ற 4449 புலவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினரராய் இருந்தனர். பரிபாடல், முதுநாரை, முதுகுருகு,

களரியாவிரை முதலிய நூல்கள் இவர்களால் பாடப்பட்டன என்றும், அகத்தியம் இலக்கண நூலாக அமைந்திருந்தது என்றும் அறிகிறோம். பாண்டிய மன்னருள் எழுவர் கவியரங் கேறியுள்ளனர்.

இடைச்சங்கம்:

தென்மதுரை கடற்கோளுக்கு இரையான பின், குமரியாறு, பஃறுளியாறு எனும் இரண்டிற் கிடைப்பட்ட கபாடபுரத்தில் இடைச்சங்கம் நிறுவப்பட்டது வெண்டேர்ச் செழியன் என்பான் இதனை நிறுவிட, முடத்திரு மாறன் ஈறாக உள்ள 59 மன்னர் இதனைப் புரந்து வந்தனர். இவருள் ஐவர் கவியரங்கேறினர். இச் சங்கம் 3700 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது. 3700 புலவர்கள் இதில் பாடியுள்ளனர். பெருங்கவி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் முதலிய நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டனவாம். அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூத புராணம், இசை நுணுக்கம் ஆகியன இலக்கண நூல்களாய் அமைந்தி ருந்தன.

கடைச்சங்கம்:

கபாடபுரம் கடலுக்கிரையானபின், தற்போதைய மதுரையில் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. முடத்திரு மாறனால் நிறுவப்பட்ட இச்சங்கத்தை உக்கிரப் பெருவழுதி வரையிலான 49 மன்னர்கள் வளர்த்து வந்தனர். 1850 ஆண்டுகள் வரை இச்சங்கம் நிலைபெற்றிருந்தது. மன்னவர் மூவர் கவியரங்கேறியுள்ளனர். சிறு மேதாவியர், சேந்தம் பூதனார், அறிவுரையரனார், பெருங்குன்றூர்கிழார், இளந் திருமாறன், நல்லந்துவனார், மதுரை மருதனிள நாகனார், நக்கீரர் போன்ற 449 புலவர்கள் பாடல்கள் பாடினர். அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கண நூல்களாய் அமைந்தன. எட்டுத்தொகை, பாட்டு, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்ற நூல்கள் கடைச்சங்க காலத்தவை என அறிகிறோம்.

கருத்து வேறுபாடு:

முச்சங்கம் பற்றிய இறையனா ரகப் பொருளுரையின் கூற்றினை உண்மை எனக் கொள்ளுவாரும், முழுமையும் பொய் யென்று தள்ளுவாரும் உளர். ஒரு சங்கம் மட்டும் இருந்திருக்கலாம் என நம்புவாரும் உண்டு. இம் மூவகைக் கருத்தினரும் தத்தம் கருத்துக்கு அரணாகச் சில சான்று களைத் தருகின்றனர்.

முச்சங்கம் முழுப்பொய்:

இறையனாரின் களவியலுக்கு முசிரியாசிரியர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இறுதியாக உரை கண்டுள்ளார். எனவே உரையாசிரியர்கள் சங்கம் பற்றிய செய்திகளைப் புனைந்துரையாகப் பின்னாளில் சேர்த்திருக்கலாம் எனத் திரு. சீனிவாச அய்யங்கார் சிவராஜ பிள்ளை ஆகியோர் துணிகுவர். அவர்கள் தம் கருத்துக்குச் சான்றாகக் கீழ்க்கண்ட வாதங்களை எழுப்புவர்.

1) சங்கம் என்பது தமிழ்ச் சொல்லன்று. தொல்காப் பியரே சகரக் கிளவியானது அ, ஐ, ஔ எனும் எழுத்துக்க ளோடு கூடி மொழிக்கு முதலாக வருவதில்லை எனக் குறிப் பிடுகின்றார் (தொல் 62)*. எனவே தமிழ் மொழியை வளர்ப் பதற்கு நிறுவிய ஓர் அமைப்புக்குப் பிற மொழிச் சொல்லைக் கொண்ட பெயரைச் சூட்டி வழங்கினர் என்பது பொருந் தாது. புத்த, சமண மத சங்கங்களைப் போல, தமிழகத்திலும் மொழியை வளர்க்க ஓர் அமைப்பு இருந்தது என்னும் கருத்தை நிலை நிறுத்தவே இத்தகைய பொய்க் கதையைப் புனைந்துரைத்துள்ளனர்.

2) சங்க இலக்கியங்கள் சங்கம் பற்றி எதுவுமே கூறவில்லை.

---

*"சகரக் கிளவியும் அவற்றோரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே"

3) தமிழர்கள் கடல் கொண்ட நாடுகளையும் வேளிர் பரம்பரையையும் 49 என்ற எண்ணால் குறிக்கின்றனர். அது போன்றே சங்கப் புலவர்களின் எண்ணிக்கையையும் 49 எனக் குறித்துள்ளனர். இது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. வடமொழி எழுத்துக்கள் 49 என்பது போல, சங்கப் புலவர் களும் 49 பேர் எனக் குறித்திருக்கலாம். முடி நாகனார், மார்க்கண்டேயனார், கோதமனார் ஆகிய புலவர்கள் மூன்று சங்கத்திலும் இருந்தனர் என்பதை நம்ப முடியவில்லை.

4) பண்டைத் தமிழகத்தில் பல்குலப் பெருமக்களும் கவிபாடும் திறம் மிக்கவராய் இருந்திருக்க, களவியலுரை அந்தணர் பெயரையே குறிப்பிடுவதிலிருந்து ஆரிய ஆதிக் கத்தின் விளைவாகவே சங்கம் பற்றிய கருத்து எழுந்திருக்கும் எனக் கருத இடமுள்ளது.

5) போரும் பூசலும் கொண்டு மன்னவர்கள் ஆளுகை யெய்த அக்காலத்தில் பாண்டிய மன்னர்கள் மட்டும் தொடர்ந்து ஆட்சி புரிந்தனர் என்ற செய்தியும் நம்ப முடியாததாகும்.

6) முதற் சங்கத்தில் அகத்தியம் இலக்கண நூலாக அமைந்திருந்த தெனின், அதற்கு முன்னர் எழுந்த இலக்கியங் களைக் குறித்துக் களவியலுரை ஏன் பேசவில்லை?

7) சிவன், முருகன், குபேரன் போன்ற கடவுளர்கள் உறுப்பினர்களாய் அமைந்து மொழியாய்ந்தனர் எனும் செய்தி கற்பனையின் பாற்பட்டதே. இறைவனையும் மொழி யையும் இணைத்துப் பெருமை பகரும் முயற்சியாகவே களவியலுரை தோன்றிய கதையைப் பரப்பியுள்ளனர்,

8) 89 அரசர்கள் 3700 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதும், 59 அரசர்கள் 4440 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதும் 49 அரசர்கள் 1850 ஆண்டுகள் வாழ்ந்தார்கள்

என்பதும் புனைந்துரையே ஆகும். மேலும் முதற்சங்கத்தில் 4449 புலவர்களும்,இரண்டாம் சங்கத்தில் 1700 புலவர்களும் இருந்தனர் என்பதையும் நம்பமுடியவிலிலை.

ஒரு சங்கம் உண்மை:

ஒரு சங்கம் மட்டும் இருந்திருக்கலாம் எனுங் கருத்துடையோர் கீழ்க்கண்ட வாதங்களை எழுப்புவர்.

1) கடைச் சங்கத்தில் பாண்டிய மன்னர் மூவர் கவியரங்கேறியதாகக் களவியலுரை கூறுகிறது. ஆனால் ஒன்பது பாண்டிய மன்னர்களின் பாக்கள் நமக்குக் கிடைத்துள்ளதேன்? இது முரண்பாடாகாதா?

2) தொல்காப்பியம் தவிர்த்து பிற முதற்சங்க நூலோ, கடைச்சங்க நூலோ நமக்குக் கிடைக்கவில்லை.

3) பல்வேறு காலத்தில் வாழ்ந்த வடமொழிப் புலவர்களைப் போசரராசன் காலத்தில் வாழ்ந்ததாகக் குறிப்பிடுவது போலவே, பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர்களை ஒத்த காலத்தில் வாழ்ந்தவர்களாகக் களவியலுரை குறிப்பிடுகிறது. எனவே ஒரு சங்கம் மட்டும் இருந்திருக்கலாம் என ஒரு சாரர் முடிவிடுவர்.

4) நீலகண்ட சாஸ்திரி, வையாபுரிப்பிள்ளை V. R. இராமச்சந்திர தீட்சிதர் ஆகியோர் முதலிரு சங்கங்கள் தோன்றியிருக்கவே முடியாது எனும் கருத்தினர் ஆவர். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழுக்கு வரிவடிவம் உண்டாயிற்று என்றும் அதற்கு முந்திய காலமாகிய வரி வடிவமே இல்லாத காலத்தில் தமிழ் மொழியை வளர்த்திட சங்கம் அமைத்தனர் எனுங்கூற்று பொருந்தாது என்றும் அவர்கள் வாதிடுவர்.

5) கி. மு. ஆறாம் நூற்றாண்டிற்கும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமே சங்க காலமாகும் எனுங் கருத்து கொண்ட இவர்கள், கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் வேற்றவரான களப்பிரர் ஆட்சி நிறுவப்பட்டு விட்டதால், அதற்குப் பின்னர் சங்கம் இருந்ததாகக் கூற முடியாது என உரைப்பர்.

முச்சங்கம் உண்மையே:

முச்சங்கம் நிலை பெற்றிருந்த செய்தி உண்மையே என வாதிடுவோர் அதற்குச் சான்றாக இலக்கியச் சான்றுகள் உரையாசிரியர் கூற்றுக்கள், மேனாட்டினர் கருத்துரைகள், செப்பேட்டுச் செய்திகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுவர்.

அ. இலக்கியச் சான்றுகள்:

சங்க காலத்துத் தோன்றிய நூல்களில் சங்கம் பற்றிய செய்திகள் மலிந்து கிடக்கின்றன. தொல்காப்பிய பாயிரத்தில்,

"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்துத் தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றி" எனக் குறிப் பிடப்பட்டுள்ளது, மதுரைக் காஞ்சியில்,

'தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்"

எனக் குறிப்பிடப்படுகிறது"தமிழ் வையைத் தண்ணம் புனல்" என்பது பாரிபாடல் ஆகும். "தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை" என்ற சிறு பாணாற்றுப் படை வரியும் நோக்கத்தக்கது. சிலப்பதிகாரம், "புலவர் செந்நூல் பெருக்கிய நிவப்பிற்" எனக் குறிப்பிடும்.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக வென் நிலவரை''
(புறம் 72)

எனும் புறநானூற்றுப் பாடலும் சிந்தனைக்குரியது.

"தென் தமிழ் மதுரை" என மணிமேகலையும் கூறும். இவ்வாறு முற்கால இலக்கியங்களில் சங்கம் பற்றிய செய்தி அறியக் கிடக்கின்றது.

பிற்காலத்துப் புலவர்களும் சங்கம் பற்றிய செய்தியை எடுத்துரைப்பதைக் காண்கிறோம்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்
கிழி தருமிக் கருளினோன் காண்" எனத்

திருநாவுக்கரசரும்,

"கூடலில் ஆய்ந்த ண்டீந் தமிழ்"

என மாணிக்கவாசகரும்

"தென் தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்"

எனக் கம்பநாட்டாழ்வாரும்,

"தலைச் சங்கப் புலவனார் தம்முன்"

எனச் சேக்கிழாரும்,

"சங்கத் தமிழ் மூன்றந்தா"

என ஔவையாரும், சங்கம் தொடர்பான செய்திகளைப் பேசுவர்.

ஆ, உரையாசிரியர் கூற்று:

களவியலுரையில் உண்மைச் செய்தி இடம் பெற வில்லை யெனில், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் பேராசிரியர் போன்ற உரையாசிரியர் தம் உரையில் அச்

செய்திகளைக் கூறியிருக்கமாட்டார். சங்கத்தைக் குறிப்பதற்குக் கழகம், புணர் கூட்டு, அவையம், மன்றம் போன்ற சொற்கள் இருந்த போதிலும், சங்கம் என்ற சொல் பெரு வழக்கானதால், அதுவே நிலை பெற்றிருந்திருக்கக் கூடும்.

இ. மேனாட்டறிஞர் கூற்றும் பிறநாட்டு இலக்கியச் சான்றும்:

கி பி, எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாட்டு வானநூல் வல்லாரான தாலமி, பிளினி போன்றோர் சங்கம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றனர். இலங்கை வரலாற்று நூல்களான 'மகா வமிசம்', இராசவளி போன்ற நூல்கள் வாயிலாகவும் சங்கம் பற்றிய செய்தியை அறிய முடிகிறது வான்மீகி இராமாயணத்தில் இடைச் சங்கமிருந்த கபாடபுரம் பற்றிய செய்தி காணக் கிடைக்கிறது. சீன வரலாற்றில் பாண்டிய மன்னர் நூலாராய்ச்சி செய்து வந்த செய்தி பேசப்படுகிறது.

ஈ. செப்பேட்டுச் செய்தி:

சின்ன மனூர்ச் செப்பேடு மற்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

"மாபாரதம் தமிழ்ப் படுத்தும்
மதுராபுரிச் சங்சம் வைத்தும்'' என்பது

சின்ன மனூர்ச் செப்பேட்டுச் செய்தியாகும்.

துணிபு:

பாண்டிய நாடு கடற்கோளால் அழிந்த செய்தியைப் பழந்தமிழ் இலக்கியங்கள் சிலவிடங்களில் சுட்டும். கலித் தொகையில்,

'மலிதிரை ஊர்ந்து தன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு
இடம்படப்
புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர்
கெண்டை

வலியினால் வணக்கிய வாடாச் சீர்த் தென்னவன்''
என முல்லைக் கலியும் கடற்கோள் பற்றிய செய்தியைப் பேசும், நினைப்பிற் கெட்டா நெடுங் காலத்திற்கு முன்பே தோன்றிச் சிறந்த அருமொழியின் இலக்கியங்கள் நெடிய வரலாறு கொண்டனவாய் இருத்தல் வேண்டும். தாளும் கோலும் அச்சுப் பொறியுமற்ற அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பேணிக் காக்கும் வசதியின்மையால் அவை அழிந்தொழிந்திருக்கக் கூடும், எனினும் செவிவழிக் கேட்டு ணர்ந்து இன்புற்று மயங்கிய பாடல்களின் தாக்கமாகவே இன்று நமக்குக் கிடைத்துள்ள செப்பமும் சீர்மையும் மிக்க சங்கப் பாடல்களை நாம் பெற முடிந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழுக்கு வரிவடிவம் உண்டா யிற்று எனுங் கூற்றும் பொருந்தாத கூற்றாகும் ஏனெனில் மிகக்குறுகிய காலத்தில் செப்பமிகுந்த இலக்கணமும், வளமிகுந்த இலக்கியங்களும் தோன்றிடமுடியாது. அகத்தியம் எனும் இலக்கண நூல் பற்றிக் கூறும் களவியலுரை, அதற்கு முந்திய இலக்கியங்களைப் பற்றிப் பேசவில்லை என்பதால், அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகக் கூறுவதே கட்டுக்கதை என முடிவிடுவதும் சரியல்ல. களவியலுரை என்பது நக்கீரர் முதல் நீலகண்டனார் ஈறாக ஒன்பதின் மர்க்குச் செவிவழிச் செய்தியாகவே சொல்லப்பட்டு வந்த தாகும். எனவே இதில் மிகையும், குறையும் தோன்றியிருக் கலாம். எனினும் மையக் கருத்தாகிய முச்சங்கம் பற்றிய செய்தி ''உண்மையின் தேய்ந்தபகுதி'' எனக் கொள்வதே பொருந்தும். சதாசிவப் பண்டாரத்தார் கூறுவது போன்று, முதற்சங்கமும் இடைச்சங்கமும் கடற்கோளுக்கு இரையாகிட மூன்றாம் சங்கமோ கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய களப்பிரர் ஆட்சியால் பொன்றி யொழிந்தது என முடிவிடல் பொருத்தமானதேயாம்,

3. எட்டுத் தொகை நூல்கள்

சங்கப் புலவர் பல்லோர் பாடிய பாடல்களைத் தொகுத்துப் போற்றிச் சிறப்பிக்கும் எண்ணங் கொண்ட மன்னவர்கள் தமிழ்த்தாயின் வளமைக்கு அரண் செய்த பெருமைக் குரியவராவர். அவ்வாறு அவர்கள் தொகுத்துத் தந்த நூல்கள் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டு மாகும். எட்டு வகையாகத் தொகுக்கப்பட்ட நூல்களே எட்டுத் தொகையாகும். ஒவ்வொரு தொகை நூலிலும் பலர் பாடிய பாடல்கள் உள்ளன.

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியொடு அகம் புறமென்று
இத் திறத்த எட்டுத் தொகை"

எனும் வெண்பாவால் எட்டுத்தொகை நூல்கள் பட்டிய லிட்டுக் காட்டப் பெறும். இவற்றுள் ஐந்து தொகை நூல்கள் அகம் பற்றியனவாம். புறநானூறும், பதிற்றுப்பத்தும் புறம் பற்றியன. பரிபாடல் மட்டும் அகமும் புறமும் கலந்தமைந்த தாகும்.

1. அகநூல்கள் ஐந்து:

அ. குறுந்தொகை:

மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் உடைய நூல் ஐங்குறு நூறாகும். திணைக்கு நூறு பாடல்களாக அகனைந்து திணைகளையும் ஐந்நூறு குறும்பாக்களில் பாடி யுள்ள நூலின் தொகுதி என்பதால், இத்தொகுப்பு ஐங்குறு நூறு என வழங்கப்பட்டது, இந்நூலைத் **தொகுத்தவர்** புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். **தொகுப்பித்தவன்**

யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை. இந் நூலில் ஒவ்வொரு திணையும் பத்துப் பிரிவுகளாகப் பகுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் பப்பத்துப் பாடல்கள் உண்டு. ஒவ்வொரு பிரிவும் ஒரேயொரு செய்தியையே வலி யுறுத்தி உரைப்பதாகும். பொருட் மாட்சி கருதியோ சொல்லாட்சி கருதியோ ஒவ்வொரு பிரிவும் பெயர் பெற்றுள்ள சிறப்பினை இந்நூலில் காண்கிறோம். "பருவங் கண்டு கிழத்தியுரைத்த பத்து" என்ற பிரிவு பொருள் மாட்சி கருதியும், மஞ்ஞைப் பத்து, களவன் பத்து முதலியன சொல் லாட்சி கருதியும் அமைக்கப்பட்ட பெயர்களாம். வேட்கைப் பத்து, அன்னாய்பத்து போன்ற பிரிவுகள் சொல்லாட்சி மற்றும் பொருள் மாட்சி ஆகிய இரண்டையும் கருதி அமைக் கப்பட்ட பெயர்களைக் கொண்டவை. இந்நூலின் திணை வைப்பு முறைக்கேற்ப, ஒவ்வொரு திணையையும் பாடிய புலவர்களைக் கீழ்க்கண்ட பாடல் எடுத்துக் கூறும்.

"மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலன் கருதிய பாலை
ஓதலாந்தை
பனிமுல்லை பேயனே"[1]

சிறப்பு:

அடிகள் குறைவாயினும் முதல், கரு, உரிப் பொருட் களைக் குறைவற உரைக்கும் திறம் வாய்ந்த நூல் ஐங்குறு நூறாகும். உள்ளுறையுவமம் மிகச் சிறப்பாக அமைந்தநூல் இதுவேயாம். பறவைகளையும், விலங்குகளையும் கருப் பொருளாகக் கொண்டு, அகப் பொருட் கருத்தினைக் கூறும் திறம் சான்ற இந்நூலில், விலங்கினங்களின் வாழ்க்கை முறையைக் கூர்ந்து நோக்கியுள்ள பழந்தமிழனின் ஆராய்ச்சிக் கண்ணோட்டம் புலனாகின்றது. திருமணம் வேண்டியும், மழை வேண்டியும் இறை வழிபாடு செய்யும் வழக்கமும், இறந்து பட்ட வீரர்களுக்கு நடுகல் நாடும் வழக் கமும், தந்தையின் பெயரைத் தனயனுக்கு இட்டு வழங்கும் வழக்கமும் பழந்தமிழகத்தில் இருந்தன என்பதையும், மகளிர் காஞ்சி, சிலம்பு மேகலை ஆகிய அணிகளை அணிந்து மகிழ்ந்த செய்தியையும் இந்நூல் தெரிவிக்கும்.

ஆ. குறுந்தொகை:

நான்கடி முதல் எட்டடி வரையுள்ள நானூறு அகப் பாடல்களின் தொகுப்பே, குறுந்தொகையாகும். இதனை 205 புலவர்கள் பாடியுள்ளனர். இதனைத் தொகுப்பித்தவன் பூரிக்கோ. தொகுத்தவர் உப்பூரிகுடிக் கிழார் என்பர். முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரின் உரை உள்ளது. எஞ்சிய 20 பாடல்களுக்கு நாச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார்.

சிறப்பு:

குறும்பாக்கள் எனினும் சீரிய உவமைகள் நிறைந்த அரும்பாக்களின் தொகுப்பே குறுந்தொகை, இயற்பெயர் தெரியாத புலவர்கள் அவர்தம் பாடல் அடிகளாலேயே பெயர் பெற்றுள்ளனர். செம்புலப் பெயனீரார், குப்பைக் கோழியார், காக்கைப் பாடினியார், அணிலாடு முன்றிலார் போன்ற பெயர்கள் அத்தகையனவே.

"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே" (குறுந்49)

போன்ற சிறந்த பாடல்களை இதில் காண்கிறோம்.
ஔவையார் பாடிய,

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஆ அ! ஒல் எனக் கூவுவேன் கொல்?
அலமரல் அசைவளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே"
(குறுந் 28)

எனும் பாடல், காம நோயின் கொடுமைக் காட்பட்ட தலைவியின் அவலத்தை நெஞ்சம் நெகிழச் சித்திரிக்கும். மாங்கனிக்காகப் பெண்ணைக் கொன்ற நன்னனின் கொடிய செயலைத் தம் பெண்ணை இற்செறித்து வைத்த அன்னைக்கு உவமையாகக் கூறித் தமது ஆத்திரத்தைக் கொட்டுவது பரணரின் பாடலாகும்.

"புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று—ஒன்பது களிற்றொடு, அவள்நிறை
பொன் செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ, அன்னை"
(குறுந் 292)

எனும் அப்பாடல் வரலாற்றுப் பின்னணி கொண்டதாகும்.

இ நற்றிணை:

ஒன்பதடிச் சிறுமையும் பன்னீரடிப் பெருமையும் கொண்ட 400 அகவற்பாக்களின் தொகுப்பாய நற்றிணை 175 புலவர்களின் பாடல்களைக் கொண்டது. இதுவே நமக்குச் சிதைவின்றிக் கிடைத்த நூலாகும். இந்நூலைத் **தொகுத்தவர்** தெரியவில்லை. **தொகுப்பித்தவன்** பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.

சிறப்பு:

சேர்ந்தார் உள்ளத்தைச் சிறிதும் புண்படுத்தாப் பண்புடைமையே செல்வம் எனக் கூறப்படும்.

"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பில்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே"

இது போன்றே,

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சுமுண்பர் நனி நாகரிகர்" என

நாகரிகத்திற்கு இலக்கணம் வகுத்துரைக்கும் பெற்றிமையும் போற்றத்தக்கதாகும்.

"விளையாடாய மொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

எனும் பாடல் நெஞ்சம் மறந்தறியக் கூடாத நெகிழ்ச்சி மிக்கதாம்.

ஈ. அகநானூறு

பதின் மூன்றடிச் சிற்றெல்லையும், முப்பத்தோரடிப் பேரல்லையும் கொண்ட நானூறு பாக்களைக் கொண்ட இந் நூல் நெடுந்தொகை எனவும் வழங்கப்பெறும், 1454 புலவர்கள் இதைப் பாடியுள்ளனர். ஒற்றை எண்ணால் முடியும் பாக்களெனின் அவை பாலைத் திணை சார்ந்தன வென்றும், 2, 8, என்ற எண்ணால் முடியுமெனின் குறிஞ்சித் திணை சார்ந்தன வென்றும், 4 என்ற எண்ணால் முடிந்தால் முல்லைத் திணை சார்ந்தன வென்றும், 6 என்ற எண்ணால் முடியுமெனின் மருதத் திணை சார்ந்தன வென்றும், 10 என்ற எண்ணால் முடியுமெனின் நெய்தல் திணை சார்ந்தன வென்றும் அறியும் வகையில் இந்நூலில் பாடல்கள் தொகுக் கப்பட்டுள்ளன. பாலைத் திணை பற்றிய பாக்களே (200) மிகுதி, முதல்120பாடல்களைக் களிற்றியானை நிரை எனவும் 121 முதல் 300 வரையான பாக்களை மணிமிடைப் பவளம் எனவும், 301 முதல் 400 வரையான பாக்களை நித்திலக் கோவை எனவும் பகுத்துள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் உப்பூரி குடி கிழார் மகன் உருத்திரசன்மர். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

சிறப்பு:

உள்ளுறையுவமம், இறைச்சி ஆகியவற்றான் சிறந்த கருத்துக்களைக் கூறும் பாடல்கள் இதில் உண்டு. மூவேந்தர் குறுநில மன்னர், ஆட்டனத்தி ஆதிமந்தி வரலாறு,பிற நாட்டு மன்னவராம் மோரியர், நந்தர் ஆகியோர் பற்றிய செய்திகள் இந்நூலில் அறியக் கிடக்கின்றன. தமிழர்களின் திருமண முறை இரு பாடல்களில் (பா 86, 136) சொல்லப்படுகிறது. கண்ணனது திருவிளையாடல் பற்றிய செய்தியும் உள்ளது. யவனர்களோடு தமிழர் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு

யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்''

என்ற வரிகளான் விளங்கும்.

உ. கலித்தொகை:

எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல் தவிர்த்த பிற நூல்கள் அகவற்பாவில் அமைந்திருக்க, கலித்தொகை கலிப் பாவில் அமைந்துள்ளது. கலிப்பாக்களால்*1. அமைந்த நூல் என்பதால் இது கலித்தொகை எனப்பட்டது. சங்கு திரண் டெழும் ஓசை போல் தழைந்து இன்பம் பயக்கும் ஓசை நயமுடையதே கலிப்பாவாம். இந்நூல் 150 கலிப்பாக்களைக் கொண்டது. 149 பாக்களே நமக்குக் கிடைத்துள. இதில் கைக்கிளை, பெருந்திணைப் பாக்கள் உண்டு. பாண்டிய மன்னர்கள் பற்றிய குறிப்பே இந்நூலில் காணப்படும். இதனைத் தொகுத்தவர் நல்லந்துவனார்.

அமைப்பு:

கலிப்பாவானது தரவு,தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனும் நான்கு அமைப்புகளான் இயலும். ஒவ்வொரு திணையும் தனித்தனிப் புலவர்களால் பாடப்பெற்றுள்ளன.

பாலைக் கலி	—	பெருங்கடுங்கோ
குறிஞ்சித் கலி	—	கபிலர்
மருதக் கலீ	—	இளநாகனார்
முல்லைக் கலி	—	நல்லுருத்திரனார்
நெய்தற் கலி	—	நல்லந்துவனார்

நல்லந்துவனார் எனும் ஒரே புலவரே ஐந்து திணைப் பாடல் களையும் பாடியிருக்க வேண்டும் என வையாபுரிப் பிள்ளை துணிகுவர்.

---

*1. "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல்சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டாயிரு பாங்கினும்
உரியதாகு மென்மனார் புலவர்" எனும்

தொல்காப்பிய நூற்பா அகப்பாடல்கள் மட்டுமே கலிப்பா வாலும், பரிபாடலாலும், பாடப்பெறும் எனக்கூறும்.

தலைவனின் பிரிவைத் தடுப்பதையே முதன்மைக் கருத்தாகக் கொண்டுள்ளது, பாலைக் கலி. தலைவியை மணஞ்செய்து கொள்ளுமாறு தலைவனை வற்புறுத்தும் நோக்கம் கொண்டது, குறிஞ்சிக் கலி. மருதக் கலியோ பரத்தை மாட்டு சென்ற தலைவனோடு ஊடி நிற்கும் தலைவியின் பிணக்குகளைத் தீர்ப்பதாகப் பாடும் பாடல்களைக் கொண்டதாகும். முல்லைக் கலி ஏறு தழுவல் பற்றிக் கூறும். "தென்னவற்கு ஒரு மொழி கொள்க, இவ்வுலகுடன்" எனப் பாண்டிய மன்னனைப் பெருமைப் படுத்திப் பேசுவதையும் இதில் காணலாம். நெய்தற் கலியில் மடலேறல் குறித்தும், பிரிவுத் துயரில் உழந்த தலைவி மாலையொடு புலத்தல் குறித்தும் பேசப்பெறும். பாண்டிய மன்னர்களின் பெருமையும் புகழும் பரக்கப் பேசப்படுவது போல, புராணச் செய்திகளும், இதில் நிரம்ப உள்ளன முருகன், கண்ணன், பலராமன் திருமால் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பாலைக் கலி:

35 பாடல்களைக் கொண்டது பாலை நிலத்தில் வாழ்ந்த ஆறலைக் கள்வர்களின் கொடுமைக் கஞ்சிப் புள்ளினமும் அவ்வழி செல்லத் துணியாது என்பதை மூன்றாம் பாடல் காட்டும். 'புள்ளும் வழங்கா அப் புலம்புகொள் ஆரிடை' தலைவன் பயணம் மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தத் துணியும் தலைவி மற்றும் தோழியின் பாடல்களாகவே இப் பாடல்கள் அமைந்துள்ளன.

"உண்கடன் வழிமொழிந்து இரங்குங்கால் முகனும் தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறு ஆகுதல்
பண்டும் இவ்வுலகத்து இயற்கை; அஃது இன்றும்
புதுவது அன்றே" (பாலை 21)

எனும் பாடல் உலகியல் நடப்பிற்கு ஏற்ற உரைகல்லாக விளங்குகிறது.

குறிஞ்சிக் கலி:

29 பாடல்களைக் கொண்டது. குறிஞ்சிநிலக் காதல் வாழ்வு சிறப்பாகச் சித்திரிக்கப்படுகிறது.

"பொருள் இல்லான் இளமை போல் புல்லென்றாள்" எனத் தலைவனைக் காணாது வாடிய தலைவியின் வாட்டத்துக்குப் பொருளில்லாதவனின் இளமையை உவமையாகக் கூறுவது (குறிஞ்சி 2) சிறப்பானது.

மருதக் கலி:

35 பாடல்களைக் கொண்டது. பரத்தையைத் தலைவி இழித்துப் பேசும்போக்கு நகைச்சுவை நல்குவதாகும். எள்ளற் குறிப்பு இதில் மிகுதி.

முல்லைக் கலி:

17 பாக்களைக் கொண்டது. ஆயர்குலமகளிர் கற்புத் திறமும், இளைஞரின் வீரமும் சிறப்பித்துக் கூறப்படும். எருமைக் கொம்பு தெய்வமாக வணங்கப்பட்ட செய்தி உள்ளது.

"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணங் கூடுதல் இல்இயல் பன்றே" (பாடல்14)

என ஆயர் குல மகளிரின் உறுதிப்பாடு சிறப்பித்தோதப் படுகிறது"

"இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால்
என் நெஞ்சம்
களமாக் கொண்டாய் ஓர் கள்வியை அல்லையோ?'
(பாடல் 8)

"மத்தம் பிணித்த காயிறு போல் நின்னலம்
சுற்றிச் சுழலும் என் நெஞ்சு" (பாடல் 10)

எனத் தலைவன் பேசுவது போன்ற சிறந்த பகுதிகள் இதில் உண்டு. ஏறுகள் சூழ்ந்த தொழுவினை,

"கொடி நறை சூழ்ந்த தொழூஉ
தொழூவினுள் புரிபு புரிபு புக்க பொது வரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு" எனத்

தொடர்ந்து வருணித்துச் செல்லும் திறம் சுவை பயப்பதாகும்.

நெய்தற் கலி:

33 பாடல்களைக் கொண்டது.

"......... - ....காண்தகக்
கனவில் வந்த கானலம் சேர்ப்பன்
நனவில் வருதலும் உண்டு என
அனைவரை நின்றது என் அரும்பெறல் உயிரே"
(பாடல் 11)

எனத் தலைவனைக் கூடுதற்கு முடியும் எனுந் துணிவினால் தன் மனத்துயரை மாற்றிக் கொள்ளும் தலைவியின் நிலை சிறப்பாகக் காட்டப்படுகிறது.

2. புறம் பற்றிய இரண்டு

அ. புறநானூறு:

பொருளானும், பாடல்களின் எண்ணிக்கையானும் பெயர் பெற்ற நூல் இதுவாகும். இத்தகைத்து எனப் பிறருக்கு எடுத்துரைக்கும் இயல்புடையதாகிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைத் தமிழர் புறம் என்றழைத்தனர். புற வாழ்வின் பெருமைகள் உணரப் பெருந்துணைபுரியும் இந் நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய விவரம் தெரியவில்லை.நான்கடி முதல் 40 அடிவரையுள்ள பாடல்கள் இதில் உண்டு. வேறுபட்ட இனம், காலம் சார்ந்தோராகிய 160 புலவர்களின் பாடல்கள் காணப்படுகின்றன. பெண்பாற் புலவர் பதினைந்து பேரும், வேந்தர்கள் பதினான்கு பேரும் பாடல்கள் புனைந்துள்ளனர்,

சிறப்பு:

பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்கள், அரசியல் நெறி, போர் முறை, சமுதாய நிலை, நாகரிக முதிர்ச்சி, கலை வளர்ச்சி ஆகியன பற்றியுணர அருந்துணை புரிவது புறநானூறாகும். பாண்டிய மன்னர் பதினைவர் பற்றியும், சோழ மன்னர் பதினெண்மர் பற்றியும், சேர மன்னர் பதினெண்மர் பற்றியும் குறுநில மன்னர் பலரைப் பற்றியும் குறிப்புகள் உள.

"செறுவர் நோக்கிய கண் தன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பு ஆனாவே"

என நெடுமானஞ்சியைக் குறித்து ஔவையார் பாடிய பாடல் பழந்தமிழ் மன்னரின் வீர உணர்விற்கு விளக்கமாகத் திகழ்கிறது. மான உணர்வு போற்றும் மறத்தமிழ் மன்னரின் சிறப்புக்குச் சேரமான் கணைக் காலிரும் பொறையின் பாடல் சிறந்த விளக்கமாகும். பழந்தமிழர் பயன்படுத்தி வந்த ஆடை அணிகல வகைகள்; ஆயுத வகை, உணவு வகை ஆகியன பற்றிய செய்திகளும் இதில் உள. செம்புற்று ஈயலை மோரொடு கூட்டி உண்ணும் வழக்கம் இருந்தததைக் (புறம் 119) கபிலர் பாடுகிறார்.

"யவனர் நன் கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்து ஏந்தி" (புலம்56)

எனும் நக்கீரனார் பாடல் கிரேக்க நாட்டிலிருந்து மது இறக்குமதி செய்யப்பட்டதைத் தெரிவிக்கும்.

"இரு முந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத்து அகலமும்
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றாங்கு
அவை அளந்து அறியினும் அளத்தற் கரியை"
(புறம் 20)

எனச் சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையைக் குறுங் கோழியூர் கிழார் போற்றும் பாடல், பண்டைத் தமிழரின் அறிவியல் ஆராய்ச்சி நோக்கிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக

விளங்குகிறது. நடுகல்லுக்கு மதுவூற்றி வணங்கும் வழக்கமும், கைம்மை நோன்பேற்கும் வழக்கமும், உடன்கட்டை ஏறும் வழக்கமும் பழந்தமிழகத்தில் உண்டென்பதை அறிய முடிகிறது. பழந்தமிழ்ப் புலவர்களின் தன்மானத்திற்கு விளக்கமாகத் திகழும் பாடல்களும் இதில் உண்டு.

''மிகப்பேர் எவ்வம் உறினும் எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்''
(புறம் 197)

எனும் பாடலும்,

''காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசில் அல்லேன்'' (புறம் 208) எனும்

பெருஞ்சித்திரனார் பாடலும் நோக்கத்தக்கன.

''செய்யா கூறிக் கிளத்தல்
எய்தாகின்று எம் சிறுநாவே'' (புறம் 148)

எனும் வன்பரணரின் பாடல் புலவர்களின் நேர்மைத் திறத்திற்குச் சான்றாகும் ''இளம்பிடி ஒரு சூல் பத்து ஈனுமோ? போன்ற சிறந்த தொடர் அமைப்புகளையும் இதில் காண முடிகிறது.

''ஞாயிறு அனையை நின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம் மனோர்க்கே'' (புறம் 59)

''மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால் நரைக் கூந்தல் முதியோர்'' (புறம் 277)

'' கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு உண் நீரினும் மீட்டற்கு அரிது'' (புறம் 21)

''நீட்டினும் நீட்டாதாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்தது அது பொய்யாகாதே'' (புறம் 101)

என எளிய உவமைகளை எடுத்தாண்டு, சிறந்த முறையில் கருத்துக்களைச் சொல்லும் பழந்தமிழ்ப் புலவர்களின் திறம் போற்றக் கூடியது.

ஆ. பதிற்றுப் பத்து:

சேர மன்னர் பதின்மரைப் புலவர் பதின்மர் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப் பத்தாம். ஒவ்வொரு புலவருமே ஒவ்வொரு சேரமன்னர் குறித்துப் பத்துப் பாடல்கள் வீதம் பாடியுள்ளனர். முதற் பத்தும், இறுதிப் பத்தும் அழிய, இடைப்பட்ட எட்டுப் பத்துக்கள் மட்டுமே கிடைத்துள. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் ஒரு பதிகம் உள்ளது. அவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டன வாகலாம் எனக் கருதுவர். இந்நூலைத் தொகுத்தார்,தொகுப்பித்தார் தெரியவில்லை,

சிறப்பு:

சேர மன்னர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை இந்நூலின் வாயிலாக அறிகிறோம். வழக்கிழந்த பல தமிழ்ச் சொற்களை இதில் காண்கிறோம். ஒவ்வொரு பாட்டிற்கும் துறை, வண்ணம், தூக்கு ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. பழந் தமிழகத்தில் இசைத்தமிழ் வளம் பெற்றிருந்தது என்பதற்கு இந்நூல் சிறந்த சான்றாகும்.

3. அகமும் புறமும் கலந்த நூல்:

பரிபாடல்:

“பரிபாடலென்பது பரிந்து வருவது; அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவாலும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும்” என நச்சினார்க்கினியர் உரைப்பர். நால் வகைப் பாக்கட்கும், பல்வகை அடிகட்கும் பரிந்து இடங் கொடுக்கும் பாட்டே பரிபாடல். இதன் சிற்றெல்லை 25 அடியாம். பேரெல்லை 400 அடிகள். நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் களில் நூற்று நாற்பது அடிகளுக்கு மேல் இல்லை, எனவே இவற்றுக்கு முன் பல பரிபாடல்கள் தோன்றியிருக்கக் கூடும் எனக் கருதலாம்.

எழுப்பது பரிபாடல்களின் தொகுப்பாக அமைவதே பரிபாடல் நூலாகும். ஆனால் நமக்கு 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள. இதனைப் பதின்மூவர் பாடியுளர்.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொரு பாட்டு காடு காட் கொன்று- மருவினிய
வையை யிருபத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்'' எனும் பாடல்

எழுபது பரிபாடல் உண்டென்பதைச் சாற்றும்,

"நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின் தண்மையும் சாயலும் திங்களுள
நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள
நின் தோற்றமும் அகலமும் நீரிலுள
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்துள
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள
அதனால் இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏம மார்ந்த நிற் பிரிந்து
மேவல் சான்றன எல்லாம்"

எனத் திருமாலைப் போற்றுவது சிறப்பாக உள்ளது,

4. பத்துப் பாட்டு

சங்கத் தொகை நூல்களுள் பத்துப் பாட்டும் ஒன்றாம் பத்து நெடும் பாட்டுக்கள் கொண்ட நூல் தொகுதியே பத்துப் பாட்டு. ஒவ்வொரு பாட்டும் தனி நூலென்றே சொல்லப்படும். இளம்பூரணர் உரையில் பத்துப் பாட்டு எனக் குறிக்கப்படுதலால் உரையாசிரியர் காலத்திற்கு முன்பே இந்நூல் தொகுக்கப்பட்டமை புலனாகும். இவற்

றைப் பாடிய புலவர் எண்மராவர். முருகாற்றுப் படையையும் நெடுநல்வாடையையும் நக்கீரர் ஒருவரே பாடியுள்ளார். பெரும் பாணாற்றுப் படைடையும் பட்டினப் பாலையையும் உருத்திரங் கண்ணனார் எனும் ஒருவரே பாடியுள்ளார். பிற ஆறு பாட்டுக்களையும் அறுவர் பாடியுள்ளனர்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகுவள மதுரைக் காஞ்சி-மருவினிய
கோல நெடுநல் வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத் தொடும் பத்து"

எனும் வெண்பா பத்துப் பாட்டு நூல்களைத் தொகுத்துரைக்கும். இவற்றுள் மிகச் சிறியது முல்லைப் பாட்டு (103 அடிகள்) ஆகும். மிகப் பெரிய நூல் மதுரைக் காஞ்சி (782 அடிகள்) ஆகும். அகவலோடு வஞ்சியும் சில பாடல் களில் காணப்படுகிறது.

இயற்கையைச் செவ்விய முறையில் படியெடுத்துத் தந்த புலவர்தம் ஆற்றல் அளப்பரிதாம். உள்ளம் பிணிக்கும் உவமையும், கருத்தினிக்கும் கற்பனை நலமும், பொருள் பொதிந்த சொல்லாட்சித் திறமும், இயற்கைக் காட்சியின் எழிலார்ந்த ஓவியமும் பத்துப் பாட்டின் சிறப்புக்கு முத்தாய்ப்பு வைக்கின்றன. பத்துப் பாட்டில் மனம் பறி கொடுத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும்,

"பத்துப் பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில்
கற்பனையே"

என விதந்தோதுகின்றார். உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் பத்துப் பாட்டு முழுமைக்கும் உரை கண்டுள்ளார்.

ஆற்றுப்படை நூல்கள்:

பத்துப் பாட்டுள் அமைந்த ஆற்றுப்படை நூல்கள் ஐந்து. அவற்றுள் திருமுருகாற்றுப் படை மட்டும் சமயத்

தொடர்பானது. ஆற்றுப் படை எனின் வழிப்படுத்துவது என்பதே பொருள். பரிசில் பெற்ற பாணர் முதலியோர் தமக்குப் பரிசில் நல்கிய வள்ளலின் பால் பரிசில் பெறக் கருதிய தம் இனத்தவரை ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப் படையாம்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

எனும் நூற்பாவில் கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய நால்வரையும் ஆற்றுப்படுத்தல் உண்டெனத் தொல் காப்பியர் குறிப்பிடுவார்.

அ. திருமுருகாற்றுப் படை:

மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரர் இயற்றியது, 317 அடிகளைக் கொண்டது. இதனைப் புலவராற்றுப்படை எனவும் வழங்குவர். முருகனின் அருள் பெற்ற புலவன் ஒருவன் அவ்வருளைப் பெறவிழையும் புலவன் ஒருவனை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதால் இது புலவராற்றுப்படை ஆகும் என்பர்.

ஆறுபடை வீடுகளைக் கொண்ட முருகன் குறிஞ்சி நிலக் கடவுளாதலால், வளம் மிகுந்த மலை ஒன்றின் பெருமை பேசி அத்தகு மலைக்கு உரிமை கொண்டாடும் முருகன் அறுவேறு திருத்தலங்களில் எழுந்தருளியுள்ள பான் மையைப், பத்தி நயஞ் சிறக்கப் பகர்ந்து செல்கிறார், நக்கீரர் என முனைவர் இராசமாணிக்கனார் ஆய்ந்துரைப்பார்.

முருகனுக்குரிய திருப்பெயர்கள், மலர்கள், கொடிகள், வாகனங்கள் அனைத்தும் தொகுத்துரைக்கப் பட்டுள்ள இந் நூலில் பல்வேறு தெய்வங்கள் பற்றிய செய்திகளும் கூறப்படு கின்றன. பத்திச்சுவை பெருக்கெடுப்பதோடு இயற்கை

எழிற் காட்சிகளும் விளக்கம் பெறுகின்றன. இதன் பெருமை கருதி இதனைப் பதினோராந் திருமுறையில் சேர்த்துள்ளனர்.

ஆ. பெருநராற்றுப் படை:

புகழ்ந்து பாடுவோர் பொருநர் ஆவர். பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் பரிசில் பெறக் கருதிய வறிய பொருநன் ஒருவனைக் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப் படுத்துவதாக 248 அடிகளில் இந்நூல் அமைந்துள்ளது. பாடியவர் முடத்தாமக் கண்ணியார்.

இந்நூலில் சோணாட்டின் வளமையும் காவிரியின் சிறப்பும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கலம் வரை நெல் விளைந்த செய்தியை அறிகிறோம். கரிகாலனின் பிறப்பு, கொடைச் சிறப்பு, படைமாட்சி வெண்ணிப்போர் நிகழ்ச்சி, நரை முடித்து முறை செய்த நேர்த்தி ஆகியன பேசப்படுகின்றன. பரிசில் நல்குவதோடு ஏழடிநடந்து வந்து வழியனுப்பும் கரிகாலனின் ஒட்பமும் அறியக் கிடக்கின்றது.

ஆசிரியர் கையாளும் உவமைகள் அருமையானவை. பாலை யாழினை மணக்கோலம் புனைந்த மங்கைக்கு உவமித்துக் கூறுகிறார்.

"மயிர்க்குறை கருவி மாண் கடையன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காது"

எனக் கத்தரிக்கோலின் கைப்பிடியை விறலின் காதிற்கு உவமானமாகக் கூறுவார்.

"வருந்து நாய் நாவின் பொருந்தகு சீறடி"

என அவளின் காலுக்கு நாயின் நாவினை உவமையாகக் கூறுகிறார் பொருநனின் வறுமைக் கோலத்தைப் படம் பிடிக்கும் புலவர்,

"ஈரும் பேனும் இருந்து இறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர்"

என எடுத்துக்காட்டுவார். அவனுக்குக் கரிகாலன் ஊனுணவு நல்கிப், பசி தீர்த்துக் கொட்டைக் கரையப் பட்டுடையும், அரவுரியன்ன அறுவையும் வழங்கிச் சிறப்பிக்கிறான். மூவேந்தரின் ஒற்றுமை விழைந்த புலவரின் உயர்ந்த உள்ளத்தை இந்நூலில் கண்டு மகிழ முடிகிறது. பொருநர்தம் ஆடல் பாடல் இசை மூன்றும் சேர்ந்து இன்பம் பயக்கும் தன்மையை மூவேந்தரும் முரணின்றிப் பகை விலக்கி ஒருங்கிருந்தாளும் தன்மைக்கு உவமையாகக் கூறும் ஆசிரியரின் உயர்ந்த உள்ளம் போற்றித் தொழத்தக்கது.

இ. சிறுபாணாற்றுப் படை:

சீறியாழ் கொண்ட பாணர் சிறுபாணர் ஆவர். பரிசில் பெற்ற சிறு பாணன் பரிசில் பெறக் கருதிய மற்றொரு பாணனை ஒய்மா நாட்டு நல்லியக் கோடன்பால் ஆற்றுப் படுத்துவதாக இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது இஃது 269 அடிகளைக் கொண்டது.

"பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலவன்" (203-206)

என நல்லியக் கோடனின் வண்மையைப் பாடுகிறார், புலவர் கடையெழு வள்ளல்களின் கொடைச் சிறப்பை விவரிக்கும் புலவர், அவ்வெழுவரின் ஈகைத் திறமும் நல்லியக் கோடனிடம் ஒருங்கே அமைந்திருந்ததாகப் புகழுகிறார்.

பாணன் யாழினைச் சீர்ப்படுத்தும் காட்சி குரங்கு பிடித்த பாம்பின் செயலைப் புலவர்க்கு நினைவுபடுத்துகிறது.

"பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்குதிவவு"

என்பது அப்பகுதி. விறலியின் அழகை வருணிக்கும் திறமும், பாணன் வீட்டு வறுமைக் காட்சியைப் படமாக்கும் முறையும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

ஈ. பெரும் பாணாற்றுப் படை:

பாணாறு எனவும் இது வழங்கப்பெறும். பேரியாழ் மீட்டும் பாணனை ஆற்றுப் படுத்துவதால் பெரும்பாணாற்றுப்படையாயிற்று. இது 500 அடிகளைக் கொண்டது. அடியளவு பற்றியே பெரும்பாணாற்றுப் படை என வழங்கிற்று என்போர் பெரிய திருமடல், சிறிய திருமடல் எனும் வழக்கைச் சான்று காட்டுவர். பரிசில் பெற்ற பாணன் மற்றொரு பாணனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் இதனைப் பாடியுள்ளார்.

முதுவேனிற் பருவம், பேரியாழ் வருணனை, பெரும் பாணனின் வறுமை, இளந்திரையனின், ஏற்றம் அவனது காஞ்சிமாநகர்க்குச் செல்லும் வழிச்சிறப்பு, பல்வேறினத்தவரின் வாழ்க்கை முறைகள், வளமைப் பகுதிகள், திரையனின் வீரம், அரசியல் மாண்பு, ஈகைப் பண்பு ஆகியன விவரிக்கப் படுகின்றன.

"மனையுறை கோழியொடு ஞமலிதுன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறை காப்பாளர் உறைபதி" (299-301)

என அந்தணர் வாழும் பகுதியைக் குறிப்பார், ஆசிரியர்.

கலங்கரை விளக்கம் இருந்த செய்தி, குதிரைகளும் பிற பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்ட நிலை, பொன்னுரைத்து மாற்றுப் பார்க்கும் உண்மை இதன்வழி தெரிகிறது.

திரையனின் காஞ்சி மாநகர்க்குப் பலாப் பழம் உவமை யாகக் கூறப்படுகிறது. அவனது பழியற்ற சிறப்பிற்கு வலம் புரிச் சங்கின் சிறப்பு உவமிக்கப்படுகிறது. சிங்கத்தின் தாக்கு தலுக்கு அஞ்சிப் பிளிறும் யானைகளின் பிளிற்றொலி கரும் பாலைகளின் ஆரவாரத்திற்கு உவமையாகச் சொல்லப்படு கிறது. பன்றியின் கொம்புக்கு அகத்திப் பூவையும், வரகரிசிச் சோற்றுக்குப் பூளைப் பூவையும் உவமைகளாகக் கூறுவார், புலவர்.

உ. முல்லைப் பாட்டு:

பிரிந்து சென்றதலைவனை நினைந்து தலைவி ஆற்றி யிருப்பதான முல்லைத் திணைக்குரிய ஒழுக்கத்தைச் சிறப் பித்துப்பாடும் இந்நூல் அகநூலாகும். பாடியவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வணிகனார் மகன் நப்பூதனார் ஆவர். இது 103 அடிகளைக் கொண்டதாகும்.

கார் காலத்தில் மீள்வேன் என்றுரைத்த தலைவனைக் காணாது, "ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து" கிடக்கிறாள், தலைவி. விரிச்சி கேட்ட முது பெண்டிர் தலை வியை ஆற்றுகின்றனர். இந்நிலையில் திரும்பி வரும் தலை வனின் வருகையைத் தேரொலி முன்னுரைக்கிறது; தலைவி யும் துன்பம் நீங்கி, இன்பம் காண்கிறாள் என்பதே இதன் கருத்து.

முதலில் கார் கால வருணனையும், பின்னர் போர் வயின் சென்ற அரசனின் பாசறை அமைப்பும், இறுதியில் முல்லை நிலக் காட்சிகளும் காணப்படுகின்றன. வேந்தன் கடமையுணர்வோடு பாசறையில் தங்கியிருந்த நிலையும், ஏழடுக்கு மாடத்தில் தலைவி வருந்தித் துடித்த காட்சியும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. கார் காலக் காட்சியும் கவினுறச் சித்திரிக்கப்படுகிறது.

கைவினைஞர்களைப் பிற நாடுகளில் இருந்து வருவித்துக் கொண்டமை, ஊமையரான மிலேச்சரைக் கொண்டு புறவறையைக் காத்தமை, 'ஆது அப்பூது' போன்ற வடசொற்களால் யானையைப் பழக்கியமை, நாழிகை வட்டி வைக் கையாண்டமை ஆகிய செய்திகளும் இந்நூலில் உண்டு.

௰. மதுரைக் காஞ்சி:

காஞ்சி என்பது புறத்திணைகளில் ஒன்று. வீடு பேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைக் கூறி வழிப்படுத் தலே இத்திணையின் பொருள். "உட்காது எதிரூன்றல் காஞ்சி" என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

பகைவர்களை வென்று வாழ்வதையே இன்பமாகக் கருதிய பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடு பேற்றிற் குரிய அறநெறியை அறிவுறுத்த மாங்குடி மருதனார் பாடியதே மதுரைக் காஞ்சி. இது 782 அடிகளைக் கொண்டது. காஞ்சித் திணையை எடுத்துரைக்கும் போது மதுரை மாநகரின் சிறப்புக்களையும் விரித்துரைப்பதால் இது மதுரைக் காஞ்சி எனப்பட்டது. மதுரையில் அரசனுக்குக் கூறிய காஞ்சி என்று விரித்தும் பொருள் கூறுவர். மதுரையின் வரலாறு கூறும் பெற்றி நோக்கிக் 'கூடற்றமிழ்' எனவும் இது வழங்கப்பெறும். அக்கால மதுரை பற்றிய வரலாற்றுத் தொகுப்பாகத் திகழ்கிறது இந்நூல்.

பாண்டியனின் பெருமை பகரும்போது பகைவர் அரணங்களை இல்லாதாக்கிய வீரம், பணிந்தோர்க்கு அருளி, திமிர்ந்தோர்க்குத் தீமையிழைத்த பான்மை, இரு பெரு வேந்தரும், குறுநில மன்னர் ஐவரும் சேர்ந்து பொருத போதினும், தலையாலங்கானத்தில் அவர்களை வென்ற மாட்சி, பகைவரிடம் கவர்ந்த பொருட்களைப் பகுத்து வழங்கிய தண்மை ஆகியன கூறப்படுகின்றன. வையை ஆறு, அரண்மனை மதில், அகழி, ஐவகை நிலங்களின் காட்சி ஆகியன விளக்கப்படுகின்றன. அல்லும் பகலுமாய ஒரு நாள் நிகழ்ச்சி சுவைபடச் சித்திரிக்கப்படுகிறது.

எ. நெடுநல் வாடை:

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயர் மகனார் நக்கீரர் பாடியுள்ளார். 188 அடிகளைக் கொண்டது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் வருத்தம் தீர, தலைவன் விரைவில் பகைமுடித்துத் திரும்பவேண்டும் எனக் கொற்றவையை வழிபடுவாரின் கூற்றாக அமைந்ததே இந்நூல் எனக் குறிப்பிடுவார், நச்சர்.

இப் பாடலின் பெயர்ச் சிறப்புப் போற்றத்தக்கது. வாடை என்பது நெடுமை, நன்மை ஆகிய இரு அடைகளைக் கொண்டு அமைந்துள்ளது. போர் வயின் சென்ற வேந்தனுக்கு வெற்றி தரும் வாடை யானமையால் நல்வாடை எனப்பட்டது. அவ் வாடையே பிரிவுத் துயரால் வாடிய தலைவிக்கு வருத்தத்தைத் தந்து நெடிதாகத் தோன்றியமையால், நெடுநல் வாடையாயிற்று.

"மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி
ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்"

எனும் இலக்கணத்திற்கேற்ப, அகப் பொருள் அமைதியோடு விளங்கினாலும், "வேம்பு தலையாத்த நோன்காழெஃகம்" என்ற தொடர் பாண்டியனின் அடையாளப் பூவாகிய வேப்பம் பூவையே சுட்டுகிறது எனக் கூறும் நச்சர் இதனைப் புறப்பாட்டு எனக் கொள்வார். தலைவனது பிரிவைக் கூறுதலால் பாலையும், அவனது வெற்றியை உரைப்பதால் வாகையுமாக அகப் புறத் திணைகளும் கலந்துள்ளமை நோக்கற்குரியது.

கூதிர்காலக் காட்சியை மிகச் சிறப்பாகச் சித்திரிக்கிறார், நக்கீரர்.

"மாமேயல் மறப்ப மந்தி கூர
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்" (9-12)

என வருணித்துச் செல்லும் பாங்கு, வாடையின் கடுமைத் தன்மையை விளக்குகிறது. பின்னர் அக்கடிய வாடை தனித்திருந்த தலைவிக்குக் கொடுமையாக விளங்கிய தன்மையையும் அதன்பின் பாசறைத் தொழில் மேற்கொண்ட வேந்தன் கண்துயிலாது கடமையாற்றும் காட்சியையும் காட்டுகிறார்.

அரண்மனை அமைப்பு எத்தகையது என்பதைப் புலவர் விரிவாகத் தெரிவித்துள்ளார். பூமலரப் பொழுதறியும் வழக்கத்தையும் மாலைக் காலத்தில் நெல்லும் மலரும் தூவி இல்லுறை தெய்வத்தை மகளிர் வழிபடும் முறையையும் இந்நூலில் காணலாம்.

ஏ. குறிஞ்சிப் பாட்டு:

"ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு" என்பது உரைக் குறிப்பு. குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லாரான கபிலர் 261 அடிகளில் இந்நூலை ஆக்கியுள்ளார். தோழியானவள் எளித்தல்-ஏத்தல் முதலிய ஆறும் கூறிச் செவிலிக்கு அறத்தொடு நின்ற வழி கூறும் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. எனவே இது களவியலின் கடைசித் துறையான அறத்தொடு நிற்றல் துறையைச் சார்ந்ததாகும்.

தினைப் புனம் காக்கச் சென்ற தலைவியும் தோழியும் புனலாடிப் பூக் கொய்து அசோக மர நிழலில் அமர்ந்திருந்த போது, வேட்டை நாய்களொடு தலைவன் வந்தான். நாய்களைக் கண்டஞ்சிய அவர்களிடம் தலைவன் பேச்சுக் கொடுத்தான். அப்போது வேழம் ஒன்று அவ்வழி வந்தது. அச்சமுற்ற அவ் வனிதையர் உய்விடம் அறியாது, நாணம் மறந்து விதுப்புறு மனத்தொடு தலைவனருகே நெருங்கி நின்றனர். அவன் யானையை அம்பெய்தித் துரத்தினான். பின், தலைவியின் அழகைப் புகழ்ந்துரைத்த தலைவன் 'இல்லறத் தலைவியாக உன்னை ஏற்பேன்' எனக் கடவுளை வாழ்த்திக் கை தொழுது, அருவி நீரைக் குடித்து ஆணை

யிட்டு உரைத்தான். அந்தி நெருங்கியதும் அவர்களுக்குத் துணையாக ஊர்வரை சென்றான். பின் நள்ளிரவு தொறும் தலைவியை நாடிச் சென்று வந்தான். காட்டையும் ஆற்றை யும் கடந்து இரவில் அவன் வருதல் நன்றன்று எனத் தோழி ஏங்கினாள். அவளது நோய் குறித்துச் செவிலியிடம் கூறினாள். இதுவே பாடற் கருத்தாகும்.

மலை நாட்டு வாழ்க்கையரான கபிலர், மலைவளம் நிறைந்திட இந்நூலைப் படைத்துளார். செங்காந்தள் முதல் எருக்கம் ஈறாக 99 மலர் வகைகளைக் குறிப்பிட்டுள்ளார். தோழி சொல்வன்மை மிக்கவளாகப் படைக்கப் பட்டுள்ள திறம் போற்றற்குரியது.

"இகல் மீக் கடவும் இரு பெரு வேந்தர்
வினை யிடை நின்ற சான்றோர் போல
இருபேரெச் சமோடு யானும் ஆற்றலேன்"
(27-29)

முத்தும் மணியும் பொன்னும் குறைபடின் ஈடுசெய்துவிட லாம். ஆனால் கற்பும் இயல்பும் ஒழுக்கமும் குன்றினுல் எதுவும் செய்ய முடியாது (13-18வரி) எனும் சிறப்பான கருத்தையும் இதில் காண்கிறோம்.

ஐ பட்டினப் பாலை:

காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறப்பித்துரைக்கும் இந்நூல் பாலைத் திணையில் அமைந்துள்ளதால் பட்டினப் பாலை எனப் பெயர் பெற்றது. இதனை வஞ்சி நெடும்பாட்டு எனவும் வழங்குவர். பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். கரிகால் பெருவளத்தான் பாட்டுடைத் தலைவன் ஆவான். 301 அடிகளைக் கொண்டது.

இந்நூலைக் காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய வரலாற்றுக் களஞ்சியம் எனலாம். தலைவியைப் பிரிந்து வினைமேற் செல்ல நினைந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே" (218-220)

நூலின் துவக்கத்தில் ஆசிரியர் தம் வானநூற் புலமையைக் காட்டுகிறார். புகாரின் விழாக்கள், வணிகச் செழுமை, நெய்தல் நில மக்களின் வழிபாட்டுத் தெய்வம், மக்களின் பண்பு, இளமையில் சிறையிருந்து மீண்ட கரிகாலன் பகைவரைப் பாழ்ப்படுத்திய பான்மை ஆகியன விவரிக்கப் படுகின்றன.

"கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறைபடாது
பல்துறை பண்டம் பகர்ந்து வீசும்
தொல்துறைக் கொண்டி"

என நேர்மையான வணிகம் நடந்தமையைச் சுட்டுவதும், பிறமொழி நாட்டினரும் வந்து தங்குகின்ற வணிகத் தலை நகராகப் புகார் விளங்கியது எனக் குறிப்பதும் நெஞ்சம் இனிக்கும் நற்செய்திகளாகும். சுறா மீன் கொம்பை நெய்தல் நிலத்தவர் வழிபட்டனர் என்பதையும், நிறைமதி நாளில் மீன் வேட்டைக்குச் செல்லார் என்பதையும், தீவினை நீங்கக் கடல் நீராடுவர் என்பதையும், புலி முத்திரை பொறிக்கப் பட்டுச் சுங்கம் பெறப்படும் என்பதையும், பண்டங்களின் விலை குறிக்கப் பெற்ற கொடிகள் தொங்கிக் கொண்டிருக்கும் என்பதையும் அறிகிறோம்.

"பெறற்கருங் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறை"

எனும் அடிகள் இப்புலவரே பாடிய பெரும்பாணாற்றுப் படையிலும் உண்டு.

இப்பாடலின் பெருமை கருதிக் கரிகாலன் புலவர்க்கு, பதினாறு நூறாயிரம் பொன் ஈந்தான் என்ற செய்தியைச் சங்கர சோழன் உலா, தமிழ்விடு தூது, கலிங்கத்துப் பரணி ஆகிய நூல்களில் காண்கிறோம், சோணாட்டின் மீது படையெடுத்த பாண்டியன் இந்நூல் அரங்கேறிய மண்டபத்தைக் காத்த செய்தி கல்வெட்டின் மூலம் தெரிகிறது.

ஒ. மலை படு கடாம்:

இதனைக் கூத்தராற்றுப்படை எனவும் வழங்குவர். மன்னன நன்னனிடம் பரிசில் பெற்று மீண்ட கூத்தன், வறிய கூத்தன் ஒருவனை வழியிற் கண்டு நன்னனிடம் ஆற்றுப் படுத்துவதாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியுள்ளார். இது 583 அடிகளைக் கொண்டது.

"மலைபடு கடாஅம் மாதிரத் தியம்ப" (348)

எனும் அடியான் 'மலைபடு கடாம்' எனும் பெயர்க் காரணம் விளக்கம் பெறும். மலைபடு கடாம் எனின் மலையிடத்து எழுந்த மதம் என்பதேயாம். மலைக்கு யானையை உவமித்து, அம்மலையின் கண் உள்ள அருவியின் ஓசையை யானையின் மத்தகத்தில் ஒழுகும் மதநீரின் ஓசைக்கு உவமித்து உரைப்ப தால் "மலைபடு கடாம்" ஆயிற்று.

மலைகளுக் கப்பால் உள்ள நன்னனின் தலை நகர்க்குச் செல்லும் வழிகள் விரிவாகக் கூறப்படுகின்றன. முதலில் அடிவாரம் நோக்கிச் செல்லும் வழியையும் பின் மலைவழி, அம் மலையிலுள்ள ஊர்கள், மலைவளம் மற்றும் நால்வகை நிலவமைப்புகள் ஆகியவற்றையும் சேயாற்றின் கரைவழியே தெற்கே உள்ள நன்னனின் தலைநகரான செங்கண் மாநகரை அடையும் வழியையும், அரண்மனைச் சிறப்பு நன்னனின் கொடைத்திறம் படைமரம் ஆகியவற்ரையும் முதலில் தொகுத்துரைப்துப் பின் விரித்துரைக்கும் சிறப்பைக் காண்கிறோம்.

மலைவாழ் மக்களின் பழக்க வழக்கங்கள் மிகத் தெளிவாக உரைக்கப்படுகின்றன. மலையில் மோதி எதிரொலிக்கும் இருபது வகை ஒலிகளையும் ஆசிரியர் சுட்டுகிறார். இசைக் கருவிகள், பண்வகைகள் பற்றிய செய்தியும் இதில் உண்டு. பல்வழிப் பாதைகள் கூடுமிடத்தே வழிகாட்டும் கற்கள் அமைக்கப்பட்டிருந்தமையும் இதன்வழி புலனாகும்.

சங்கம் மருவிய காலம்

பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வகைப்படுத்துவர். அடிநிமிர்தல் இல்லாமையாகிய கீழ்க் கணக்கில் வருவன கீழ்க் கணக்கு நூல்கள் எனக் கொள்ளப்பட்டன.

"அடிநிமிர்பில்லாச் செய்யுள் தொகுதி
அறம் பொருளின்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட உரைப்பது கீழ்க் கணக்காகும்"

என்பது பன்னிருபாட்டியல் கி. பி. மூன்றாம் அல்லது நான் காம் நூற்றாண்டு முதல் கி. பி 7-ஆம் நூற்றாண்டுவரை பல்வேறுகாலத்தில் இந்நூல்கள் தோன்றியினிருக்கக் கூடும் என்பர். சங்க காலத்து அகவல் யாப்பு முறையின்று மாறு பட்டு, வெண்பாக்களால் பாடும் முறையை இந்நூற்களில் காண்கிறோம். ஐந்து அல்லது அதற்குக் குறைந்த அடிகளான் அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருள் உரைக்கும் திறமிக்கன, கீழ்க் கணக்கு நூல்கள். சங்க நூற் கருத்துக் களும், வடசொற்கலப்பும் இவற்றில் மிகுதி.

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி-மாமூலம்
இன்னிலை சொல் காஞ்சி யோடேலாதி
என்பதூஉம்
கைந்நிலையுமாங் கீழ்க்கணக்கு"

எனும் பழம்பாடல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களைத் தொகுத்துரைக்கும்,

1. திருக்குறள்:

உலகப் பொது மறையாக உவந்தேத்தப்படும் சால்பிற்குரிய திருக்குறள், சிறப்பின் மிகுதியால் முப்பால் என்றும் மொழியப் பெறும். பழந்தமிழ்ப் புலவர் பதினான்குபேர் முப்பால் என்றே மொழிவர். எழுசீர்களே பயின்று வரினும் அக் குறுகிய எல்லைக்குள் குவலயத்தையே அலசி ஆராயும் பெருமை மிக்கது திருக்குறள். அதிகாரத்துக்குப் பத்துப் பாக்கள் வீதம் 133 அதிகாரங்களைக் கொண்டு விளங்கும் குறள், அறத்துப்பால், பொருட்பால் இன்பத்துப்பால் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டியல்கிறது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், இல்லறவியல், துறவியல், ஊழியல் எனும் மூன்று பகுப்புக்களையும் கொண்டு விளங்குகிறது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் எனும் ஏழு பகுதிகளாக அமைந்த 70 அதிகாரங்களைக் கொண்டது. காமத்துப்பால் களவியல், கற்பியல் எனும் இரு பகுதிகளாக அமைந்த 25 அதிகாரங்களைக் கொண்டதாகும்.

சிறப்பு:

வாழ்க்கை என்ற பாடத்தை உலவுக் எனும் பல்கலைக் கழக வாயிலாக அனுபவம் என்ற ஆசான் உதவியால் கூர்ந்து நோக்கித் தேர்ந்து எழுதிய பெரும் புலவனே வள்ளுவன்.

"நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்தாற்றாக் கடை" எனத்

தம் பட்டறிவின் வாயிலாக அறிவுச் சுடர் கொளுத்துவார் வள்ளுவர். எக் காலத்துக்கும், எம் மொழிக்கும், எவ்வினத்தார்க்கும், எச்சமயத் தார்க்கும் பொதுவாயமைந்த கருத்துச் சுரங்கமாய் விளங்கும் குறள், தமிழனின் அறிவு வன்மையைப் பாரோர்க்குணர்த்தும் பெற்றி மிக்கதாம்,

ஒவ்வொரு கருத்தையும் வரையறுத்துரைக்கும் வள்ளுவரின் பாங்கு உவந்து போற்றத் தக்கது.

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

"சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் கற்பே தலை"

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்"

"நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று"

என அறிவும் உணர்வும் கலந்தமைந்த பெருநெறிக் கொள்கை சாற்றும் குறள் காலம் மாறினும் மாறாக் கருத்து வளம் சுரப்பதாகும். அறநெறியுரைக்கும் அருந்தமிழ்ப் பனுவலெ னினும் இலக்கிய நயமும் இழைந்து நிற்கும் பான்மை வள்ளுவரின் தனித்திறத்தை விளம்பி நிற்கும்.

2. நாலடியார்:

இது நாலடி நானூறு எனவும் வழங்கப் பெறும். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" எனக் குறிப்பதினின்று குறளின் பெருமையையும் நாலடியார் பெருமையினையும் உணரலாம். எண்ணாயிரம் சமண முனிவர்கள் இயற்றிய பாடல்களைப் பாண்டியனின் ஆணைக்கிணங்கி வையை ஆற்றில் எறிந்த போது, நீரின் போக்கை எதிர்த்துக் கரையேறிய நானூறு பாக்களை மட்டும் தொகுத்து நாலடியார் என வழங்கியதாகக் கூறுவர். இதன் காலம் எட்டாம் நூற்றாண்டு என்பது துணிபு. பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாதலால், சில கருத்துக்கள் "கூறியது கூறலாக" மீளவும் கூறப்படுவதைக் காண்கிறோம்.

யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை ஆகிய சமணக் கருத்துக்கள் வலியுறுத்தப் படுகின்றன. சிறந்த நன்னெறிக் கருத்துக்களும் உண்டு. ஈக்காலளவு உதவாதார் நட்பினால் பயனில்லை. எனவே வயல் விளைக்கும் வாய்க்கால் போன்ற நல்லார் உறவினைத் தொலைவாயினும் சென்று கொள்க எனக் கூறப்படுகிறது.

"நாய்க்கால் சிறுவிரல் போல் நன்கணியராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல் வேண்டும்
செய் விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு"

கல்வியின் பெருமை குறித்து,

"இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்
தம்மை விளைக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம்! கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து"

எனப் பேசப்படுகிறது.

"கடித்துக் கரும்பினை கண்தகர நூறி
இடித்து நீர் கொள்ளினும் இன்சுவைத்தேயாகும்
வடுப்பட வைதிறந்த கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார் தம் வாயிற் சிதைந்து"

என உயர்குடிப் பிறந்தாரின் சிறப்புரைக்கப்படும். பதுமனார் இதற்கு உரை கண்டுள்ளார்.

3. நான்மணிக் கடிகை:

ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு கருத்துக்கள் மணி போன்று ஒளி வீசுதலால் நான்மணிக்கடிகை எனப்பட்டது. ஆசிரியர் **விளம்பி நாகனார்**. கடவுள் வாழ்த்தில் திருமாலைப் பகடியுள்ளதால் இவர் வைணவர் என்பர். சிறந்த நீதிகளைச் சுவைபடக் கூறுகிறார். குறட் கருத்து மிகுதி. கடவுள் வாழ்த்துட்பட 104 வெண்பாக்கள் உள்ளன.

4. இன்னா நாற்பது:

கடவுள் வாழ்த்துட்பட 41 வெண்பாக்கள் இதில் உண்டு. ஆசிரியர் கபிலர். இவர் சங்காலக் கபிலரினின்றும் வேறுபட்டவர். ஏனெனில்,

'கள்ளுண்பான் கூறும் கருமப் பொருளின்னா
(—34)

''ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல்
முன்னின்னா'' (—23)

என இவர் ஊனுண்மையையும், கள்ளுண்ணாமையையும் வற்புறுத்துவார். கடவுள் வாழ்த்தில் நான்கு கடவுளரை வாழ்த்துவதால் இவர் சமயப் பொது நோக்கினர் எனலாம். எனினும் கடவுள் வாழ்த்தை ஆசிரியரே பாடினாரா என்ற ஐயப்பாடும் அறிஞரிடையே உண்டு.

5. இனியவை நாற்பது:

இன்னா நாற்பதைப் பல விடங்களில் அடியொற்றிச் செல்லும் இந்நூல் கடவுள் வாழ்த்துட்பட 41 வெண்பாக்களைக் கொண்டது. ஆசிரியர் பூதஞ்சேந்தனார். ஒவ்வொரு பாடலிலும் இனியவையாக நந்நான்கு கருத்துக்கள் கூறப்படுகின்றன. இதன் காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டாகும்.

''குழவி தளர் நடை காண்டல் இனிது''

''பிச்சைப் புக்கு ஆயினும் காற்றல்மிக இனிதே''

போன்ற இனிய கருத்துக்களை இதில் காணலாம்.

6. திரிகடுகம்:

''திரிகடுகம் சுக்கு மிளகு திப்பிலி'' என்பது திவாகர நிகண்டு. இம்மருந்து உடற்பிணி போக்குமாப் போல, மனப்பிணி நீக்கும் மும்மூன்று கருத்துக்களைக் கொண்ட நூறு வெண்பாக்களைக் கொண்டதே திரிகடுகம் எனும் நூலாம்.

இதில் குறளின் கருத்தும், தொடரும்எடுத்தாளப் பட்டுள்ளன. ஆசிரியர் நல்லாதனார். இவர் வைணவர் ஆவார். செல்வத்தை அழிக்கும் செயல்கள் குறித்த ஒரு பாடல்:

''தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்-முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை''

7. ஆசாரக் கோவை:

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இறுதியில் தோன்றியது இதுவேயென ஆய்ந்துரைப்பர். எல்லாரும் பின்பற்ற வேண்டிய ஆசாரங்களை கோவைப் படுத்தியுரைப்பதால் ஆசாரக் கோவை என வழங்கிற்று. ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். வட மொழி அறிவு மிகுந்த இவர், இருடிகளின் ஆசாரங்களைத் தொகுத்துரைத்ததாக அறிகிறோம். நூறு வெண்பாக்களில் இன்னின்ன செய்ய வேண்டும் அல்லது செய்யக் கூடாது என்றும், இவ்விவற்றால் இன்னின்ன நன்மைகள் அல்லது தீமைகள் உண்டாகும் என்றும் கூறப்படுகிறது.

''நீராடும் போழ்தில் நெறிப்பட்டார்
எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினும் தலையொழிந்தாடாரே
ஆய்ந்த அறிவினவர்"

என நீராடுதல் பற்றிச் சொல்லப்படும். உண்ணும் போது இனிப்பான பொருட்களை முதலிலும், கசப்பானவற்றை இறுதியிலும், எஞ்சியவற்றை இடையிலும் உண்ண வேண்டும் என்றும் உரைக்கப்படுகிறது.

''கைப்பன எல்லாம் கடை; தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறை வகையால் ஊண்''

8. பழமொழி:

"பழமொழி நானூறு" எனவும் இதனை வழங்குவர். 400 வெண்பாக்கள் கொண்டது. ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் பழமொழி ஒன்று அமைந்துள்ளதால் 'பழமொழி' என வழங்கப்படுகிறது. ஆசிரியர் **முன்றுரையரையனார்** எனும் சமணர். இவர் குறுநில மன்னரென்பர். மூவேந்தர் மற்றும் கடையெழு வள்ளல்கள் பற்றிய செய்திகள் இதில் காணப்படுகின்றன.

9. சிறுபஞ்ச மூலம்:

"சிறுபஞ்ச மூலம் கண்டங் கத்திரி
சிறு வழுதுணை சிறுமல்லி பெருமல்லி
நெருஞ்சி யிவற்றின் வேராகும்மே"

சிறுபஞ்சமூலம் எனும் ஐந்து வேர்களும் உடற்பிணி நீக்குவன. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் மனப் பிணிக்கு மருந்தாய ஐந்தைந்து உறுதிப் பொருட்களை உரைப்பதால் இந்நூல் சிறுபஞ்ச மூலமாயிற்று. பாயிரம் உட்பட 100 வெண்பாக்கள் கொண்ட இந்நூலை **காரியாசான்** எனும் சமணர் இயற்றியுள்ளார். நன்மையை அறியும் தன்மையால் இளமைப் பருவத்தரும் முதியவர்களை ஒத்த பெருமைக்குரியவர் ஆவார் என உரைக்கும் ஒரு பாடல்:

"பூவாது காய்க்கும் மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல் வல்லார்-தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமை செல்லு முணர்வு"

10. ஏலாதி:

அளவாகக் கலந்தமைந்த அறுவகை மருந்துப் பொருட்களின் கலவைக்கு ஏலாதி என்பது பெயர். ஒவ்வொரு வெண்பாவிலும் ஆறுஉறுதிப்பொருட்களைத் தெளிந்துரைப்பதால் இந்நூல் ஏலாதி எனப்பட்டது. ஆசிரியர் **கணிமேதாவியர்**

எனும் சமணர். பாயிரம் நீங்கலாக 80 பாடல்கள் உள்ளன. (திணைமாலை நூற்றைம்பதும் இவ்வாசிரியரால் பாடப் பட்டதே).

11. முதுமொழிக் காஞ்சி:

காஞ்சித் திணைகளுள் ஒன்றான **முதுமொழிக்காஞ்சி** என்பது **அறம், பொருள், இன்பம்** எனும் மூன்றையும் அறியும்படி எடுத்துரைப்பதாகும், இதன் ஆசிரியர் ஐங்குறு நூறு எனும் நூலைத் தொகுத்தவரான **மதுரை கூடலூர்க் கிழார்** ஆவார். இதில் அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்து அதிகாரங்கள் (சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப் பத்து, துவ்வாப் பத்து, அல்ல பத்து, இல்லைப்பத்து பொய்ப்பத்து எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தீண்டாப்பத்து ஆகியன பத்தாம்) உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்தின் முதற்பாட்டும் "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்" எனத் தொடங்கும்.

"இளமையிற் சிறந்தன்று மெய்பிணியின்மை"

"பழியோர் செல்வம் வறுமையிற் றுவ்வாது"

"நீரறிந்தொழுகாள் தாரமல்லாள்"

"இசையிற் பெரியதோ ரெச்சமில்லை"

போன்ற சிறந்த கருத்துக்களை இந்நூல் கூறும்.

12. ஐந்திணை ஐம்பது: [அகநூல்கள்]

திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் ஐந்திணைக் குரிய **ஐம்பது பாடல்களைக்** கொண்டது. பாடியவர் **மாறன் பொறையன்.** ஐந்திணை ஒழுக்கங்களும் இனிதே யுரைக்கப் படும் இந்நூலில் முல்லைத் திணை முதலில் அமைந்துள்ளது. தலைவியைக் காணத் துடிக்கும் தலைவன் தேர்ப்பாகனிடம்,

"நூன வின்ற தேர்ப்பாக தேர் நொவ்விதாகச்
சென்றீக
தேனவின்ற கானத் தெழினோக்கித்-தானவின்ற
கற்புத் தாள் வீழ்த்துக் கவுண்மிசைக் கையூன்றி
நிற்பாணிலை யுணர்கம் யாம்"

எனப் பேசும் பாங்கு உள்ளத்தைதொடுகிறது. கொடிய பாலையிலும் இனியதோர் காட்சியாக,

"சுனைவாய்ச் சிறுநீரை யெய்யா தென்
றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண வேண்டி-கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"

உரைக்கப்படுகிறது,

13. திணை மொழி ஐம்பது:

இதுவும் திணைக்குப் பத்துப் பாக்கள் வீதம் **ஐம்பது வெண்பாக்களைக்** கொண்டது. ஆசிரியர் **கண்ண**ன் சேர்ந்தனார்,

14. ஐந்திணை எழுபது:

திணைக்குப் பதினான்கு பாடல்களாக ஐந்து திணைகளுக்குரிய 70 **பாடல்களைக்** கொண்டது. ஆசிரியர் **மூவாதியார்**. முல்லைத் திணைக்கும் நெய்தற் திணைக்கும் உரிய இரண்டிரண்டு பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

"மன்றப் பலவின் சுளை விளை தீம்பழம்
உண்டு வந்து மந்தி முலை வருட-கன்றமர்ந்து
ஆபா சுரக்கும்"

என்பது புலவரின் கற்பனைக் காட்சியாகும்.

15. திணை மாலை நூற்றைம்பது:

153 வெண்பாக்களைக் கொண்டது. ஆசிரியர் **கணிமேதாவியரே.**

‘ முருகுவாய் முள்தாழை நீண்முகை பார்ப்
பென்றே
குருகு வாய்ப் பெய்திரை கொள்ளா(து) உருகிமிக
இன்னா வெயில் சிறகான் மறைக்கும்’’

எனக் குருகு தாழை மொக்கினைக் குஞ்சாகக் கருதிக் காக்கிறது என இயற்கைக் காட்சியைக் கற்பனை மெருகுடன் பாடுவார், புலவர். சுவர்க்கம் போன்ற வட சொல்லாட்சி இதில் உண்டு.

16. கைந் நிலை:

திணைக்கு 12 பாடல்கள் வீதம் ஐந்திணை பற்றிய **60 பாடல்களைக்** கொண்டது. ஐந்திணை அறுபது எனவும் வழங்கப்படும். பாடியவர் புல்லங்காடனார். இதிலும் வட சொல்லாட்சி உண்டு. கீழ்க்கணக்கு நூல்களுள் மிகுதியும் சிதைவுற்ற நிலையில் கிடைத்த நூல் இதுவே.

17. கார் நாற்பது:

கார் காலம் பற்றிய புனைந்துரையை ஒவ்வொரு பாட்டிலும் கொண்ட **4) வெண்பாக்களைக்** கொண்டது. முல்லைத் திணைக்குரிய பெரும் பொழுதான கார் காலத்தையும், உரிப் பொருளான இல்லிருத்தலையும் பற்றி **மதுரைக் கண்ணன் கூத்தனார்** பாடியுள்ளார்,

18. களவழி நாற்பது:

(புறம் பற்றியது) போர்க்களச் செயல்களைப் பற்றிய **40 பாடல்களைக் கொண்டது.** ஆசிரியர் **பொய்கையார்.** சேரமான் கணைக் காலிரும் பொறை என்பவன் சோழன்

செங்கண்ணானுடன் போரிட்டுத் தோற்றபோது சிறைபிடிக் கப்பட்டான். குடவாயிற் கோட்டத்தில் சிறையிருந்த அவனைச் சிறை மீட்கக்கருதிய சேரமானின் உயிர்த்தோழர் பொய்கையார் சோழனைப் புகழ்ந்தும், அவன் வெற்றியைப் பாராட்டியும் பாடிச், சேரனைச் சிறை வீடுசெய்தார். போர்க்களக் காட்சியைப் பொற்புறப் பாடுகிறார், புலவர். இவர் சங்க காலப் பொய்கையார் அல்லர்.

இரட்டைக் காப்பியங்கள்

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப், பியங்கள் என வழங்கப் பெறும், "அடிகள் நீரே அருளுக' எனச் சாத்தனார் வேண்ட, இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தை இயற்றினார் என்பதாலும், இரு காப்பியங்களின் கதைத் தலைவியராகப் பெண்டிரே போற்றப்படுகின்றமை யானும், இரு காப்பியங்களின் கதை நிகழ்ச்சியும் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்டமையானும், இரு காப்பியங் களின் பாயிரமும் இளங்கோவடிகளும், சாத்தனாரும் நண்பர்கள் எனக் கூறுதலானும் இவ்விரு காப்பியங்களையும் இரட்டைக் காப்பியங்கள் என நவில்வர். எனினும் சமயப் பொறை கொண்டு பாடிய இளங்கோவையும், புத்தமத பிரச் சார நோக்கங் கொண்டு காப்பியம் பாடிய சாத்தனாரையும் நோக்கும் போது இருவரது காலமும் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்றும், காவிரிப்பூம்பட்டினம் அழிந்த செய்தியை மணிமேகலை உரைப்பதால் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டே மணிமேகலை தோன்றியிருக்கக் கூடும் என்றும் கருதுவோர் உண்டு.

சிலப்பதிகாரம்:

செஞ்சொற் புலமையாளர் இளங்கோவடிகளின் கைவண்ணம் காட்டும் கவின்மிகு காப்பியம் சிலப்பதிகாரமாகும். தமிழில் தோன்றிய முதற்பெருங் காப்பியமெனினும் அஃது உலகப் பெருங்காப்பியங்களொடு ஒப்ப வைத்துப் போற்றும் செப்பம் மிகுந்ததாகும். உயர் குடிப் பிறந்த கோவலன், கண்ணகி இருவரையும் காப்பியத் தலைவராகக் கொண்டு புனையப் பெற்ற அச் செந்தமிழ்ச் சித்திரம், தமிழ் இலக்கிய உலகில் தன்னிகரற்ற புரட்சிப் படைப்பாக விளங்குகிறது.

சிலம்பின் கதை:

"காதலர்ப்பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்தீதறுக" எனப் பெரியோர் போற்ற, கோவலன் கண்ணகி இருவர்க்கும் திருமணம் நடந்தேறியது மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! எனக் கண்ணகியைப் பாராட்டி மகிழ்ந்து வாழ்ந்த கோவலன், நாட்டியக் கணிகை மாதவியிடம் நெஞ்சம் பறிகொடுத்தான். மாதவி மணிமேகலை எனும் பெண் குழந்தையைக் கோவலனுக்குப் பெற்றாள். ஊழ்வினை யாழ்மேல் உறுத்து வந்தூட்ட இந்திர விழாவன்று காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையில் மாதவி பாடிய கானல் வரியைப் பிழையாகக் கருதியதால் மாதவியைப் பிரிந்தான் கண்ணகியொடு மதுரை சென்றான். மாதரி என்ற இடைக்குலப் பெண்ணிடம் கண்ணகியை ஒப்படைத்து விட்டு, அவளது காற்சிலம்பை நகரில் விற்று வரச்சென்றான். பொற்கொல்லன் சூழ்ச்சியால் பின்னர்க் கொலைக்களப்பட்டான். கணவனின் கொலைச் செய்தி கேட்டு ஆறாத் துயரமும், மாறாச்சினமும் கொண்ட கண்ணகி, பாண்டியனொடு வழக்குரைத்து, வெற்றிகண்டு, தென்னவனின் மதுரையை எரித்த பின்பே அமைதி கொண்டாள். கால் நடையாகவே சேர நாடு சென்று, பின் கோவலனொடு விண்ணகம் சேர்ந்தாள். தன்னாடு நோக்கி வந்த பத்தினிக் கடவுளுக்குச் சிலையெடுத்துச் சிறப்பு செய்விக்க எண்ணிய

சேரமன்னன் இமயஞ் சென்று கல்லெடுத்து, எதிர்த்து நின்ற கனக விசயர் முடித்தலை நெறித்து, "பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை நூற்றிறன் மக்களின் நீர்ப்படை செய்து" கைவினை முற்றிய தெய்வப் படிமம் சமைத்தனன்.

காப்பிய அமைப்பும் சிறப்பும்:

சிலப்பதிகாரம் புகார்க் காண்டம்,மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் எனும் முப்பெரும் பிரிவுகளை கொண்டது. புகார்க் காண்டத்தில் 10 காதைகளும், மதுரைக் காண்டத்தில் 13 காண்டங்களும், வஞ்சிக் காண்டத்தில் 7 காதைகளும் ஆக மொத்தம் 30 காதைகள் உள.

மும்மைச் சிறப்புமிக்க செம்மைக் காப்பியம் சிலப்பதிகாரம் எனலாம். அது மூன்று காண்டங்களைக் கொண்டது; முப்பெரும் உண்மைகளை விளம்புவது; முத்தமிழும் பொலிவுறத் திகழ்வது; மூவேந்தரையும் ஒத்த நிலையில் பாடுவது; சேர, சோழ, பாண்டிய நாடு மூன்றனையும் ஒற்றுமைப் படுத்தித் தமிழ்த் தேசியம் காண விழைந்த காரணத்தால், அதனைத் தேசியக் காப்பியம் எனப் புகழ்ந்துரைப்பர். தாம் சமணராயினும் சமயப் பொறை விளங்கிடச் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளார், இளங்கோவடிகள். இக்காப்பியம் பல புரட்சிக் கூறுகளையும் கொண்டதாகும்.

கடவுளை வழுத்திக் காப்பியம் துவங்கப்படும் மரபினை மாற்றி, ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றைப் பாடும் இளங்கோ, தம் புரட்சிமிகு எண்ணத்திற்குக் கடவுள் வாழ்த்துப் பகுதியில் பிள்ளையார் சுழியிடுகிறார்.மன்னவரும் தெய்வங்களும் பாட்டுடைத் தலைவராக அமையும் நிலையை மாற்றி, உயர்குடிச் செல்வரைக் காப்பியத் தலைவராக ஏற்றமை மற்றொரு புரட்சிக் கூறாம். கதைத் தலைவியின் பெயரைக் காப்பியத்திற்குச் சூட்டாமல்,சூழ்வினைச் சிலம்பே கதையின் திருப்பத்திற்குக் காரணமாயமைந்தமை கருதி, சிலம்பின் ஆட்சிமிகுந்த காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம்

என்றே பெயரிட்டமை அடிகளாரின் புரட்சி நோக்கிற்கும் கலைநுட்ப மாட்சிக்கும் சான்றாகும்.

நயம்:

கண்ணகிப் பெண்ணாளைத் தெய்வத் தோன்றலாகச் சித்திரிக்கும் அடிகளார், 'நாக நீள் நகரொடு நாக நாடதனொடு போக நீள் புகழ் மன்னும் புகார்நகர் அது தன்னில்' எனப் புகாரின் பெருமைதனை முதற்கண் போற்றியுரைத்து அப்புகாரில் தோன்றிய கண்ணகியின் பெருமையை மறைமுகமாக விளக்குகின்றார். "தீதில் வடமீனின் திறம் இவள் திறம்" எனக் கண்ணகியின் அகவொழுக்கத்திற்கு அருந்ததியை உவமை காட்டும் புலவர், காப்பியப் பாத்திரம் ஒவ்வொன்றும் கண்ணகியின் திறம் வியந்து, பெருமை சாற்றும் வகையில் படிப்படியாகக் கண்ணகியின் மாண்பினை வளர்த்துச் சொல்கிறார். கொற்றவைத் தெய்வம், கவுந்தியடிகள், கோப்பெருந்தேவி, கற்புடைப் பெண்டிர், மதுராபுரித் தெய்வம், தேவந்தி, மாடல மறையோன் என ஒவ்வொருவரும் கண்ணகியின் தன்மையும் திறமும் குறித்துப் புகழ்ந்தும் தொழுதும் பேசும் நிலை அடிகளின் கலைத் திறமைக்குச் சான்றாகும். கோவலனையும் கண்ணகியையும் நோக்கி யாரிவர் என வினவிய வறுமொழியாளனுக்கும் வம்பப் பரத்தைக்கும் "மக்கள் காணீர்" எனக் கவுந்தியடிகள் பதிலிறுத்த போது, குறும்பு மொழி பேசிய அவர்களை நரிகளாகுமாறு கவுந்தியடிகள் சாபமிடுகிறார். அதைக் கேட்ட கண்ணகி

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்றறிதல் வேண்டும்"

எனச் சமணத் துறவிக்கே அறமுரைக்கும் வகையில் படைக்கப் பட்டுள்ள பான்மை பாராட்டத் தக்கது.

காப்பியச் சுவையை மிகுவிக்க வேண்டி அடிக்கடி பாவினங்களையும் மாற்றிக் கொள்கிறார், இளங்கோ. கதையைச் சொல்லும் போக்கில் அமையும் காதைகள் இருபதும் நிலைமண்டிலப்பாக்களான் அமைந்துள்ளன.

வழக்குரை காதையில் நாடகக் கூறு நனிசிறந்து விளங்கு கிறது. கானல் வரி, வேட்டுவ வரி, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை ஆகியன முறையே பாட்டும் கூத்துமாக அமைந் துள்ளன.

'திங்கள் மாலை வெண்குடையான் சென்னி
செங்கோலது வோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி
காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல்
கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற் பென்றறிந்தேன் வாழி
காவேரி''

எனக் கோவலனும் மாதவியும் மாறி மாறி யாழ் வாசித்துப் பாடும் வரிப்பாடல்கள் நயஞ்செறிந்தன. கோவலன் பிரிந்து சென்றபின் மாதவி வரைந்த மடல்கள் இரண்டும் நெஞ்சம் நெகிழ்விப்பன. ''நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட் டேமால்'' என்ற மாதவியின் கூற்று பண்பு நயமிக்கது. கொலைக்களப்பட்ட கணவனைக் கண்டு புலம்பும் கண்ணகி,

''பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ''

என அரற்றுகின்ற கர்ட்சியும்,

''பெண்டிரும் உண்டு கொல் பெண்டிரும் உண்டு
கொல்
கொண்ட கொழுநர்க் குறுகுறை தாங்குறும்
பெண்டிரும் உண்டு கொல் பெண்டிரும் உண்டு
கொல்''
''சான்றோரு முண்டு கொல் சான்றோரு முண்டு
கொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரு முண்டு கொல் சான்றோரு முண்டு
கொல்''

எனப் பதைக்கின்ற காட்சியும் அவலச்சுவை நிறைந்தனவாம்.

இவ்வாறு தம் வித்தக மாட்சியான் முத்தமிழ்ச் சுவை மிளிரக் கற்புத் தெய்வத்திற்குச் சொற்கோயில் கட்டிய இளங்கோவடிகள், தமிழ் இலக்கிய உலகில் **தனியரசோச்சும் நெடுமுடிச் சேர இளவல்** என்பது உண்மை; **வெறும் புகழ்ச்சியில்லை.**

மணிமேகலை

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலைச் செல்வியின் துறவு வாழ்வினைக் கூறும் இந்நூலுக்கு "**மணிமேகலைத் து**றவு" என்றே ஆசிரியர் பெயரிட்டார் என்பர். புத்தமதக் கொள்கையினைப் பரப்புதற்காக மதுரைக் கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய இந்நூல் பல கிளைக் கதைகளையும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளையும் கொண்டது. "சமயக் கணக்கர் திறம் கேட்ட காதை" "பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை" ஆகியவற்றில் **சமய உண்மைகளே** விளம்பப்படு கின்றன.

கதை அமைப்பு:

"மாவண் தமிழ்த் திறம் மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனென்"

எனப் போற்றப்படும் மணிமேகலைக் காப்பியத்தில் முப்பது **காதைகள்** உள்ளன. சிலம்பில் காணப்படுவது போன்று காண்டமெனும் பெரும் பிரிவு இதில் கிடையாது. சிலப்பதி காரக் காப்பியத்தில் **மதுரைக் காண்டத்தில் மணி**

மேகலையை அறிமுகப்படுத்தும் இளங்கோ, வஞ்சிக் காண்ட நீர்ப்படைக் காதையிலும், வாழ்த்துக் காதையிலும், வரந்தரு காதையிலும் **மணிமேகலையின் துறவை விரித் துரைப்பார்.** சாத்தனாரோ பருவ மங்கையாகவே மணி மேகலையை அரங்கிற்குக் கொண்டு வருகிறார். கோவலன்-கண்ணகி பற்றி மாதவி வாயிலாக அறிந்து புலம்பியழும் மணிமேகலையைத் தோழி சுதமதியுடன் மலர் வனத்திற்குச் சென்று வருமாறு அனுப்புகிறாள், மாதவி. அதனை அறிந்த உதய குமரன் எனும் அரச குமாரனும் மணிமேகலை மீது கொண்ட காதலினால் மலர் வனம் வருகின்றான். உதய குமரன் வருவது கண்ட மணிமேகலை பளிக்கறைக்குள் மறைந்து கொள்கிறாள். எனினும் "புதுவோன் பின்றைப் போனதன் நெஞ்சம்; இதுவோ அன்னாய் காமத்தியற்கை" எனப் பேதுறுகின்றாள். மணிமேகலை மனம் பேதுற்ற தறிந்த மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவ தீவிற்குக் கொண்டு செல்கிறது. அங்குள்ள புத்த பீடிகையைத் தொழுது பழம் பிறப்புணர்ந்த மணிமேகலை தீவதிலகையின் உதவியால் அமுத சுரபியைப் பெற்று, காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள அறவண அடிகளிடம் வந்து சேர்கின்றாள். அங்குக் காய சண்டிகை உருவில் அறம் செய்து வருகிறாள். அவளை அடைதற்கு முயற்சி செய்த உதய குமரன், காயசண்டிகையின் கணவனால் கொலை செய்யப்படுகிறான், மகன் கொலை யுண்டதை அறிந்த அரசமாதேவி, தன் மகனின் கொலைக்குக் காரணம் மணிமேகலையே என்பதறிந்து, மணிமேகலையைச் சிறைப்படுத்துகிறாள். நஞ்சூட்டியும், காமுகனை ஏவியும் மணிமேகலையைக் கொடுமை செய்கிறாள். மணிமேகலா தெய்வத்தின் அருளால் மணிமேகலைக்குத் துன்பம் ஏதும் விளையவில்லை. இதனையறிந்த அரசமாதேவி, மணிமே கலையை வணங்கி, அவளைச் சிறை வீடு செய்கிறாள். சிறைக் கோட்டம் அறக் கோட்டமாகிறது. மணிமேகலை வஞ்சி சென்று கண்ணகியை வணங்கி, பிறசமயத்தவரை வாதுப் போரில் வென்று பூம்புகார் திரும்புகிறாள். தாயும் தோழியும் காஞ்சி நகர்க்கு அறவண அடிகளைத் தேடிச் சென்றமை அறிந்து, தானும் காஞ்சி சென்று, தவம் மேற்கொண்டு, பிறவி நீங்கும் பேறு பெறுகிறாள் என்பதே கதை.

நூல்நயம்:

கம்பனுக்கு முன்னோடியாக இயற்கைக் காட்சியை எழிலுறச் சித்திரிக்கும் சாத்தனாரின் திறம் பாராட்டிற் குரியது.

"குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்
மயிலாட ரங்கின் மந்தி காண்பன காண்"

இவ்வரிகள் "தண்டலை மயில்கள் ஆட" என்ற கம்பனின் கவிதை வரிகளுக்கு வழிகாட்டியாகும். பசிப் பிணியின் கொடுமை பற்றிக்

"குடிப் பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி எனும் பாவி"

எனச் சிறப்பாக எடுத்துரைக்கிறார். அரசின் திறங்குறித்து இயம்பும் போது,

"கோல் நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள் நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்
மாரி வறங்கூரின் மன்னுயிரில்லை"

என உரைப்பார்.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்றும்,

"........................ மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளுமல்லது
கண்டது இல்"

என்றும் அறத்தின் தேவை பற்றி மொழிகுவார். உதய குமரனின் மரணத்தால் வருந்தும் அரசமா தேவிக்கு ஆறுதல் கூறும்போது,

"உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன் மகன் தன்னை
எடுத்துப் புறங் காட்டிட்டனர் யாரே
....
....
எவ்வுயிர்க் காயினும் இரங்குதல் வேண்டும்"

என அன்பு நெறி குறித்துப் பகரப்படுகிறது.

இவ்வாறு அறவுணர்வும், அன்புணர்வும் பொங்கித் ததும்பும் மணிமேகலைக் காப்பியம், நிலையாமைக் கருத்தை வற்புறுத்தியுரைக்கும்; சாதி ஒழிப்பு. பரத்தையர் ஒழிப்பு போன்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பேசும்; சமண சமயத்தைத் தாழ்த்தியுரைக்கும்; தருக்க நூற் கருத்துக்களை எடுத்தியம்பும்; இதில் காப்பியச் சுவை குறைவு கிளைக் கதைகள் மலிந்துள்ளதால், கதையோட்டத்தில் தடை ஏற்படுகிறது. புராணக் கதைகள் மிகுதியாக உள்ளன. இதில் திருக்குறள் கருத்துக்கள் அதிகம் என்பதால், திருக்குறளுக்குப் பிந்தியது என அறுதியிடலாம். சமயக் காழ்ப்பு இதில் மிகுதி என்பதால் சமயப் பொறை பேசும் சிலப்பதிகாரத்திற்கும் பிற்பட்டே தோன்றியிருக்க வேண்டும் எனவும் வாதிடுவோர் உண்டு. சிலப்பதிகாரத்திற்குப் பின்னர், பல்லவர் ஆட்சிக்கு முற்பட்டு இந்நூல் தோன்றி இருக்கலாம் எனும் கூற்றையே பெரும் பாலோர் ஏற்பர். அதுவே பொருத்தமாகவும் உள்ளது.

பல்லவர் காலம்
[கி. பி. 600–900]
பத்தி இலக்கியங்கள்

பத்திக்கொரு மொழியெனப் பாராட்டப் பெறுவது, பைந்தமிழ். பத்திச் சுவை நனி சொட்டச் சொட்ட இறையருளை வேண்டியும், வியந்தும் பாடல்கள் புனைந்தருளிய நாயன்மாரும் ஆழ்வாரும் சமயத்திற்கும் மொழிக்கும் ஒருங்கே தொண்டாற்றிய பெருமைக்குரியர் ஆவர். பத்தி இயக்கம் வெற்றி பெறும் பொருட்டுத் திருத்தலங்கள் தோறும் சென்று அவர்கள் பாடிய தோத்திரப் பாக்கள் புதிய சொல்லமைப்பும் எதுகை மோனைச் சிறப்பும் கொண்டு மிளிர்வனவாம். இசை தழீஇய இப்பத்திப் பாக்கள் தமிழிசைக்கு வாழ்வளித்தன. விருத்தப்பாவே இக்காலத்தில் பெரு வழக்காயிற்று. இலக்கிய வரலாற்றில் புதிய போக்கு தலை காட்டிய பத்தி இயக்கத்தின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டாகும்.

சங்க காலமும் சங்க மருவிய காலமும்:

சங்க காலத் தமிழர் வாழ்வில் கடவுட் கொள்கை உண்டு. தொல்காப்பியரே 41 முறை 'கடவுள்' எனக் குறிப்பர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
(தொல்-அகத்திணையியல்-5)

என நால்வகைத் தெய்வங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"கொடி நிலை* கந்தழி† வள்ளி‡ என்ற
வடு நீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

(தொல். புறத்திணையியல்-27)

என்பதன் மூலம் பண்டைத் தமிழர் கதிரவன், நெருப்பு, சுந்திரன் ஆகியவற்றையும் வழிபட்டமை புலனாகும். எனினும் சாதிவேறுபாடோ, சமயப் பாகுபாடோ கற்பிக்கப் படவில்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் ஓங்கத் தலைப்பட்டன. இக்காலத் தொழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், காப்பியங்களுமே இதற்குச் சான்றாகும்.

தமிழகத்தின் இருண்ட காலம் என அழைக்கப்படும் களப்பிரர் தம் ஆட்சிக்குப் பின்னர் தமிழகத்தில் பல்லவர் ஆட்சி ஏற்பட்டது. பல்லவர் காலச் சூழ்நிலையும், சமய உணர்வில் ஏற்பட்ட புரட்சியும் பத்தி இயக்கம் தோன்று வதற்குக் காரணமாயின. அதுகாறும் தழைத்திருந்த சமணமும், பௌத்தமும் வேரற்று வீழும் வண்ணம் பத்தி இயக்கம் வீறு பெற்று எழுந்தது. புறச் சமயம் பொன்றிட, அகச் சமயம் வென்று சிறந்தது. மன்னரும் மக்களும் புறச் சமய நீரோட்டத்தை எதிர்த்து அகச் சமயத்தைப் போற்றி உடன் படுவதற்குத் தேவாரங்களும் பிரபந்தங்களும் துணை புரிந்தன.

ஞானசம்பந்தர்:

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" சீர்காழியில் பிறந்தார். "ஆளுடைய பிள்ளை" ", காழி வள்ளல்" என்னும் சிறப்புப் பெயர்களும் இவருக்குண்டு. மூன்றாம் வயதிலே இவர் சிவஞானம் பெற்றார். இவரது தந்தை சிவபாத விருதயர் என்பவர்

---

*கதிரவன் †நெருப்பு ‡சந்திரன்

ஒருநாள் இறைவனை வழிபட்டுத் திரும்பும் வழியில், இவரைக் கரையில் விட்டவாறு தாம் குளத்தில் நீராடிக் கொண்டிருந்தார். தந்தையைக் காணவில்லை எனக் கருதி அழத் தொடங்கிய 'குழந்தை சம்பந்தர்' மீது சிவபெருமான் கருணை கொண்டு, உமையவளோடு விடை மீதேறி வந்தார். பாலொடு சிவஞானத்தையும் கலந்து ஊட்டுமாறு உமையவளைப் பணித்தார். விருதயர் நீராடிக் கரையேறிய போது குழந்தையின் வாயில் பால் வழிந்து கொண்டிருப்பதைக் கண்டு, "எவர் பாலைக் குடித்தாய்" என வினவினார் **"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி"** எனும் பாடலைப் பாடிப் பாலூட்டப் பெற்ற நிகழ்ச்சியைக் கூறிற்று, குழந்தை. ஞானப்பால் ஊட்டப் பெற்றமையால் ஞானசம்பந்தர் எனும் பெயர் வழங்கலாயிற்று. தந்தையின் தோளில் அமர்ந்தவாறே ஞானசம்பந்தர் சைவத் திருப்பதிகளெங்கும் சென்று பதிகங்களைப் பாடினார்.

இவர் பாடிய பதிகங்கள் **1600** எனினும் நமக்குக் கிடைத்தவை **383** பதிகங்களே. இறைவனைத் **தந்தை-மகன் உறவில்** இவர் பாடினார். இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பாடிய பாடல்களும் உண்டு. யமகம், திரிபு போன்ற சொல்லணிகளைக் கையாளும் இவர் பாடல்களில் இயற்கை வருணனை மிகுதி. பன்னிரு திருமுறைகளில் **முதன் மூன்று திருமுறைகளாக** இவரது பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

இவர் அனல் வாதத்தாலும் புனல் வாதத்தாலும் சமணரை வென்று, கழுவேறச் செய்த பெருமைக்குரியவர். திருவருள் கூடப் பெற்று இவர் நிகழ்த்திய புதுமைகள் சைவம் செழித்தோங்க உதவிற்று. செலுத்துவாரின்றியே காவிரியில் ஓடம் செல்லுமாறும், திருமறைக் காட்டில் கோயிற் கதவும் மூடுமாறும் செய்த புதுமைகள் குறிப்பிடத்தக்கன. கூன் பாண்டியனின் வெப்ப நோயைக் குணமாக்கி அவனைச் சைவந் தழுவச் செய்த சிறப்பு இவர்க்குண்டு.

திருநாவுக்கரசர்:

இவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் சைவ வேளாளர் மரபில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகவாய்த் தோன்றினார். இவரது இயற்பெயர் மருணீக்கியார் என்பதாகும் "**பாவுற்றலர் செந்தமிழ் இன்சொல் வளப் பதிகத் தொடை**" பாடிய பான்மையினால் **நாவுக்கரசரென்று** இறைவனால் பெயர் சூட்டப் பெற்றார். அப்பரே என் ஞானசம்பந்தரால் முறைப் பெயர் சுட்டி அழைக்கப் பட்டதால் **அப்பர்** எனவும் இவரை அழைப்பர். **வாகீசர்** எனும் பெயரும் இவரையே குறிக்கும். இவர்தம் திருத்தாண்டகத்தின் கவிதைச் சிறப்பு நோக்கி இவரைத் "**தாண்டக வேந்து**" எனவும் புகழ்ந்துரைப்பர்.

சைவராகப் பிறந்த இவர் பாடலிபுத்திரம் சென்று சமண நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். சமண மதத்தோடு தம்மை இணைத்துக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர் சமணப் பள்ளியில் தலைவராக அமைந்தார். சிவத் தொண்டில் மட்டுமே சித்தங்களித்த இவரது தமக்கை திலகவதியார் அப்பரை மீண்டும் சைவத்திற்குத் திருப்பியருளுமாறு சிவபெருமானை வேண்டினார். சிவபெருமானும் அப்பரைச் சூலை நோயினால் ஆட்கொண்டருள விரும்பினார். வயிற்று வலியைத் தாங்க முடியாத அப்பர், சமணரால் அந்நோயைக் குணப்படுத்த முடியாமை கண்டு சைவம் திரும்பினார். வீரட்டானத்திலுள்ள இறைவன் மீது "**கூற்றாயினவாறு விலக்ககிலீர்**" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி நோய் தணியப் பெற்றார். பின் உழவாரப் படை கொண்டு 81 வயது வரை இறைப்பணி புரிந்து வந்தார்.

இவர் பாடிய பதிகங்கள் **4900**. **310** பதிகங்களே கிடைத்துள. இப்பதிகங்கள் 4, 5, 6, திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இவரது பாடல்கள் நெஞ்சம் நெகிழ்விப்பனவாயும் தத்துவக் கருத்துக்கள் நிறைந்தனவாயும், புராணச் செய்திகள் கலந்தனவாயும் உள்ளன.

பொங்கிப் பாயும் வெள்ள மெனப் பெருக் கெடுக்கும் இறை யருளை நினைந்து பரவசப்படும் இவர் ஆண்டான் அடிமை உறவில் இறைவனைப் பரவுகிறார். பதினொரு வகையில் இறைவனுக்குப் பணி செய்யுமாறு நெஞ்சொடு மொழிவார். நிலையாமைக் கருத்தையும் அழுத்தமாகக் கூறுவார். இவரைப் போன்று அல்லலுச்கு ஆட்பட்ட அடியவர் எவரு மிலர். இவரது அனுபவங்கள் பாடலாவதால் அவல உணர்வு மிகுதி. வீடு பேறடையும் போது கூட இவர் அல்லற்பட்டே அடைந்தார் என்பர். தமது காலத்து நாயன்மாரையும் இவர் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தர் பிறவியை வெறுக்க இவரோ,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்
பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என மனிதப் பிறவியை வேண்டுவார்.

சுந்தரர்:

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் அந்தண ராகப் பிறந்தார். இவரது பெற்றோர் சடையனார்-இசை ஞானியர் ஆவர். பார்வதி தேவியின் பணிப் பெண்டிராகிய அநிந்திதை, கமலினி இருவர் மேலும் காதல் கொண்டமை யால் மூவரையும் இறைவன் பூவுலகில் பிறக்கச் செய்தார் என்றும், திருவாரூரில் இவர் மணந்து கொண்ட பரவை யாரும், திருவொற்றியூரில் மணந்த சங்கிலியாரும் முறையே கமலினியும், அநிதிதையுமே என்றும் கூறுவர். இவர் நம்பி ஆரூரர் எனும் பெயரில் நரசிங்க முனையர் எனும் அரசரால் வளர்க்கப்பட்டார். இவரைத் திருமணத்தின் போது (16ஆம் வயதில்) இறைவன் தடுத்தாட் கொண்டார். **"மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக"** என இறைவன் வேண்ட

''யாதினை யறிந்து என் சொல்லிப் பாடுகேன்'' என இவர் கேட்க, இறைவனோ ''முன்பென்னைப் பித்தனென்று மொழிந்தமையால் பித்தனென்றே பாடுக'' எனக் கூறியதால் ''பித்தா பிறை சூடி பெருமானே யருளாளா'' எனப் பாடினார் என்பர். இவரை வன்றொண்டர், தம்பிரான் தோழர், நாவலூரர் என்றும் அழைப்பர்.

பிரியேன் எனச் சொல்லிப் பின் சங்கிலியாரைப் பிரிந்தமையால் இறைவன் இவரது கண்ணொளியைப் பறித்தார். பின் காஞ்சியில் இடக்கண்ணையும், ஆரூரில் வலக்கண்ணையும் ஒளி பெறச் செய்தார் என்றும் கூறுப. பரவையார் ஊடலைத் தீர்ப்பதற்கு இறைவனையே தூதனுப்பிய செய்தியும், திருவஞ்சைக் களத்தில் இறைவனடி சேர விரும்பிய போது வெள்ளை யானை வந்து சிவலோகம் கொண்டு சென்றது என்ற செய்தியும் வழங்குகின்றன. இவர் 18 ஆண்டுகளே வாழ்ந்தார்.

இவர் பாடிய பதிகங்கள் 3700. கிடைத்தவை நூறு மட்டுமே. இறைவனைத் தோழனாகக் கொண்டு பாடியமையால் எள்ளற் சுவை மிகுந்து காணப்படுகிறது.

''முண்டம் தரித்தீர் முது காடுறைவீர்
முழுநீறு மெய் பூசுதிர் மூர்க்கப் பாம்பைக்
கண்டத்திலும் தோளிலும் கட்டிவைத்தீர்
கடலைக் கடைந்திட்டதோர் நஞ்சை உண்டீர்
பிண்டம் சுமந்தும் மொடும் கூடமாட்டோம்''

என்றும்,

''கங்கையாளேல் வாய் திறவாள்
கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கொற்றட்டி யாளர்
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம்''

என்றும் எள்ளுவது போலப் பாடுவார். ஏனைய நாயன்மாரையும் ஒரு குடும்பமாகச்சேர்த்துப் பாடுதல், திருத்தலங்களின் இயற்கைக் காட்சிகளைப் பாடுதல், போன்ற முறை இவரது தனிச்சிறப்பாகும். சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் பயிற்சியுள்ளவராதலால் அவர்தம் கருத்துக்களையும் தொடர்களையும் ஏற்ற இடங்களில் எடுத்தாளுகிறார். இவரது திருத்தொண்டத் தொகையே நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதிக்கும், பெரிய புராணத்திற்கும் அடிகோலிற்று. இவரது தேவாரம் ஏழாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. காலம் 8-ஆம் நூற்றாண்டு.

மாணிக்கவாசகர்:

வையைக் கரையுள வாதவூரில் பிறந்த மணிவாசகர் திருப்பெருந்துறையில் குருவருள் பெற்றார். "தென்னவன் பிரமராயன்" எனும் பட்டத்தோடு பாண்டியனிடம் அமைச்சராகப் பணிபுரிந்த மணிவாசகர், குதிரை வாங்கச் சென்றபோது குருந்த மரத்தின் கீழிருந்து சிவஞானத்தை உரைத்துக் கொண்டிருந்த முனிவரைக் கண்டு, அவரிடம் ஞானம் கேட்கச் சென்றார். இறைப் பற்றிலும், பணியிலும் நாட்டம் மிகுந்து குதிரை வாங்கக் கொணர்ந்த பணத்தைச் சிவப்பணிக்குச் செலவளித்தார். அதனைச் செவியுற்ற வேந்தன் இவரைச் சிறையிலடைத்தான். அதன் தொடர்பாக இறைவன் தமது அடியார்க்காக நரிகளைப் பரிகளாக்கி வழங்கியதும், வையையில் வெள்ளப் பெருக்கேற்பட்டதும், இறைவனும் பிட்டுக்காக மண் சுமந்து அடி பெற்ற நிகழ்ச்சியும், தன் தவறுணர்ந்த மன்னர் மாணிக்கவாசகரைச் சிறைவீடு செய்து, மீண்டும் அமைச்சராக்கிய நிலையும் பௌணீகரால் பெருமையுடன் பேசப் பெறும். இவரது காலமும் எட்டாம் நூற்றாண்டே ஆகும்,

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் எட்டாம் திருமுறையாகப் பகுக்கப்பட்டுள்ளது. இது 51 பகுதிகளைக் கொண்டது, நெஞ்சம் நெக்குருகிக் கதறியழும் மணிவாசகப்

பெருந்தகையின் பாடல்கள் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தம் வழங்குபவையாகும்,

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்"

என எளிமை, கனிவு, குளுமை, குழைவு நிறைய இறைவனைப் பாடிப் பரவுவார், மணிவாசகர்.

ஒன்பதின்மர் திருவிசைப்பா:

9-ஆம் திருமுறையாக வகுக்கப் பெற்ற திருவிசைப்பா ஒன்பது அடியவர்களின் பாடல்களைக் கொண்டதாகும், **திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பி காடவ நம்பி, வேணாட்டிகள், திருவாலி அமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர்**, ஆகிய ஒன்பது அடியவர் பாடல்களும் உள்ளத்தை அள்ளும் திறத்தன.

திருமூலர் திருமந்திரம்:

தேவார ஆசிரியர் மூவர்க்கும் முற்பட்ட திருமூலர் பதினெண் சித்தருள் ஒருவர். இவரது இயற்பெயர் சுந்தர நாதன் என்ப. கூடு விட்டுக் கூடு பாயும் சித்தி பெற்ற இவர் திருவாடுதுறையில் இறந்து போன மூலன் என்னும் இடையனின் பிரிவைப்பொறுக்காது வாய்விட்டுக் கதறிய ஆடுகளின் துயர் நீக்கும் பொருட்டு மூலனின் உடலிற் புகுந்ததால் திருமூலர் ஆனார்.

இவர் இயற்றிய திருமந்திரம் **ஒன்பது தந்திரங்களை யும். 232 அதிகாரங்களையும், 3000 செய்யுட்களையும்** கொண்டது. ஆனால் இப்போது 3069 பாடல்களை இதில் காண்கிறோம். வடமொழியில் சிவாகமங்களின் உட்பிரிவு களைத் தந்திரம் எனப் பிரிப்பர். இந்நூலிலோ தந்திரம் என்பது பெரும் பிரிவாகக் காணப்படுகிறது. இந்நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நெறிகளில் பேரின்பம் துய்க்கலாம் என விளம்பும். சாத்திரமாகவும் (சைவக் கோட் பாடுகளை விளக்குவதால்) தோத்திரமாகவும், சரித்திர மாகவும் (குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு, அடிமுடி தேடல் போன்ற நிகழ்ச்சிகளால்) விளங்கும் பெற்றியும் இந்நூலுக்கு உண்டு. ஏற்ற உவமைகளைப் பெய்து எடுப் பான கருத்துக்களைத் திருமூலர் விளக்குவார். வழக்குச் சொற்களையும் அவர் கையாண்டு உள்ளார்.

"வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம்"

என வரையறுத்துரைப்பார்.

"ஆசையறு மின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்"
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாளுமே"

என்பது திருமூலம். சைவ சமயக் கருத்துக்களை விளக்க முதலில் எழுந்த நூல் இதுவே.

இது பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

பன்னிருவரின் 11-ஆம் திருமுறை:

பன்னிருவர் பாடிய நூல்கள் 11-ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை திருவால உடையார் திருமுகப் பாசுரம், காரைக்காலம்மையாரின்

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புத திருவந்தாதி, நக்கீரனாரின் திருமுரு காற்றுப்படை மற்றும் கைலைபாதி காளத்திபாதி, அந்தாதி, காரெட்டு, போற்றிக் கலிவெண்பா நம்பியாண்டர் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை போன்றன வாம்.

பன்னிரண்டாம் திருமுறை:

நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந் தாதியையும், சுந்தரரின் திருத்தொண்ட்ர் தொகையையும் பின்பற்றிச் சேக்கிழார் புனைந்த பத்திப்பனுவலான பெரிய புராணமே பன்னிரண்டாம் திருமுறையாகும். சேக்கிழாரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும் (சோழர் காலம்). பெரிய புராணத்தைப் பற்றிச்சற்று விரிவாகத் தனியே ஆராய்வது நலம் பயக்கும்.

பெரியபுராணம்

சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமே **பெரியபுராணம்** என்பதாகும். நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும், சுந்தரரின் திருத்தொண்டர் தொகையையும் பின்பற்றி எழுந்த இந்நூல் 63 **நாயன்மார்களின்** வரலாற்றைத் திறம்பட நுவலும் **பத்திப் பனுவலாகும்.** பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடிய கனிவலவ'' எனத்திரிசிரபுர மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழாரின் கவித்திறனைப் புகழ்ந்துரைப் பார். சமணப் பெருங் காப்பியமாகிய சீவக சிந்தாமணியில் சிந்தை மறந்து ஈடுபட்டிருந்த இரண்டாம் குலோத்துங்கச் சோழ மன்னனைச் சைவ நெறியின்பால் திருப்புவதற்காகவே இக்காப்பியத்தை அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் இயற்றினார் என்பர்.

இந்நூலின் பெருமை கருதி இதனைப் பன்னிரண்டாம் திருமுறையாகத் தொகுத்துள்ளனர். இந்நூலைச் சுவைத்து மகிழ்ந்த சோழன் இவருக்குத் ''தொண்டர்சீர் பரவுவார்'' எனும் பட்டத்தை நல்கிச் சிறப்பித்தான். சேக்கிழார் காலம் 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்;

அமைப்பு:

இந்நூல் இரண்டு காண்டங்களும் பதின்மூன்று சருக்கங்களும் கொண்டது. 4286 விருத்தப்பாக்கள் அமைந்துள. இடைச் செருகலாக அமைந்த பாடல்களும் இந்நூலில் உண்டென்பர். சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்

றைக் கறுவான் புகுந்து, 63 நாயன்மார் வரலாற்றையும் அத்துடன் இணைத்துச் சொல்லிப், பின்னர் சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாயம் சென்றது வரையுள்ள வரலாற்றைத் தெளிவாக விளக்கிச் செல்கிறார், சேக்கிழார். "இந்நூலைக் கொண்டுதான் பல்லவர் காலத்தமிழகத்தை ஒருவாறு அறியமுடியும்" என முனைவர் இராசமாணிக்கனார் குறிப்பர். இதனால் இதனை ஒரு வரலாற்றுக் காப்பியம் என்றே சொல்லலாம்.

சிறப்பு:

"அடியவர்" என்ற சொல்லுக்கே இலக்கணம் வரையறுக்கிறார். சேக்கிழார்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"
(திருக்கட்ட செய்யுள் 8)

எனும் பாடல் வகுக்கும் இலக்கணம் செம்மையானதாகும்.

அடியவர் தம் கொள்கையில் வெற்றிபெறுவது நிறவப் படுகிறது. எளிய நடையில் சிற்றூர் வருணனை சிறப்பாகக் காணப்படுகிறது. தெய்வத் திருவடியார்க்குள் சாதி, இன வேறுபாடின்றிச் சமத்துவக் கண்ணோட்டம் மேலோங்குமாறு படைக்கப்பட்ட இப்பெருநூல், அன்பு நெறி விளக்கும் அழகுத் தமிழ் நூலாகும். சேக்கிழார் காலத்தவரான ஒட்டக்கூத்தர் நடையில் வடமொழிக் கலப்பு காணப்பட, சேக்கிழாரின் செம்மாந்த தமிழ் நடை வடமொழிச் செல்வாக்கை உதறித்தள்ளி வெற்றிக்கொடி நாட்டியுள்ளது குறிப்பிடதக்கதும் பெருமைப் படத்தக்கதுமாகும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

சைவத் திருப்பதிகங்களைப் பன்னிரு திருமுறைகளாகத் தொகுப்பித்தவன் சோழ மன்னன் இராசராசன் ஆவான். இவனது வேண்டுகோட்கிணங்கவே நம்பியாண்டார் நம்பி அவர்கள் முதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்தளித்தார். பின்னர் பெரிய புராணத்தையும் சேர்த்துப் பன்னிரு திருமுறைகளாக வழங்கினர். இப்பன்னிரு திருமுறைகளும் தோத்திர நூல்கள் என வழங்கப்பெறும். இவையன்றி, சைவ சித்தாந்த சாத்திரங்களை எடுத்துரைக்கும் 14 கருவி நூல்களைச் சாத்திர நூல்கள் எனப் பகுப்பர்.

"உந்தி களிறு உயர் போதம் சித்தியார்
பிந்திரு பா உண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

எனும் பாடல் பதினான்கு சாத்திர நூல்களையும் தொகுத்துரைக்கும். இப்பதினான்கு நூல்களே மெய்கண்ட சாத்திரம் எனப்படும். எட்டு நூற்கள் உமாபதி சிவாசாரியார் என்பவராலும், இரண்டு நூற்கள் அருணந்தி சிவாசாரியாராலும் இயற்றப்பட்டுள்ளன.

1. திருவுந்தியார்:

இந்நூல் திருவியலூர் உய்ய வந்த தேவநாயனரால் கி. பி. 1148-இல் இயற்றப்பட்டதாகும். 45 தாழிசைகளில் சித்தாந்தக் கருத்துக்கள் விளம்பப்படும். "உந்தீபற" எனுஞ் சொல் ஒவ்வொரு பாடலிலும் எடுத்தாளப்படுதலால், "திருவுந்தியார்" எனும் பெயர் வழங்கிற்று.

2. திருக்களிற்றுப் படியார்:

இதனை இயற்றியவர் **திருக்கடவூர் உய்ய வந்த** தேவநாயனார். திருவுந்தியார்தம் ஆசிரியரின் மாணவரே இவரது ஆசிரியர். 100 வெண்பாக்களைக் கொண்டது. தில்லைக் கோவிலின் திருக்களிற்றுப் படியில் பாடியமையால் **திருக்களிற்றுப்படியார்** எனும் பெயர் ஏற்பட்டது திருக்குறள் மேற்கோளும் இதில் காணப்படும். நாயன்மார் நிகழ்த்திய அற்புதங்களுக்குக் காரணமாய வல்வினை, மெல் வினைகளை ஆசிரியர் விளக்குகிறார்.

3. சிவஞான போதம்:

பதினான்கு சாத்திர நூலுள்ளும் **தலைசிறந்த முழு முதல் நூல்** எனும் பெருமைக்குரியது. ஆசிரியர் மெய்கண்ட தேவர் (கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர்).இவர் வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் மனைவி வழி மரபினர் ஆவார். பரஞ்சோதி முனிவரிடம் ஞானோபதேசம் பெற்ற பெருமை இவருக்குண்டு.

இந்நூலில் 12 சூத்திரங்களும், 81 வெண்பாக்களும் காணப்படும். பிராமண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் எனும் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதற்குச் **சிவஞான முனிவர்** எழுதிய "**மாபாடியம்**" எனும் உரையுண்டு.

4. சிவஞான சித்தியார்:

மெய்கண்ட தேவரின் மாணவர் நாற்பத் தொன்பதின் மருள் ஒருவராய அருணந்தி சிவாசாரியார் இதனை இயற்றி னார். **பரபக்கம்**, **சுபக்கம்** எனும் இரு பிரிவுகளைக் கொண்ட இந்நூல் **சிவஞான போதத்தின் வழிநூலாகும்.** பிறர் மதத் தைக் கூறி மறுப்பது இதன் **முதல்பகுதியாகிய பரபக்கம்**ஆகும் 301 பாடல்களில் 14 சமய வாதிகளின் **கருத்துக்களைக்** கூறி

மறுக்கிறார். இரண்டாம் பகுதியாகிய சித்தியார் சுபபக்கம் 328 பாடல்களில் சைவ சித்தாந்த சமய உண்மைகளைக் கூறும். இவர் அந்தணர் மரபினராவார். **"பார் விரித்த நூலெல்லாம் பார்த்தறிய சித்தியிலே ஓர் விருத்தப் பாதி போதும்".**

5. இருபா இருபஃது:

தம்ஆசிரியர் மெய்கண்ட தேவரைத் தாம் வினாவுவது போலவும் அவர் விடையிறுப்பது போலவும் **அருணந்தி சிவாசாரியர்** இதனை இயற்றியுள்ளார். 20 பாக்களில் ஆணவம் கன்மம், மாயை இவற்றின் இயல்புகளைக் கூறுகிறார்.

6. உண்மை விளக்கம்:

இந்நூல் மனவாசகங்கடந்தார் என்பவரால் இயற்றப் பட்டது. இவரும் மெய்கண்ட தேவரின் மாணவரே. 53 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலும் ஆசிரியரிடம் ஐயங்கேட்க அவர் விடை தருவது போன்ற முறையிலேயே அமைந்துள்ளது. காலம் கி. பி. 1245.

7. சிவப்பிரகாசம்:

இது **சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும்.** இதன் ஆசிரியர் **உமாபதி சிவாசாரியார்.** இவரே **திருவருட்பயன் வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்** ஆகிய பிற ஏழு சாத்திரங்களையும் இயற்றினார். இவர் காலம் கி. பி. 14-ம் நூற்றாண்டு.

இவரது திருவருட்பயன் 100 வெண்பாக்களைக் கொண்டது. **வினாவெண்பா** 13 வெண்பாக்களே கொண்டது. அது ஞானாசிரியரிடம் சைவ சித்தாந்த உண்மைகளைக்

கேட்டு ஐயந் தெளியும் வகையில் அமைந்ததாகும். **போற்றிப் பஃறொடை** எனும் நூல் இவரது ஞானாசிரியர் மறைஞான சம்பந்தரைப் "போற்றி! போற்றி!" எனப் பஃறொடை வெண்பாவால் வாழ்த்துவதால் "போற்றிப் பஃறொடை" எனும் பெயர் பெற்றது. **கொடிக்கவி** எனும் நூல் தில்லையில் கொடியேறும் பொருட்டுப் பாடப்பட்ட தால் கொடிக்கவி எனும் பெயர் பெற்றது. இதில் நான்கு செய்யுளே உண்டு. **நெஞ்சுவிடு தூது** எனும் நூலில் தமது ஞானாசிரியரிடம் மாலை வாங்கி வருமாறு தமது நெஞ் சினைத் தூது விடுகிறார். இது கலிவெண்பாவில் அமைந்த 129 க்ண்ணிகளைக் கொண்டதாம். **உண்மை நெறி விளக்கம்** ஆறு விருத்தப் பாக்களில் "தச காரியம்" எனும் பத்தையும் விளக்கும். **சங்கற்ப நிராகரணம்** பிற மதங்களுக்கும் சைவ சித்தாந்தத்திற்குமுள்ள வேறுபாட்டை விளங்குவதாகும். பிற மதக் கொள்கைகளைக் மறுத்துரைப்பதால்[நிராகரணம்] இப்பெயர் பெற்றது.

வைணவர் தமிழ்த் தொண்டு

வைணவம் தழைத்தோங்கக் காரணமாயிருந்த ஆழ் வார்கள் பன்னிருவராவர். ஆழ்வார் என்பதற்கு இறைப் பற்றில் ஆழ்ந்தவர் எனப் பொருள் கூறுவர். சைவம் செழிக்கத் தொண்டாற்றிய நாயன்மாரைப் பின்பற்றி ஆழ் வார்களும் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் தோறும் சென்று இறைவனை வாழ்த்திப்பாடி வைணவம் வளர வழி செய்தனர். பன்னிருவர் பாடிய 24 நூல்களையும் "**நாலாயிர திவ்விய பிரபந்தம்**" என வகுத்துள்ளனர். நாலாயிரம் பாடல்களைக் கொண்டதால் நாலாயிர திவ்விய பிரபந்தம் என வழங்கினர். எனினும் 3,776 பாக்களே இதில் உள்ளன

பெரிய திருமடல் $184\frac{1}{2}$ கண்ணி, சிறிய திருமடல் $77\frac{1}{2}$ கண்ணி எனக் கொண்டு, கிரந்த எழுத்துக்களின்படி 4000 பாடல் களைக் கணக்குக் காட்டுவதுமுண்டு இந்நூலுக்கு வைணவ அடியார்கள் வகுத்துள்ள உரைகளை "வியாக்கியானம்" என்பர்.

முதல் மூவர்:

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர். காலத்தால் முற்பட்ட இவர்தம் காலம் 5-ஆம் 6-ஆம் நூற்றாண்டு என்றும், 7-ஆம் நூற்றாண்டு என்றும் கருத்து வேறுபடுவர். கா. சு. பிள்ளை அவர்கள் "மூவரும் 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினர்" என நிறுவுவர்[1]

இவருள் பொய்கையார் காஞ்சியிலும், பூதத்தார் மாமல்லபுரத்திலும், பேயாழ்வார் மயிலையிலும் பிறந்தவ ராவர். மூவரும் முறையே முதல் மூன்று திருவந்தாதி களைப் பாடினர். மூவரது நடையிலும் வேறுபாடில்லை. எனினும் முதல்வர் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் உண்டு.

ஒருமுறை திருக்கோவலூர் சென்று இறைவனை வழி பட்ட பொய்கையார் இரவில் அடியவர் ஒருவரின் இல்லத்தில் தங்கியபோது பேயாழ்வாரும் வந்து அதில் இடங்கேட்ட தாகவும், பின்னர் பூதத்தாழ்வாரும் அவண் வந்து சேரவே, ஒருவர் துயிலவும், இருவர் அமரவும், மூவர் நிற்கவும் மட்டுமே இடமிருந்த அத்திண்ணையில் மூவரும் நின்று கொண்டிருக்க, மூவர்க்கும் இடையே மேலும் ஒருவர் வந்து மூவரையும் நெருக்கிவிட்டு மறைந்தார். அஃது இறைவனாகிய திருமாலே என்றுணர்ந்த மூவரும் உடனே இறைவனைப் பாடினர் என்பது குருபரம்பரைச் செய்தி.

பொய்கையாழ்வார்,

1. இலக்கிய வரலாறு—கா சு. பிள்ளை

"வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் பொன்மாலை
இடராழி நீங்குகவே"

என்று பாடினார். பூதத்தாழ்வார்,

"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியாக—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

எனவும் பாடப் பேயார்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று"

எனவும் பாடினார்.

4. திருமழிசையாழ்வார்:

திருமழிசையிற் பிறந்தார் நாலாயிர திவ்விய பிரபந்தத்திலுள்ள திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி (100 வெண்பா) இரண்டையும் இவரே பாடியுள்ளார். சமணனாகிய பல்லவ அரசன் இவரை இகழ்ந்த காரணத்தால்

"கணி கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணி வண்ணா நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் சொல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்"

என இறைவனையும் தம்முடன் அழைத்துக் கொண்டு காஞ்சியை விட்டேகினார் என்பர்.

"அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பில்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவ்னே யாதலால் இன்று"

எனச் சமயக் காழ்ப்போடும் இவர் பாடுகிறார்,

5. நம்மாழ்வார்:

நெல்லை மாவட்டத்திலுள்ள ஆழ்வார்திருநகரி எனும் திருக்குருகூரில் வேளாண்குடியில் பிறந்தவர். ஆழ்வாருள் தலைசிறந்தவர் இவரே. ஊமையாகப் பிறந்த இவரைப் பெருமாள் கோவில் புளிய மரத்தடியிற் கிடத்தினர் என்றும், 16 ஆண்டுகள் அங்கேயே தவமியற்றித் திருமால் மீது பாடல்கள் புனைந்தார் என்றும் கூறுப, இவரைச் சடகோபன் பராங்குசர், குருகூர்மாறன் என்றும் அழைப்பர். இவரது திருவாய்மொழி பத்தித்துறை கொண்டு பகவானை அனுபவித்து, உய்வு பெற்ற அவரது அனுபவ வெள்ளமாய்க் காட்சியளிக்கிறது. திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன இவரது நூல்கள். "வேதம் தமிழ் செய்த பெருமாள்" என இவரைப் புகழ்வர்.

6, மதுர கவியாழ்வார்:

திருக்கோளூரில் பிறந்த இவர், அயோத்தியில் நம்மாழ்வாரைப் பற்றிக் கேள்விப்பட்டுத் திருக்குருகூர் வந்து நம்மாழ்வாரின் சீடராக ஒழுகினார். நம்மாழ்வார் பாடல்களைத் தம் கைப்பட எழுதி, அவரது திருவுருவத்தையே அமைத்து வழிபட்டு வந்தார். நம்மாழ்வார் மீது அவர் பாடியதே "கண்ணி நுண் சிறுத்தாம்பு" நம்மாழ்வாரை உடலாகவும், பிற ஆழ்வார்களை உறுப்புக்களாகவும் உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

7. குலசேகர ஆழ்வார்:

திருவஞ்சைக்களத்தில் தோன்றியவர். சேரநாட்டு மன்னர். இவர் தம் மகனுக்குப் பட்டம் சூட்டிய பின் துறவு பூண்டு, சீரங்கம், காஞ்சி முதலிய திருத்தலங்கள் வத்து வழி பட்டார். இவர் 'பெருமாள் திருமொழியை' அருளினார். முகுந்த மாலை எனும் நூலை வடமொழியிலும் எழுதினார்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத்து யர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளாவு னதருளே பார்ப்பன் அடியேனே"

என நெகிழ்ந்து பாடுவார்.

8. பெரியாழ்வார்:

இராமநாதபுர மாவட்டம் வில்லிபுத்தூரில் பிறந்தவர். திருமாலுக்கு மாலை கட்டிச் சார்த்தும் பணியினர். கி.பி.815 முதல் 840 வரை மதுரையில் ஆட்சி செய்து வந்த வல்லப தேவன் என்ற மன்னனிடம் வைணவத்தை நிலை நாட்டிப் பொற்கிழி பெற்றார். 'பெரியாழ்வார் திருமொழி, திருப்பல் லாண்டு இவரது நூல்களாம். கண்ணனைப் பற்றியே மிகுதி யும் பாடியுள்ளார். கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு பாடிய பாடல்கள் சுவையும், சிறப்புமிக்கன. பிள்ளைத் தமிழிலக்கியத்திற்கு வித்திட்டவர் இவரே.

"மாணிக்கம் கட்டி வயிரமிடை கட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச்
சிறுதொட்டில்
பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையமளந்தானே தாலேலோ" (பெரி. திரு. 44)

9. ஆண்டாள்:

இவரைப் பெரியாழ்வார் நந்தவனத்தில் கண்டெடுத்து வளத்தார். ஒரு நாள் இறைவனுக்குச் சூட்ட வேண்டிய மாலை எடுத்து ஆண்டாள் சூடி அழகு பார்த்ததாகவும், அது கண்ட பெரியாழ்வார் இறைவனுக்குச் சூட்ட வேறு மாலை தொடுக்க முனைந்ததாகவும், இறைவன் 'கோதை சூடிக் கொடுத்த மாலையே வேண்டும்' எனக் கனவில் கூற, அன்று முதல் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே இறைவனுக்குச் சார்த்தப்பட்டது எனவும் கூறுவர். இதனால்'சூடிக் கொடுத்த நாச்சியார்' என இவர் அழைக்கப்பட்டார். நாச்சியார் திருமொழி, திருப்பாவை என்பன இவரது நூல்கள்.

10. தொண்டரடிப் பொடியாழ்வார்:

திருதொண்டங்குடி எனும் ஊரில் பிறந்த இவர் திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தைக் கண்டு களிப்புற்று நாளும் வணங்கி வந்தார். திருமாலை, திருப்பள்ளி எழுச்சி என்பன இவரது நூல்கள். துயிலெடை நிலை என்ற சங்கப்பாடல் துறையை அமைத்து இறைவனைத் துயில் எழப் பாடுகிறார்.

11. திருப்பாணாழ்வார்:

இவர் உறையூரில் பிறந்தார். உயர் குலத்தில் பிறந்தாலும், தாழ்ந்த குலத்தைச் சார்ந்த பஞ்சமரால் வளர்க்கப் பட்டமையால் திருவரங்கப் பெருமானைக் கோவிலினுட் சென்று வணங்க முடியாமல் காவிரிக்கரையில் நின்று தொழுதார். அடியவர் நிலைக்கிரங்கிய பெருமாள் அவரை அழைத்துவரும்படி அருச்சகரிடம் அசரீரியாகக்கூற,அர்ச்சகர் ஆழ்வாரைத் தம் தோளிலேயே கோவிலுட் கொணர்ந்தார், ஆழ்வார் பெருமாளைக் கண்டு களித்து, 'அமலனாதி பிரான்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். இவர் பாடியது பத்துப் பாக்களைக் கொண்ட இந்த ஒரே பதிகமே ஆகும்.

12. திருமங்கையாழ்வார்:

நீலி எனும் படைத்தலைவனுக்கு மகனாவார். நாலுகவிப் பெருமாள் என்ற பெயரும் இவர்க்குண்டு. சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி எனும் ஆறு நூல்களை இவர் இயற்றினார். இவை நம்மாழ்வாரின் நான்மறைக்கும் ஆறங்கமாக விளங்குவன என வைணவர் உரைப்பர். இவரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் ஒத்த காலத்தவர்.

பன்னிரு ஆழ்வார்கள் அருளிய அருட்பாடல்களை முறைப்படத் தொகுத்துப் பண்ணமைத்த பெருமை நாத முனிகள் என்பாரைச் சாரும். இவரது காலம் 9ஆம் நூற்றாண்டு. இப்பிரபந்தங்கள் தவிர பிற்காலச் சோழர் காலத்தில் தோன்றிய கம்பராமாயணம், வில்லிபுத்தூராரின் பாரதம் ஆகியனவும் வைணவ சமய இலக்கியங்களாகும்.

பிற்கால இலக்கியங்கள்
சோழர் காலம் (கி. பி. 800-1200)

பிற்காலச் சோழர் காலம் தமிழ்ப் பண்பாடு பொலிவுற்று விளங்கிய காலம் எனக் கூறி மகிழ்வர். வன்மை சான்ற தமிழ் மன்னர்கள் நிறுவிய ஆட்சி கி. பி. 800 முதல் 1200 வரை வெற்றிமேல் வெற்றி குவித்து, கலைகளின் வளர்ச்சிக்குக் காவல் அரண்களாயும், கலைஞர்தம் வாழ்வுக்குக் கலங்கரை விளக்கமாகவும் அமைந்தன. சமயப் பொறை மிகுந்து, போட்டியும் பொறாமையும் ஒழிந்து, தமிழ் இலக்கிய இலக்கணத் துறையில் புத்துணர்ச்சியும் புதுமுயற்சியும் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இக்கால கட்டத்தில் காணப்பட்டது. சமண, புத்தமத வல்லார் தமிழ்த் தொண்டாற்றுவதில் முனைந்து நின்றனர். தொல் காப்பியத்திற்குப் பின்னர் பல்வேறு தமிழிலக்கண நூல்கள் இக்காலத்தில் தோன்றின. புகழ்மிக்க பாவலர்களான திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவையார் போன்ற புலவர்கள் இக்காலத்தைச் சார்ந்தவர்களே. இக்காலத்தில் தோன்றிய இலக்கிய, இலக்கணங்களை விரிவாகக் காணலாம்.

இலக்கியங்கள்

சீவகசிந்தாமணி:

சீவகனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு புனையப் பெற்ற இக்காப்பியத்தைத் திருத்தக்கதேவர் எனும் சமண முனிவர் இயற்றியுள்ளார். இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களையும், 3145 செய்யுட்களையும் கொண்டுள்ளது. முழுவதும் விருதப்பாவிலேயே அமைந்த முதல் காப்பியம்

இதுவே. சக்ரசூளாமணி, கத்திய சிந்தாமணி போன்ற வடநூல்களைத் தழுவி இந்நூல் இயற்றப்பட்டதாகும். இதனை மணநூல் எனவும் அழைப்பர்.

கதை:

ஏமாங்கத நாட்டை ஆண்டுவந்த மன்னன் சச்சந்தன், தன் தேவியோடு (விசயை) அந்தப்புரத்திலேயே காலங்கழிக்கின்றான். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட கட்டியங்காரன் எனும் அமைச்சன் தன் சூழ்ச்சித் திறத்தால் நாட்டைக் கைப்பற்றிக் கொள்கிறான், மன்னனின் முன்னேற்பாட்டுத் திட்டத்தால், சூலுற்ற விசயை மயிற்பொறி ஏறி, சுடுகாடு ஒன்றில் இறங்குகிறாள். அங்குச் சீவகனைப் பெற்றெடுக்கிறாள். சீவகனைத் தனியே கிடத்திவிட்டுச் சுடுகாட்டில் மறைந்து கொள்கிறாள். அவ்வழி வந்த கந்துக்கடன் சீவகனை எடுத்துச்சென்று வளர்க்கிறான். அவ்விடம் வளர்ந்து வந்த சீவகன், பின்னர் ஏமாங்கத நாட்டின் மீது படையெடுத்து, கட்டியங்காரனை வென்று ஆளுகை செய்கிறான். இறுதியில் அவனும் துறவு மேற்கொள்கிறான் என்பதே கதை.

காப்பியச் சிறப்பு:

கம்பர்க்குக் காப்பிய உலகில் வழிகாட்டிய பெருமைக்குரியது சீவகசிந்தாமணியே. சந்தநயமிக்க பாடல்களைப் பாடுவதற்குக் கம்பர்க்கு முன்னோடியாக விளங்கிய திருத்தக்க தேவர், சீவகன் பகைவரிடம் சிக்கிக் கொண்டான் என்ற செய்தி கேட்டதும், கண்ணீர் வடித்துப் புலம்பும் விசயையின் கையறு நிலையைக் காட்டும்போது,

"நையாள் வளர்த்த சுநந்தை நவையுற வென்
அய்யா என் அய்யா அகன்றனையே"

எனக் கதறுவதையும்,

"கோவம்மா வாகிக் குடியோம்பித்தன் குடைக்கீழ்
பாவமே செய்தேன் பரிவெலாம் நீங்கினாற்
போவம்மா என்றுரைப்பப் போவேன்முன் போயினாய்
ஆவம்மா அம்மா என் அம்மா அகன்றனையே"

என்று கலங்கித் துடிப்பதையும் நெஞ்சந்தோயப் பாடுகிறார். அநங்கமாலை ஆட்டத்தைக் குறித்து,

"ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல் அநங்கமாலை
ஆடினாள் முறுவல் என்னும் தோழியை அய்யன் காண
ஓடரி நெடுங்கண் என்னும் ஓலையை எழுதி விட்டாள்
வாடிய வாறும் நோயும் உரைத்துவார் கொடியனாளே"

எனச் சிறப்பாகப் பாடுகிறார்,

தண்டியலங்காரம் குறிப்பிடும் பெருங்காப்பிய இலக்கணங்களைக் கொண்டு திகழும் இந்நூல், உவமைச் சிறப்பும், கற்பனை நயமும் நிறைந்ததாகும். அக்காலப் பழக்க வழக்கம், கலையின் வளர்ச்சி ஆகியவற்றைக் குறித்து அறிவதற்கும் இந்நூல் உதவுகிறது.

பிறகாப்பியங்கள்

வளையாபதி:

இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. முன்னோர் உரைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பாடல்களைத் தவிர, நூலாசிரியரைப் பற்றியோ நூலின் வரலாறு பற்றியோ யாதும் தெரியவில்லை. வைசிய புராணம் இந்நூலின் கதையைச் சொல்லும். புறத்திரட்டில் இந்நூலின் 66 பாடல்கள் காணப்படுகின்றன.

கதை:

நவகோடி நாரணன் என்னும் வைர வியாபாரி, பிற்பட்ட குலத்தினள் ஒருத்தியை மணப்பதால் ஊரார் வெறுப்புக்காளாகி, வேற்றுநாடு புறப்படுகின்றான். நிறை பொருளீட்டித் திரும்பிய அவன் புகாருக்குச் சென்று, தம் குலத்தாள் ஒருத்தியை மணந்துகொண்டு புகாரிலேயே வசிக்கிறான் மூத்த மனைவிக்குப் பிறந்த மைந்தன், தந்தையைக் கண்டுபிடித்துத் தன் தாயை அவனிடம் சேர்க்கிறான் என்பதே கதை.

குண்டலகேசி:

இதன் ஆசிரியர் நாகுதத்தனார் குண்டலகேசி விருத்தம், அகலக்கவி என்ற பெயர்களும் இதற்குண்டு. பலவிடங்களில் சொல்லும் பொருளும் விளங்காது அமைந்துள்ளதால் "அகலக்கவி" எனக் குறிப்பர். இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. குண்டலகேசியில் 25 பாக்களும், நீலகேசியுரையில் 180 பாக்களும், புறத்திரட்டில் 19 பாக்களும் ஆக 224 பாக்களே கிடைத்துள்ளன காப்பியத் தலைவி குண்டலகேசியின் வரலாறு பாளி மொழியில் எழுதப்பட்ட பௌத்தமத நூலாகிய "தோரி காதையிலும்" "தாம் பாதா" "அங்குத்தா நிகாய" போன்ற நூல்களிலும் உள்ளதாகக் கூறுவர். "நீலகேசித் திரட்டு" எனும் உரை நூலில் இவ்வரலாறு உள்ளது. இது தருக்க நூல் என்று "யாப்பருக்கல விருத்தி" மூலம் தெரிகிறது

கதை:

இராச கிருகம் என்ற நாட்டு மன்னன் மகள் பத்திரை. கள்வனொருவனைக் காதலித்து மணந்த அவள், ஊடலின் போது கள்வன் என அவனைத் திட்டிவிட்டாள். அதனைப் பொறுக்கமாட்டாத அவன், தந்திரமாக மலையுச்சிக்குப் பத்திரையைக் கூட்டிச் சென்று, கொல்வதற்கு முயன்றான். அவனது திட்டத்தை அறிந்துகொண்ட பத்திரை, அவனையே மலையுச்சியினின்று தள்ளிவிட, அவன் பிணமானான். பின் அவள் சமணத்தைத் தழுவினாள், எனவே சமண முறைப்படி

அவள் கூந்தல் களையப்பட்டது, களைந்த கூந்தல் மீண்டும் முளைத்தபோது, சுருண்டு வளர்ந்ததால் அவளுக்குக் குண்டல கேசி எனும் பெயர் வழங்கப்பட்டது.சாரிபுத்தர் என்பவரிடம் இவள் வாதில் தோற்றதால் அவரடி பணிந்து, புத்த சமயத் திற்கு மாறிவிட்டாள்.

''பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறு மிளமை செத்தும்
மீளுமின் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாம் சாகின்றோமால் நமக்கு நாம் அழாதது என்னோ''

எனும் பாடல் சிறப்பானதாகும்.

(ஐம்பெரும் காப்பியங்கள், எனும் தலைப்பில் கட்டுரை கேட்டால் இவற்றோடு சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியங்களையும் சேர்த்துக் கொள்க)

(ஐங்குறுங்காப்பியங்கள் வரிசை சார்ந்தன)

சூளாமணி:

ஐங்குறுங்காப்பியங்கள் வரிசையில் இந்நூல் சிறப் பானது. ஆசிரியர் தோலாமணித்தேவர். இவரது இயற் பெயர் வர்த்தமானதேவர். இந்நூலுக்குச் சூடாமணி எனும் பெயரும் உண்டு. (நாட்டுச் சருக்கம் முதல் முத்திச் சருக்கம் ஈறாக) 12 சருக்கங்களைக் கொண்டது. 2131 விருத்தப்-பாக்கள் உள்ளன. இந்நூல் வடமொழியிலுள்ள ஸ்ரீ புராணத்தின் தழுவலாகும். இதன் காலம் 10-ஆம் நூற்றுண்டு.

கதை:

போதனா மாநகரை ஆண்டு வந்த மன்னன், பயாபதி அவனுக்குத் திவிட்டன்விசயன் என இரண்டு மைந்தர்கள். திவிட்டன் வன்மைக்குப் பேர் போனவன். பயாபதி என்பவன்

அச்சுவகண்டன் எனும் மன்னனுக்குத் திறை செலுத்தி வில்லை. அதற்குக் காரணம் திவிட்டனே என்பதறிந்த அச்சுவகண்டன் மாய சிங்கம் ஒன்றை ஏவித் திவிட்டனைக் கொல்ல முனைந்தான். அதுவோ திவிட்டனுக்கு அஞ்சி ஓடிற்று. அப்போது உண்மைச் சிங்கம் ஒன்று திவிட்டன் மீது பாய, அவன் அதன் வாயைக் வித்துக்கொன்றெரிந்தான். அவனது வீரம் பற்றி அறிந்த கிழித்தியாதரவேந்தன் தன் மகள் சுயம்பிரபையைத் திவிட்டனுக்கு மணம் முடித்து வைத்தான். அச்சுவகண்டன் திவிட்டனோடு போர் தொடுத்து இறந்தான்.

திவிட்டனுக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர். மகள் சோதிமாலை என்பவள் தன் மாமன் மகனை மணந்தாள். அவள் தங்கையும் திவிட்டன் சகோதரனான விசயனையே மணந்தாள். தம் மைந்தர் இருவரையும் ஆட்சியில் அமர்த்திவிட்டுப் பயாபதி துறவறம் ஏற்று "உலகின் முடிக்கோர் சூளாமணியானான்" என்பதே கதை.

சிறப்பு:

இந்நூலில் அரிய கருத்துக்கள் காணப்படுகின்றன. உலகில் ஒருவன் எல்லார்க்கும் நல்லவனாக இருக்க முடியாது என்பதைச் சிறப்பாக விளக்குகிறார், ஆசிரியர். திங்களின் ஒளியைக் கண்டு ஆம்பல் மலர்ந்த போதிலும், தாமரை குவிந்து விடுகிறது. அதுபோல் ஒருவர்க்கு இனியவராக விளங்குவார் யாவருக்கும் இனியவராகி விடமுடியாது என்பதை "எங்குளர் உலகுக்-கெல்லரம் ஒருவராய் இனிய நீரார்" (சூளா-292) எனச் சொல்வார் தோலாமனித் தேவர்.

நீலகேசி;

குண்டலகேசி எனும் புத்த சமயக் காப்பியத்திற் கெதிராக எழுந்தது. இதன் ஆசிரியர் பெயர் தெரிய

வில்லை. புத்த சமயக் காய்ச்சல் இந்நூலில் உண்டு. பத்துச் சருக்கங்களைக் கொண்டது. இதற்கு வாமன முனிவர் விருத்தியுரை கண்டுள்ளார் "நீலகேசித் தெருட்டு" என்றும் இந்நூல் வழங்கப்படும் சமண மதம் சார்ந்த சமயக்கொள்கை பரப்பிய பழையனூர் நீலி பற்றிய கதையே இந்நூல்.

யசோதர காவியம்:

யசோதரன் வரலாறு கூறுவதால் இது யசோதர காவியம் எனப்பட்டது ஆசிரியர் தெரியவில்லை, 5 சருக்கங்களைக் கொண்டது. வடமொழியிலுள்ள உத்தபுராணத்தைத் தழுவி எழுதப்பட்டதாயினும், கதையில் சிறு மாறுபாடுள்ளது. உயிர்க் கொலைகூடாது என்பதை வலியுறுத்தும் இச்சமணக் காப்பியம், சிற்றின்ப வாழ்வின் இழிவையும், துறவறத்தின் சிறப்பையும் விளக்குகிறது. மாரிதத்தன் எனும் (ராசமாபுர) மன்னன் சண்டமாரிக்கு விலங்குகளையும் இரண்டு மனிதரையும், பலியிட விரும்பினான், அம்மனிதருள் ஒருவன், பழம்பிறப்பில் தான் இராசமாபுர மன்னன் அசோகனுக்குப் பிறந்த யசோதரன் என்பவனே என்பதைச் சொல்லி முற்பிறப்பில் சண்டமாரிக்கு மாக்கோழி பலியிட்ட காரணத்தால் தான் அடைந்த பல்பிறவித் துன்பங்களை விவரித்து "மாக்கோழியால் வந்த துன்பம் இதுவாயின் மனித உயிரைப் பலியிட்டால் வரும் துன்பம் எப்படியிருக்கும் என அறிந்து கொள்க" என மன்னனுக்கு எடுத்தியம்புகின்றான் அவனும் உயிர்க் கொலையை நிறுத்தி விட்டு, சமண முனிவரைச் சார்ந்து நோன்பிருந்து, முத்தி பெற்றான் என்பதே கதை.

உதயணகுமார காவியம்:

வத்தவநாட்டு மன்னன் உதயணனின் கதையைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. உதய காலத்தில் பிறந்ததால் உதயணன் எனும் பெயருண்டாயிற்று. உதயணன் கதை, பெருங்கதை, கொங்குவேள் மாக்கதை எனவும் இது வழங்கப்பெறும். ஆசிரியர் கொங்குவேளிர். விருத்தப்பாவால் ஆனது. 367 பாடல்கள் உள. பாடல்களின் அடிகள் சிலவிடங்களில் சிதைந்துள.

உதயணன் பல்கலைத் தேர்ச்சி மிக்கவன், தன் யானையைத் தேடிச் செல்லும்போது, பகைமன்னன் பிரச்சோதனன் என்பவனால் சிறை பிடிக்கப்பட்டான். பிரச்சோதனின் பட்டத்து யானை மதம் பிடித்த போது அதனைத்தன் யாழிசையால் அடக்கிக் காட்டினான். எனவே பிரச்சோதனன் தன் மகளுக்கு (வாசவதத்தை) யாழ் கற்பிக்குமாறு உதயணனை அமர்த்தினான். உதயணன் பின் அவளையே மணந்து சுபந்தியில் வாழ்ந்தான். இன்ப வாழ்வில் மூழ்கிவிட்ட அவனது மனத்தை மாற்ற விரும்பிய நண்பன் (அமைச்சன்) வாசவதத்தை தீக்கிரையானதாகப் பொய் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தான். அவளை எழுப்பும் பொருட்டு முனிவரை நாடிச் சென்றான், உதயணன். அங்குக் காசி அரசன் மகள் பத்மாவதியைக் காதலித்து மணம் செய்தான். பின் வத்தவநாடு சென்று ஆட்சி புரிந்தான். அங்கு வாசவதத்தையும் வந்து சேர்ந்து கொண்டாள் அவ்விருவரோடு, மானனீகை, விரிகை ஆகிய பெண்களையும், மணந்தான். முதல் இருவரும் இரண்டு மக்களைப் பெற்றனர். தன் மைந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு, மனைவியரோடு துறவு மேற்கொண்டான், உதயணன். இதுவே கதை.

இக்கதைக்கும் சிந்தாமணிக்கும் சில உறவுகள் உண்டு. சிந்தாமணியில் மயிற்பொறி வருவது போல இதில் இயந்திர யானை வருகிறது. சீவகன் பல்லோரை மணப்பதுபோல், உதயணன் நால்வரை மணக்கிறான். சீவகனுக்குத் தோழர் பலர் உதவுவது போல், உதயணனுக்கு நான்குபேர் உதவுகின்றனர்.

நாககுமார காவியம்:

இந்நூல் அழிந்துவிட்டது. இது குறித்து எச்செய்தியும் தெரியவில்லை. ஆசிரியர் சமணர் என்பர்.

குறிப்பு:

ஐங்குறுங்காப்பியம் என்க்கேட்டாலும் சமணர் தமிழ்த்தொண்டு பற்றிக்கேட்டாலும் சூளாமணி முதல்நாக குமார காவியம் வரை எழுதுக. மேலும் மேரு, மந்தரன்

எனும் அரசகுமாரர்கள் வரலாறு பற்றிய 1406 பாடல் களைக் கொண்ட சமண மதநூலான மேருமந்திர புராணம் (ஆசிரியர் வாமன முனிவர் என்னும் மல்லி சேனர்) மாபுராணம், சாந்திபுராணம், மல்லிநாதர் புராணம் ஆகியவற்றைப் புராணங்கள் வரிசையிலும், திருத்தக்கதேவர் எழுதிய நரிவிருத்தம், அவிரோதி என்பார் பாடிய (24 தீர்த் தங்கரருள் ஒருவரான நேமிநாதரைப்பற்றி) அந்தாதிச் செய் யுட்களால் ஆன திருநூற்றந்தாதி, மற்றும் திருவெம்பாவை ஆகியவற்றை இலக்கிய வரிசையிலும், நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் ஆகியவற்றை இலக்கண வரிசையிலும், திவாகரநிகண்டு, பிங்கலநிகண்டு, சூடாமணி நிகண்டு ஆகியவற்றை நிகண்டுகள் வரிசையிலும் (சோழர்கால இலக்கண வளர்ச்சி எனுங் கட்டுரையில் உள்ளன) சேர்த்தெழுதி சமணர்களின் தமிழ்த் தொண்டு பற்றிய கட்டுரையை முடித்துக் கொள்க.

கம்பராமாயணம்

உயர் கம்ப நாடனுடன் கவிதை போயிற்று" என்பார், பாரதி. அருந்தமிழ் மொழிக்குக் கம்பன் வழங்கிய பெருங் கொடைக்காப்பியமே கம்பராமாயணமாகும். சிந்து பயிலும் சொற்களைக் கூட்டி நிறுத்தித் தமிழின் வன்மைக்கும், தனித் தன்மைக்கும் சான்று காட்டும் பத்தாயிரத்துஐந்நூறு பாடல் களை வெள்ளமாகக் கொட்டிக்குவித்த கம்பனின் திறம், கப்பிய உலகின் சாதனை மகுடத்தில் மின்னும் வைரமாகப் பொலிவுற்றுத் திகழ்கிறது "வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும்தொன்னூற்றாறே!எனக் கம்பனின் கவித்திறமை குறித்து இறுமாந்து பேசுவர், இலக்கிய ஆய்வாளர். உலகக்

காப்பியங்களிடையே கலங்கரை விளக்கமாக நின்றொளிரும் சிறப்பு கம்பராமாயணத்திற்கு உண்டெனின் அது மிகை யன்று. கம்பனின் கைவண்ணத்தால் உருப்பெற்றஇராமாயண பாத்திரங்கள் உயிர்த்துடிப்புடன் விளங்கும் பெற்றிமை மிக்கவையாம்.

வருணனைச் சிறப்பு:

இயற்கை விளக்கக் காட்சிகளைச் சித்திரிக்கும் போ தெல்லாம் கற்பனை உலகின் முடிசூடா மன்னராகவே காட்சி யளிக்கிறார், கம்பர்.

> "தண்டலை மயில்கள் ஆடத்
> தாமரை விளக்கம் தாங்கக்
> கொண்டல்கள் முழுவின் ஏங்கக்
> குவளை கண்விழித்து நோக்கத்
> தெண்டிரை எழினி காட்டத்
> தேம்பிழி மகர யாழின்
> வண்டுகள் இனிது பாட
> மருதம் வீற்றிருக்கும் மாதோ"

எனப் பாடும்போது, மணிமேகலை ஆசிரியரினும் ஒருபடி மேலே சென்று விடுகிறார், கம்பர். ஒவ்வொரு காட்சியை யுமே உயிர் ஓவியமாகத் தீட்டுவதில் ஒப்பாருமிக்காருமின்றித் திகழுகின்றார், கம்பர். சீதையைக் கண்டதாக இராமனிடம் உரைக்கும் அனுமன்,

> "இற்பிறப்பென்ப தொன்றும்
> இரும் பொறை என்ப தொன்றும்
> கற்பெனும் பெயர தொன்றும்
> களிநடம் புரியக் கண்டேன்"

எனக் கூறும்போது, கண்ணகியின் அகநிலையையும் சித்திரித்து விடும் காட்சி சிறப்பாக அமைந்துள்ளது.

பாத்திரப் படைப்பு:

பாத்திரப் படைப்பு காப்பியத்திற்கு இன்றியமையாத

தாகும், பாத்திரப் படைப்பொன்றே சாதாரணமாகக் கதைகூறும் நிலையினின்று காப்பியத்தை வேறுபடுத்திக் காட்டவல்லது, நேருக்குநேர் பாத்திரங்களைச் சந்திப்பது போன்ற உணர்ச்சியை ஊட்டுவது காப்பியத்தின் சிறப்புக்குத் துணைபுரியும். இதனையே நாடகப் பண்பு என்று நவில்வர் அதுபோல், உணர்ச்சிகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பச ந்தங் களை அமைத்துச் செம்மைப்படுத்துவதும் காப்பியத்தின் வெற்றிக்கு வேண்டற்பாலதாகும். இவ்வனைத்துப் பண்பு களையும் குறைவறக் கொண்டு, நிறைவுறத் திகழும் வகையில் கம்பர் தமது இராமாயணத்தைப் படைத்துள்ளார்.

சந்தநயம்:

இடத்திற்கேற்ப யாப்பின் அமைப்பை மாற்றி, நிகழ்ச் சிக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ற ஓசை நயத்தைக் கையாளுவதில் தனித்திறமை மிக்கவர், கம்பர். தாடகையின் கோலத்தைக் காட்டும் கலி, வல்லேழுத்துக்களாகவே பெய்து, அவளது கொடிய உருவத்தின் கொடூரக் காட்சியைக் கண்முன் நிறுத்திவிடுகிறார்.

"இறைக்கடை துடித்த புருவத்தள் எயிறென்றுனும்
பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்
மறைக்கடை அரக்கி வடவைக் கனலிரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ
விழித்தாள்"

சூர்ப்ப நகையின் நளின சாயலை நயம்படக் காட்ட விரும்பிய கம்பர்

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மங்க
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீரடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

எனத் தம் மென்மையான உணர்வை மென்மையான சொற்களாலேயே வடித்து விடுகிறார்.

அறிஞர் பாராட்டு:

வால்மீகி இராமாயணத்தின் தழுவலாக அமைந்த போதிலும், முதனூலைக் காட்டிலும் பல்வகையிலும் சிறந்து விளங்கும் அற்புதப் படைப்பாக மிளிர்வது கம்பராமாயண மாகும். வால்மீகியையும், கம்பரையும் சுவைத்தறிந்த கால்டு வெல் அய்யர் "ஹோமரின்" "இலியட்டுக்கும்" போப் அய்ய ருடைய "இலியட்டுக்கும்" இடையேயுள்ள வேறுபாடே வால்மீகி இராமாயணத்திற்கும், கம்ப ராமாயணத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு" என மனந்திறந்து பாராட்டுவார். "தமிழ்க் காப்பிய படைப்பு கம்பரின் கலைப் படைப்பில்தான் உச்ச நிலையை அடைந்தது" என்பது அறிஞர்தம் மதிப்பீடா கும். தமது "கம்பராமாயண ரசனை" எனும் நூலில் கம்பரின் கவிப்பெருமையைப் பலபடப் போற்றியுரைப்பார், வ. வே. சு. அய்யர்.

கம்பரின் காலம்:

கம்பரின் காலம் பற்றி அறிஞர்கள் கருத்து வேறு படுவர். "எண்ணிய சகாப்தம் எண்ணூற்று ஏழின்மேல்" எனும் வரியைக்கொண்டு கம்பரின் காலம் கி. பி. 885 எனச் சிலர் கூறுவர். உத்தமன் என்ற சொல் ஆளப்படுவது கொண்டு உத்தம சோழனின் காலமான 10-ஆம் நூற் றாண்டே கம்பரின் காலம் என முடிவிடுவாரும் உளர். மூன்றாம் குலோத்துங்கன் காலமான கி. பி. 1185 கம்பரின் காலமென நிறுவுவாரும் உண்டு. இவற்றுள் கி. பி. 12ஆம் நூற்றாண்டு என்ற காலவரையறையே பொருத்தமான தென அறிஞர்கள் துணிகுவர்.

கலிங்கத்துப்பரணி

பரணி இலக்கியம் ஒரு குறிப்பு:

வீரத்தைச் சிறப்பித்துப் பாடும் புறப்பொருள் இலக் கியமே பரணி இலக்கியமாகும். "பரணி பிறந்தான் தரணி ஆள்வான்" என்பது பழமொழி. பிறந்தவனைப் பெரு வீரனாக்கும் தன்மை பரணி நட்சத்திரத்திற்கு உண்டென்பர்.

"ஆனையாயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி"
"அளவடி முதலா அடியிரண்டாக
உளமகிழ் பரணி உரைக்கப்படுமே"

என்பது "இலக்கண விளக்கப் பாட்டியல்" விளம்பும் இலக்கணமாகும். கலித்தாழிசைகளால் பரணி இலக்கியம் பாடப்பெறும். கி பி. 9ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரை பரணி நூல்கள் பல தோன்றியுள. 12ஆம் நூற்றாண்டு வரை மன்னர் பற்றிய பரணி நூல்களே எழுந்தன. பின்னர் சமயச் சார்பான பரணி நூல்களும் தோன்றின. எனினும் கலிங்கத்துப்பரணி, தக்கயாகப் பரணி ஆகிய இரண்டு நூல்களே பரணி இலக்கியத்துள் தலைசிறந்து விளங்குகின்றன.

அமைப்பும் பெயர்க் காரணமும்:

பரணி இலக்கியம் பத்து வகை உறுப்புகளைக் கொண்டது. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, கூழடுதல் என்பன அவை. பரணி எனும் பெயர்க் காரணம் குறித்துப் பல்வகைக் கருத்துக்கள் நிலவிடினும், பரணி என்பது நட்சத்திரம் பற்றி வந்த பெயரே எனுங் கருத்து ஏற்புடைத்தாகும். பரணி யமனையும் காளியையும் தெய்வங்களாகக் கொண்ட பெருநாள். பிறந்தவனைப் பெருவீரனாக்கும் திருநாள், யானை பிறந்த நன்னாள். எனவே யானைகளையும், பல்வேறு உயிர்களையும் கொன்று, யமனுக்குக் காணிக்கையாக்குவதினாலும், அந்நாளில் காளிக்குப் பலி கொடுத்துத் துணங்கைக் கூத்தாடித் தலைவனின் சிறப்பை இடையிடையே பாடிப் பரவி வழிபடுதலாலும் பரணி எனச் சிறப்பின் மிகுதியால் அழைக்கப்படுகிறது எனலாம்,

கலிங்கத்துப்பரணி:

காலத்தாலும், கருத்து வள்ளமையாலும் முதன்மையும்

பெருமையும் மிக்க பரணிநூல் கலிங்கத்துப் பரணியாம். சோழர் காலத்தெழுந்த இந்நூல், குலோத்துங்கச் சோழனின் படைத்தலைவனான கருணாகரன், கலிங்க மன்னன் அநந்த பதுமனை வெற்றி கொண்ட சிறப்பினை விதந்தோதுவதாகும். சைவ சமயத்தவரான செயங்கொண்டார் இதனைப் பாடியுள்ளார். சிறந்த ஓசைநயமும், சுற்பனை வளமும் செறிந்த இந்நூல் எளிய நடையில் இயல்வது; கற்பாரைப் பிணிக்கும் காவியச் சுவை கெழுமியது; பரணிக்கோர் செயங் கொண்டார்" எனுங் கூற்று, இந்நூலின் சிறப்பினை விளக்கும்.

பிற புலவர்கள்:

சோழர் காலத்துப் பிற புலவர்களுள் பெயர் பெற்றோர் ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்தி ஆகியோர் ஆவர். ஒட்டக்கூத்தர் பாடிய "மூவருலா" விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகியவரைப் பற்றிப் பாடப்பட்ட உலா இலக்கியமாகும். "தக்கயாகப் பரணி" என்பது இவர் பாடிய பரணி இலக்கியமாகும். 'இவரது குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்" எனும் நூல் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் மூந்தியதாகும். "ஈட்டி எழுபது" பாடியதும் ஒட்டக்கூத்தரே.

ஔவையார், ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களைத் தந்தார், விநாயகரைப் பாடும்போது,

> "பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
> நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
> சங்கத் தமிழ் மூன்றுந் தா" எனப் பரவும்வெண்பா

உள்ளம் கவர்வதாகும்.

"வெண்பாவிற்கோர் புகழேந்தி" எனப் புகழேந்திப் புலவரைப் போற்றுவர். இவரது நலிவெண்பா நளனது வரலாற்றை வெண்பாவில் சொல்லச் செல்லும் காவியமாகும்.

இவ்வாறு, தமிழன்னைக்கு அழகூட்டும் காவியங்களைப் படைத்துப் பொன்றாப் புகழெய்திய புலவர்களைப் பேணிய சோழர் காலம், தமிழிலக்கண நூல்கள் பெருகி வளர்வதற் குரிய சூழ்நிலையையும் தோற்றுவித்துத், தமிழ் மறுமலர்ச் சிக்கு வித்தூன்றியது எனலாம்.

சோழர் கால இலக்கணங்கள்

சங்கத் தமிழ் மன்னராட்சி வீழ்ந்தபின். நிலைத்த தமிழராட்சி நிறுவிய பெருமைக்குரிய சோழர் காலம், பல்துறையிலும் பெருமை பெற்று விளங்கிற்று. தமிழிலக் கணத் துறையில் தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய பல இலக்கண நூல்கள் சோழர் காலத்தனவே. பல்லவர் காலத்தில் புறப் பொருள் வெண்பா மாலை, இறையனார் களவியல் உரை ஆகியனவே தோன்றியிருக்க, சோழர் காலத் தில் நன்னூல், நேமிநாதம், நம்பியகப் பொருள், வீரசோழியம், வெண்பா பாட்டியல் (வச்சணந்தி மாலை), தண்டியலங்காரம் பன்னிரு பாட்டியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய இலக்கண நூல்கள் மல்கி நிறைந்தன, "நிகண்டுகள்" எனும் பாடல் வடிவாய சொற்பொருள் அகராதிகளும் இக் காலத்தில் தோன்றின.

1. நன்னூல்:

இதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் எனும் சமணர் தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய இலக்கண நூல் களுள் நிலைத்த பெருமை கொண்டது நன்னூலாகும் தொல் காப்பியர் கருத்துக்களைத் தொகுத்துரைத்தும் காலத்திற்

கேற்ற இலக்கண மாற்றங்களை வரையறுத்துக் கூறியும் எழுத்து, சொல் ஆகியவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ள நன்னூல், புலவரிடையே பெருவழக்கினதாகும். இதற்கு மயிலைநாதர் உரையெழுதியுள்ளார். சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆகியோர் விருத்தியுரை கண்டுள்ளனர்.

2. நம்பியகப் பொருள்:

அகப் பொருளுக்கு மட்டும் இலக்கணம் வகுத்துள்ளது. ஆசிரியர் நாற்கவிராச நம்பி ஆவார். இவரும் சமணரே எனக் கூறுவர். ஆசிரியரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். இவரது காலம் 12ஆம் நூற்றாண்டாகும். தொல்காப்பியத்திற்குப் பின் அகப்பொருளுக்கு இலக்கணம் கூறிய நூல் இதுவே. இதில் அகத்திணை இயல், களவியல், கற்பியல், வரைவியல், ஒழிபியல் எனும் 5 இயல்கள் உள்ளன. பொய்யாமொழிப் புலவர் எழுதிய "தஞ்சை வாணன் கோவை" எனும் நூல் இதனைப் பின்பற்றி எழுந்ததாகும்.

3. வீரசோழியம்:

வீரசோழன் என்னும் மன்னன் நினைவாக எழுதியதால் இப்பெயர் கொண்டு விளங்குகிறது. ஆசிரியர் புத்தமித்திரர் (புத்த மதத்தவர்). இது வடமொழி மரபொட்டி எழுதப் பட்டதாகும். ஐந்திலக்கணங்களையும் சுருக்கி உரைக்கிறது. இதற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

4. நேமிநாதம்:

எழுத்து, சொல் இரண்டனுக்கும் இலக்கணம் கூறு கிறது. ஆசிரியர் குணவீர பண்டிதர் எனும் சமணர். 95 சூத்திரங்களே உள்ளதால், இதனைச் "சின்னூல்" எனவும் வழங்குவர்.

5. பன்னிரு பாட்டியல்:

பாட்டின் இலக்கணம் கூறுவது. பாட்டியல் நூல்களுள் மிகவும் பழமையானது.

6. வச்சணந்திமாலை அல்லது வெண்பா பாட்டியல்:

குணவீர பண்டிதரே இதையும் இயற்றியுள்ளார். இவரது ஆசிரியர் பெயரான "வச்சணந்தி" எனும் பெயரைக் கொண்டு, வச்சணந்தி மாலை எனப் பெயரிட்டார். பன்னிரு பாட்டியலுக்குப் பின்னெழுந்த நூல்களில் சிறந்தது.

7, யாப்பருங்கலம்:

யாப்பின் இலக்கணம் கூறுவது. ஆசிரியர் அமிதசாகரர் எனும் சமணர். "யாப்பருங்கலக் காரிகை" எனும் நூலையும் இவரே எழுதியுள்ளார். "காரிகை கற்று கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே" எனும் மொழியால், காரிகையின் செல்வாக்கு உணரப்படும். வடமொழி மரபொட்டி அமைந்ததாகும். யாப்பருங்கல காரிகைக்கு குணசாகரர் உரை எழுதியுள்ளார்.

8. தண்டியலங்காரம்:

தண்டி என்பவா எழுதிய 'காவ்ய தரிசனம்' எனும் வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்ட அணியிலக்கணம் பற்றிய நூலாகும். ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

9. நிகண்டுகள்:

அ. திவாகர நிகண்டு: திவாகர முனிவர் எழுதிய நிகண்டென்பதால் இப் பெயர் பெற்றது. சேந்தன் எனும் மன்னன் வேண்டிக் கொண்டதன் பேரில் எழுதப்பட்டதால், சேந்தன் திவாகரம் எனவும் அழைப்பர். நிகண்டுகளில் பழைமையானது இதுவே.

ஆ. பிங்கல நிகண்டு: இதனைப் பிங்கலந்தை எனவும் குறிப்பர். பிங்கலர் என்பவர் எழுதியதாகும். இவர் திவாகர முனிவரின் மகனாவார்.

இ. சூடாமணி நிகண்டு: இதன் ஆசிரியர் மண்டல புருடர்.

ஈ. பிற நிகண்டுகள்: நிகண்டுகளின் செல்வாக்கு வளர்ந்தமையால் இக்காலத்தில் பல நிகண்டுகள் தோன்றின. உரிச்சொல் நிகண்டு, அசுராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு போன்றன அவற்றுள் சிலவாம்.

நாயகர் காலம்

[கி. பி. 1200–1600]

சங்க காலத்திற்குப் பின் செந்தமிழோடு வடமொழியும் பேரளவில் கலந்து, பெருவழக்காகி, செந்தமிழின் இனிமைக்கும் பெருமைக்கும் இடையூறாகத் திகழ்ந்தது அத்துடன் அமையாது பைந்தமிழைப் புறத்தொதுக்கி மேலோங்கும் முனைப்பும் சூழ்ச்சியும் அருந்தமிழுக்கு அவ்வப்போது விடப்பட்ட அறைகூவலாகக் விளங்கிற்று. எனினும் வேற்றுமொழிச் செல்வாக்கு, அயலவர் ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்து நின்று, தனது தனித்தன்மையைக் காத்துக் கொள்வதற்கு அன்னை மொழி அரும்பாடுபட்டுள்ளது என்பதைத் தமிழிலக்கிய வரலாறு கற்பார் உணராமற் போகார். சமயத்தின் பெயரால் தமிழ் மக்களின் உணர்வினை மழுக்கியும், சிதைத்தும் வெற்றிக் கொடி நாட்டிட விழைந்த வடமொழி வாணர்களுக்குத் துணை போகிய புலவர்கள் இடைக்காலத்தில் வாழ்ந்த போதினும், சேக்கிழார் போன்ற புலவர்கள் செந்தமிழைச் செழுந்தமிழாக மாற்ற முனைந்தமையும் புலனாகின்றது. எனினும் வடமொழிக் காப்பிய மரபுகளை

யும் இலக்கண மரபுகளையும் பின்பற்றித் தமிழ் மொழியில் பல படைப்புகளைத் தரும் போட்டியுணர்வு அக்காலத்துப் புலவர் பெருமக்களை இயக்கிக் கொண்டிருந்தமையால், சேக்கிழார் பாணி மற்றையவரால் பின்பற்றப்படவில்லை எனலாம். நாயக்கர்களின் ஆ சிக் காலத்தின் போதும், வடமொழிச் செல்வாக்கின் வெற்றிக் கொடி தமிழகத்தில் புதுப்பொலிவுடன் விளங்கியதற்குச் சமயத்தின் செல்வாக்கே காரணமாகும். சங்கத் தமிழ் மன்னர்களைப் போன்று தமிழ்ப் புலவர்களைப் பேணும் மன்னவர்கள் இக்காலத்தில் இல்லையென்பதால் புலவர்கள் சமயத்தைச் சார்ந்தும், வட மொழி மரபை ஒட்டியும் பாட முனைந்திருக்கலாம் எனக் கருதுவதற்கு இடமுள்ளது.நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் பெருகியமைக்கும் இதுவே காரணமாகும்,

சிற்றிலக்கியங்கள்:

தமிழில் எண்ணிறந்த சிற்றிலக்கியங்கள் உள்ளன. பிரபந்த மரபியல்,

> "பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாய்
> தொண்ணூற்றாறு தொகையவே"

எனச் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையைத் தொண்ணூற்றாறு எனக்குறிக்கும். "புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" எனும் தொல்காப்பிய நூற்பா புதுவகை இலக்கியங்கள் தோன்றுவதற்கும் புறனடை வகுத்துள்ளது. சிற்றிலக்கிய வகையுள் சில பிற்காலச் சோழர் ஆட்சியில் முகிழ்த்த போதினும், அவை மலர்ந்து மணம் வீசிய காலம் நாயக்கர் காலமாகும்.

1. உலா:

தொல்காப்பியம் கூறும் பாபிண்திணை வகை சார்ந்தது.

> "ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமையான"

எனும் தொல்காப்பிய நூற்பா உலா இலக்கியத்திற்கு வித்திட்டது என்பர். வடமொழி காமசாத்திரத்தில் உள்ள குறிப்புகளையும், சங்க இலக்கியங்களிலுள்ள குறிப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வகை இலக்கியம் எழுந்திருக்கலாம் என எண்ணுவாரும் உண்டு. பாட்டுடைத் தலைவராகிய கடவுளரோ மன்னவரோ, சான்றோரரோ உலாவரும் போழ்தில் எழுவகைப் பருவப் பெண்டிரும் அவர்மேல் காதலுற்றுப் பலவாறு மொழிவதாகக் கலிவெண்பாவில் பாடப்படுவதே உலாவாகும். தலைவனின் இயற்பெயராலோ, ஊர்ப்பெயராலோ, இரண்டும் சேர்ந்த பெயராலோ இந்நூலுக்குப் பெயர் வழங்கப்படுகிறது. இவ்விலக்கியம் முதனிலை (குடிப்பிறப்பு, நீதிமுறை, மரபு, பொருள் ஈட்டல், ஈகை, நீராடல், அணிகள், அணிதல், நகர மாந்தர் எதிர்கொள்ளுதல், யாதானுமோர் ஊர்த்தியில் ஏறிச்செல்லுதல்) பின்னெழுநிலை (ஏழுவகை பருவ மகளிர் தன்மை, தலைவனைக் காமுற்றுப்புகழ்தல்) அமையப் பாடப்படும். ஏழுவகைப் பெண்டிர் பற்றிய செய்திகள் பொதுவாகத் தனியே இடம் பெறும். ஆயினும் ஆளுடைப் பிள்ளை திருஉலா மாலையில் ஒருசேரத் தொகுத்துக் கூறப்படுவதைக் காண்கிறோம். திருக்குற்றால நாதருலாவில் மானிட மகளிரேயன்றி, தேவமகளிரும் சேர்ந்து நின்ற நிலை பாடப்படுகிறது.

பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றில் பாட்டுடைத் தலைவர்களின் உலாச் சிறப்பு விளம்பப்படினும், 8ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் என்ற சேர மன்னன் பாடிய ஆதியுலா எனப்படும் திருக்கைலாய ஞான உலாவே முதலில் தோன்றிய உலா இலக்கியமாகும். (பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது) முதலில் தோன்றிய முத்தான உலாநூல் இதுவெனப் பாராட்டுவர்.

"கோவை உலா அந்தாதிக்கோர் ஒட்டக் கூத்தன்" என்ற பாட்டு வரி ஒட்டக்கூத்தர் உலா பாடுவதினும் வல்லவர் என்பதை விளக்கும். சோழ மன்னர் மூவர் பற்றி இவர் பாடிய "மூவருலா" சிறப்பானதாகும்.

2. பரணி:

(கலிங்கத்துப் பரணி-சோழர்காலம் பற்றிய குறிப்பில் காண்க)

3. பிள்ளைத் தமிழ்;

பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகக் கருதிக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனும் பத்துப் பருவங்களில் பாடப்படும் சிற்றிலக்கிய வகையே பிள்ளைத் தமிழாகும். இஃது ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். பெண்பாற் பிள்ளைத் தமிழில் அம்மானை, நீராடல், ஊசல் என இறுதி முப்பருவங்களும் அமையும். கடவுளையோ, வேந்தரையோ, சான்றோரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படும், "குழவிக் கண் தோன்றிய காமப்பகுதி" எனும் தொல்காப்பிய நூற்பா இதற்குக் கருவாகும். குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் நூலே முதலில் தோன்றிய பிள்ளைத் தமிழ் நூலாகும். இது 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தரால் இரண்டாம் குலோத்துங்கன் மீது பாடப்பட்டதாகும். நூற்றுப்பத்துக்கும் மேலான பிள்ளைத் தமிழ் நூல்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் போன்றவை சிறப்பானவையாகும். பகழிக் கூத்தர் பாடிய திருச்செந்தூர் பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் அமைந்த ஒரு பாடல்.

"தேடரிய மணியரை ஞாண்

சேர்க்க வருக விரற் கிழி

செறிக்க வருக திலத நுதல்

தீட்ட வருக மறுகில் விளை

யாட வருக மடியிலெடுத்

தணைக்க வருக புதுப்பனிநீர்

ஆட்ட வருக நெறித்த முலை
அமுதம் பருக வருக முத்தம்
சூட வருக உடற் புழுதி
துடைக்க வருக ஒரு மாற்றம்
சொல்ல வருக தள்ளி நடை
தோன்ற வருக சோதிமணி
மாட நெருக்கும் திருச்செந்தூர்
வடிவேல் முருகா வருக''

4. கலம்பகம்:

பலவகைப் பூக்கள் கலந்தமையத் தொடுப்பதைக் கதம்பம் என்பது போல,பல்வகைச் செய்யுட்களும் பாக்களும் அமைய, அகம் புறம் பற்றிய பொருட்களைக் கலந்துரைப்பது கலம்பகமாகும். நூறு செய்யுட்கள் அந்தாதித் தொடையில் அமைய இது பாடப்படும். தெய்வத்தின் மீது பாடப் பட்ட கலம்பக நூல்களே மிகுதி. மனிதரைப் பற்றிப் பாடிய கலம்பக இலக்கியமாக நமக்குக் கிடைத்துள்ளது, நந்திக் கலம்பகம் ஒன்றேயாம். இது தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்ம பல்லவ மன்னனைப் பாடியதால் நந்திக் கலம்பகம் எனப் பெயர் பெற்றது. நந்திவர்மன் இந்நூலுக்காகத் தன்னுயிரையே ஈந்தான் எனக் கதை சொல்வர்.இந்நூல் கலம்பகங்களுள் பழையதாயினும் சுவையும் நயமும் மிக்கதாம். கார் காலத்தில் தலைவன் அருகில் இல்லை என்பதை நினைந்து வருந்தும் தலைவி,

"மங்கையர் கண் புனல் பொழிய மழை
பொழியுங் காலம்
மாரவேள் சிலை குனிக்க மயில் குனிக்கும் காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங்காலம்'

எனப் புலம்பும் பகுதியும்,

"ஈட்டு புகழ் நந்தி பாணநீ எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும் கேட்டிருந்தோம்
பேயென்றாள் அன்னை பிறர் நரியென்றாள் தோழி
நாயென்றாள் நீ என்றேன் நான்"

எனப் பரத்தையர் வீட்டில் தங்கியிருந்த தலைவனோடு அமர்ந்து பாடிக் கொண்டிருந்த பாணனை நாய், நரி, பேய் எனத் திட்டித் தீர்ப்பதையும் கொட்டிக் கரிப்பதையும் நயமாகச் சித்திரிக்கும் பகுதியும் ஆசிரியரின் கற்பனைத் திறத்திற்கும், கவிவன்மைக்கும் சிறந்த சான்றுகளாம்.

சைவ வைணவ சமயங்களைச் சார்ந்து எழுந்த கலம்பக நூல்களும் உள்ளன.

5. பள்ளுப்பாட்டு:

நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது" என்பர். பள்ளர் குல மக்களின் வாழ்க்கையைப் புலமாகக் கொண்டு எழுந்த இவ்விலக்கியம் பள்ளர்களின் பேச்சு மொழி மிகுந்து விளங்கப் பாடப்படுவதாகும். பள்ளு நூல்களில் சிறந்ததான "முக்கூடற் பள்ளு" காலத்தால் முற்பட்டதாகும். இதன் ஆசிரியர் தெரியவில்லை.

6. குறவஞ்சி:

உலா வரும் தலைவனைக் கண்டு கருத்தழிந்த எழுவகைப் பெண்களும் அவனை அடைவதற்குத் துடிக்கும் போது, குறப்பெண் ஒருத்தி குறி சொல்லிப் பெரும் பொருள் பெற்றுச் செல்லும் நிகழ்ச்சிகளைச் சிந்து,வெண்பா ஆகியவற்றால் பாடுவதாகும். குறவஞ்சி தலைவனின் பெயராலோ, அவனது ஊரின் பெயராலோ பெயர் பெறும்.குறப் பெண் (குறவஞ்சி) குறி கூறும் பகுதியே சிறப்பாக மொழியப்படுவதால் இது குறவஞ்சி எனப் பெயர் பெற்றது. குற்றாலக் குறவஞ்சி,

திருவாரூர்க் குறவஞ்சி போன்றன ஊர்ப் பெயராலும், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, மீனாட்சியம்மைக் குறவஞ்சி ஆகியன தலைவர் பெயராலும் பெயர் பெற்றவையாகும். திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய குற்றாலக் குறவஞ்சியில் ஓர் பகுதி.

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு
கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள்
கொஞ்சும்
கானவர்கள் வழியெறிந்து வானவரை அழைப்
பார்
கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்
பார்
தேனருவி திரையெழும்பி வானின் வழியொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும்
வழுகும்
கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே"

என்ற பாடல் இயற்கை எழிலை ஓசை நயத்தொடு விளக்கு வதாகும். கதைத் தலைவி வசந்த வல்லி பந்தாடுவதை விளக்கும் பகுதியும் சிறப்பானதாகும்.

உரையாசிரியர் தொண்டு

பண்டெழுந்த இலக்கண இலக்கிய நூல்களின் நுணுக்கங்களைத் தெளிந்து, பொருள் விளக்கந்தந்து, புலவர்தம் நெஞ்சக் கருத்துக்களை உண்டு மகிழத் துணை புரிந்தோர் உரையாசிரியர்களே. அவர்தம் உரையின்றேல் இலக்கியச் செழுமை எட்டாக் கனியாகியிருக்கும். இலக்கியச் சுவை காண உதவிய திறவுகோல்கள் உரையாசிரியர்தம் உரைகளே தமிழ் உரை நடை வளர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்த பெருமையும் அவ்வுரைகளுக்கே உரித்து. உரையாசிரியருள் முதன்மையானவர் நக்கீரர் ஆவார்.

1. இளம்பூரணர்:

தமிழ் இலக்கணப் பெருநூலாம் தொல்காப்பியத்திற்கு உரை கண்டவருள் இளம்பூரணர் முதன்மையானவர். இவரது உரையின் பெருமை கருதி "உரையாசிரியர்" என்றே இவரை அழைப்பர். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டுள்ளார். பற்பல சங்க நூற்களை மேற்கோள் காட்டி உரை பகர்ந்து செல்வார் இவரது உரை எளிய நடையில் தெளிவான முறையில் அமைந்துள்ளது. ஆங்காங்கே சொல் விளக்கம் தந்து பொருள் வரையறுத்துரைக்கும் சிறப்பு இவரது தனித்தன்மையாகும் பரத்தையர் என்ற சொல்லை வரையறுத்துரைக்கும் போது, "அவர் ஆடலும் பாடலும் வல்லவராகி, அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்" எனக் கூறுவார்.

2. சேனாவரையர்:

"வடநூற்கடலை நிலை கண்டுணர்ந்தவர்" என இவரைச் சிறப்பித்துக் கூறுவர். பிற உரையாசிரியர் கூற்றை இவர் மறுத்துரைத்துத் தமது கருத்தை நிறுவும் போக்கு இவரது தனிச்சிறப்பாகும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரை கண்டுள்ளார்.

3. பேராசிரியர்:

இவர் தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உள்ள மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுளியல், மரபியல் ஆகியவற்றுக்கு உரை கண்டுள்ளார். மாணிக்கவாசகரின் "திருக்கோவையார்க்கும்" உரையெழுதியுள்ளார். குறுந்தொகையின் முதல் இருபது பாடல்களுக்கும் இவர் எழுதிய உரை உள்ளது. பல சங்க இலக்கியங்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். "பேராசிரியர்" என்னும் பெயர் இவரது புலமைத் திறத்திற்குச் சான்று பகர்வதாகும்.

4. நச்சினார்க்கினியர்:

"உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்" என இவரைப் பாராட்டியுரைப்பர். கொண்டு கூட்டிப் பொருள் சொல்லும் போக்குடையவர். இவரது உரைநடை சொல்லழகும் பொருளழகும் நிறைந்தது தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றுக்கு உரை கண்டுள்ளார், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிவகசிந்தாமணி ஆகியவற்றுக்கும் இவருரை உள்ளது.

5, பரிமேலழகர்:

வடமொழி அறிவும், இலக்கியப் பயிற்சியும் நிறைந்தவர். திருக்குறளுக்கு உரை யெழுதிய பதின்மருள் ஒருவர்.

"பரித்த உரை யெல்லாம் பரிமேலழகர்
தெரித்த உரையாமோ தெளி"

என இவரது உரைச்சிறப்பைப் பாராட்டியுரைப்பர். ஆயினும் வடமொழி மரபொட்டியும். வடநூற்கருத்துக்கிணங்கியும் திருக்குறளுக்கு உரை எழுதியமையால், முற்றிலும் உடன்படக் கூடாத சில கருத்துக்களும் இவரது உரையில் காணப்படு கின்றன. ஆயினும் சொல்வரையறை செய்யும் இடங்கள் மிகச்சிறப்பாக விளங்குவதோடு இவரது புலமைத்திறத்திற்கு விளக்கமாகவும் அமைந்துள்ளன. அறம் என்பதற்கு விளக்கம் சொல்லும் போது "விதித்தன செய்தலும் விலக்கியது ஒழித்தலும் அறம்" என்பார்.

6. அடியார்க்கு நல்லார்:

இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை கண்டுள்ளார். எனினும் வஞ்சிக் காண்டம் முழுமைக்கும், வேறு சில காதைகளுக்கும் இவர் எழுதிய உரை கிடைக்கவில்லை. தாம் மேற்கோளாகச் சொல்லும் நூல்களைப் பற்றிய விவரத்தை இவர் குறிப்பிட்டுச் செல்கிறார். எண்பத்தொன்பது இயற்றமிழ் நூல்களிலிருந்தும், பல இசைத்தமிழ் மற்றும் நாடகத் தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுகிறார். இது இவரது இசைத் தமிழறிவு, நாடக நூற்புலமை ஆகியவற்றைக் காட்டுவதோடு, பழந்தமிழகத்தில் வழக்கிலிருந்த இசைத் தமிழ் மற்றும் நாடகத் தமிழ் நூல்களைப் பற்றிய செய்திகளை அறியவும் துணை புரிகிறது.

இவர்களைத் தவிர வேறு பல இலக்கண உரையாசிரியர்களும், இலக்கிய உரையாசிரியர்களும் தமது உரைநூல்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். தொல்காப்பியத்திற்கு உரை கண்ட கல்லாடர், தெய்வச் சிலையார் போன்றோரும், நன்னூலுக்கு உரை எழுதிய மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆகியோரும், சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியரும் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களைத் தவிர, வைணவப்

பெரு நூலாகிய நாலாயிர திவ்ய பிரபந்தத்திற்கு நஞ்சீயரும் நம்பிள்ளையும் உரை கண்டுள்ளனர். திருவாய்மொழிக்கு ஐந்து பேருரைகள் உள. இவ்வுரைகள் மணிப்பிரவாள நடையில் உள்ளன. அவை தமிழின் தனித்தன்மைக்கு ஊறு செய்யும் போக்கினவெனினும், இலக்கியச் சுவையுணர்தற்குத் துணை புரிவன என்பதில் ஐயமில்லை.

உரைநடை வளர்ச்சி

உரைநடை செய்யுளுக்கு முன் தோன்றியதா, பின் தோன்றியதா என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபடுவர், தான் உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்தத் தலைப்பட்ட ஆதிமனிதன், முதலில் செய்கை மூலமாகவும், பின்னர் ஒலிக்குறிப்புகள் மூலமாகவும், அதன் பின்னர் சொற்கள் மூலமாகவும், சொற்கள் பலவற்றைக் கூட்டிச் சேர்த்த உரை நடை மூலமாகவும் பேசியிருக்கக் கூடும். அவனது மொழியும் உணர்வும் அறிவும் பண்பட்ட காலத்தில்தான் அவன் சந்த நயமிக்கப் பாடல்கள் வழியாகக் கருத்துக்களைக் கூறிப் பிறரை இன்புறுத்த முயன்றிருக்க வேண்டும். எனினும் உரை நடை இலக்கியம் மட்டும் உலக மொழிகளிலெல்லாம் மிகப் பிற்பட்டே தோன்றியது என அறிஞர்கள் முடிவிடுவர்.

தமிழும் உரைநடையும்:

பழந்தமிழகத்தில் உரைநடை செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஏடும் எழுத்தாணியுமே பயன்படுத்தப்பட்டு வந்த அக்காலத்தில் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் செய்யுள் இலக்கியம் செல்வாக்குப் பெற்றதில் வியப்பில்லை.

"பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாவின்றெழுந்த கிளவியினாலும்
பொருளொடு புணராப் பொய்ம் மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்"

என்ற தொல்காப்பிய நூற்பா உரைநடை பற்றிய கருத்து டையதாகும். எனினும் அதுவும் செய்யுள் வகையாகவே குறிப்பிடப்படுகிறது. உரைநடையும் செய்யுளும் கலந்தமைந்த சிலப்பதிகாரம் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என வழங்கப் பெறுகிறது. உரையாசிரியர் பெருந்தேவனார் உரையிலிருந்து "பாரதம்" தகடூர் யாத்திரை ஆகிய இரு நூல்களும் உரை விரவியமைந்த செய்யுள் நூல்கள் என்பது தெரிகின்றது. ஆனால் அவை நமக்குக் கிடைக்கவில்லை. இதிலிருந்து உரைநடையும் செய்யுளும் கலந்து நூலியற்றும் வழக்கம் பழந்தமிழகத்தில் உண்டெனத் தெரிகிறது.

பல்லவர் காலத்தில் தோன்றிய இறையனாரகப் பொருளுரை இலக்கியச் செவ்வி மிக்க உரை நூலாகும். இக்காலத்தில் சமண முனிவர்கள் இயற்றிய ஸ்ரீபுராணம், கத்திய சிந்தாமணி ஆகியவை மணிப்பிரவாள நடையில் அமைந்த உரைநடை நூல்களாகும். சோழர்காலத்தில் உரையாசிரியர் பலர் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரை வகுத்ததன் மூலம் உரைநடை வளர்ச்சிக்குப் புத்துயிர் நல்கினர். எனினும் ஆங்கிலேயர் காலத்தில்தான் தமிழ் உரைநடையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, அஃதும் ஓர் இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றது.

ஐரோப்பியர் பங்கு:

தொண்டுழியர்களாகத் தமிழகம் வந்த இயேசு சபைக் குருக்கள் அச்சுக் கூடங்கள் நிறுவித் தமிழில் நூல்களை வெளியிட்டனர். இந்திய மொழிகளில் முதன்முதல் தமிழிலேயே உரைநடை நூல்கள் வெளியிடப்பட்டன. முதலில் 1577ல் "தம்பிரான் வணக்கம்" என்ற நூல் வெளியாயிற்று. அதனைத் தொடர்ந்து தத்துவபோதகர் எனப்படும் ராபர்ட்-டி-நொபிலி என்பவர் பல்வேறு சமய நூல்களை உரைநடையில் எழுதினார். வேதாந்தக் கருத்துக்களையும், தத்துவ விளக்கங்களையும் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் இவர் எழுதிக்காட்டினார். ஆயினும் இவரது நூல்கள் பல அச்சேறாமல் அழிந்து பட்டன. செர்மானியரான சீகன் பால்கு எனும்

புரட்சிக் கிறித்துவர் தாரங்கம்பாடியில் அச்சுக் கூடமும் காகிதத் தொழிற்சாலையும் நிறுவினார், ''தமிழ் லத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு'' எனும் நூல் இவர் எழுதியதாகும். தமிழ் உரைநடையின் தந்தை எனும் புகழுக்குரிய வீரமா முனிவரின் தமிழ்ப்பணி என்றும் நினைவு கூரத்தக்கதாகும். வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பரமார்த்த குருகதை ஆகிய நூல்களை இவர் எழுதி வெளியீட்டார்.

தொடர்ந்த முயற்சியும் சமய வல்லார் ஈடுபாடும்:

கிறித்துவக் குருக்கள் கல்விச் சாலைகள் பல நிறுவிய தன்மூலம் பாடநூல்கள் பல வெளிவருவதற்குத் துணைபுரிந் தனர். தொண்டூழிய அமைப்புகளும் பல்வேறு சமய நூல் களை வெளியிட்டன. இந்து சமய விற்பன்னர்களும் கிறித்து வர்களைப் பின்பற்றி இக்காலத்தில் பல உரைநடை நூல்கள் எழுதித் தம் சமயத்தைப் பரப்ப விழைந்தனர். அவர்களுள் தலையாயவர் ஆறுமுக நாவலர் ஆவார். 27ஆம் வயதில் திருவாடுதுறை ஆதீனத்தாரால் ''நாவலர்'' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட ஆறுமுக நாவலர், சென்னையில் அச்சகம் ஒன்றை நிறுவினார். சைவ சமய ஆய்வுநூல்கள் பல வெளியிட்டார். சைவ, வினா விடை, சைவ சமய நெறி யுரை. திருமுருகாற்றுப்படையுரை, சிவஞானப் போதச் சிற்றுரை ஆகியவற்றை வெளியிட்டார். இவரது திருவிளை யாடற்புராண வசனம், பெரியபுராண வசனம், நன்னூல் காண்டிகை உரை, இலக்கணச் சூறாவளி ஆகியனவும் குறிப் டத்தக்கனவாம். இவரது கட்டுரைகள் சிறப்பு வாய்ந்தவை. ''வைதாலும் வழுவின்றி வைவாரே'' என்ற புலவரின் அஞ்சலி யுரை மூலம் அவரது செந்தமிழ் நடையின் மாட்சி புலனாகும். ''வசன நடை கைவந்த வல்லாளர்'' எனப் பரிதிமாற்கலைஞர் இவரைப் பாராட்டியுள்ளார். சபாபதி நாவலரின் ''திராவிடப் பிரகாசிகை'' எனும் நூலும் தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்சதந்திரக் கதைகளும், வீராசாமி செட்டியாரின் ''விநோதரச மஞ்சரி'' எனும் நூலும் இக்காலத்தில் தோன் றிய உரைநடை நூல்களுள் குறிப்பிடத் தக்கவையாகும். தாளிகைகளும் திங்கள் இதழ்களும் இக்காலத்தில் தோன்றிய தால் உரைநடையின் செல்வாக்கு மிகுதியாயிற்று.

உரைநடையின் பொற்காலம்!

இருபதாம் நூற்றாண்டு உரைநடையின் பொற்காலமாகும், பல்வேறு துறைகளிலும் உரைநடை இன்று தலை நிமிர்ந்து உலா வருகிறது. கலைநயம் பொங்கக் கருத்துக்களை எடுத்துரைக்கும் கவின்மிகு நடை இக்காலத்தின் சிறப்புக் கூறாம். பிறமொழிச் சொற்களைக் கடிந்து, நல்ல தமிழ்ச் சொற்களை நயமுற எடுத்தாளும் முயற்சி இந்நூற்றாண்டில் வெற்றிபெற்றது. இப்பெரு நிலைக்கு உதவியவர்களுள் உவேசா மறைமலையடிகள், திருவிக, மூனைவர் மு. வ. கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் வ. சு. ப.பாரதிதாசனார், போன்ற தமிழ் அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அறிஞர் அண்ணா போன்ற அரசியல் விற்பன்னர்களும், சில திரைப்பட இயக்குனர்களும், தினத்தந்தி நிறுவனர் சி. பா. ஆதித்தனார் போன்ற ஒரு சில செய்தி நிறுவனர்களும் நல்ல தமிழில் நயமிக்க நடையில் எழுத முனைந்தமை புதியதொரு திருப்பு முனையாக விளங்கிற்று அரசியலார் புலவர் குழு அமைத்தும், உயர் கல்விப் பாட நூல்களைத் தமிழில் வழங்கியும் நல்ல தமிழ் வளரத் தொண்டாற்றி வருகின்றனர். பல்வேறு தமிழ் இலக்கிய இதழ்கள் அருந்தமிழ் நடையில் வெற்றிநடை போடுகின்றன. பல்வேறு துறைகளிலும் தமிழ் மொழி பாங்குடன் செழித்துவரும் இக்காலம் உரைநடையின் பொற்காலமாகும்.

ஐரோப்பியர் காலம்
[கி. பி. 1600–1947]

1. தாயுமானவர்:

இறைப்பற்றில் இறுக்கமும் மன நெருக்கமும் கொண்டு வாழ்ந்த தாயுமான சுவாமிகள் இரக்கமும் உருக்கமும் மிக்க பாடல்களைப் புனைந்து தமிழ்த் தொண்டாற்றிய துறவியாவார். சமரச சன்மார்க்கப் பயிர் வளர அயராதுழைத்த பெருமை அவர்க்குண்டு. அவரது நெஞ்சம், "பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தியப் பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்" எனுமளவுக்கு நெகிழ்ந்தும், கருணை மிகுந்தும் விளங்கிற்று.

"பந்தமெல்லாம் தீரப் பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை யான் மறவேன் பராபரமே"

என யாங்கணும் நீக்கமற நிறைந்துள பரிபூரணனை நோக்கித் தமது ஊனும் உள்ளமும் உருகிடப் பராபரக் கண்ணிகளைப் பாடி மகிழ்ந்த தாயுமானவர் பணி பாராட்டுக்குரியது.

2 வள்ளலார்:

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த இராமலிங்க அடிகளார் 'அருட் பெருஞ்சோதி தனிப் பெருங் கருணை" எனும் மந்திரத்தால் சமரச சன்மார்க்கத்தைப் பரப்பினார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடித்' தவித்த அவர் "ஆருயிர்க் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்" என வேண்டி வாழ்ந்ததால் வள்ளலார் எனச் சிறப்பாகப் போற்றப்பட்டார். வடலூரில் தங்கிச் சமரச சன்மார்க்க நெறி பரப்பியதால், வடலூர் வள்ளலார் என்ற

மைக்கப்பட்டார். 1823ஆம் ஆண்டில் தோன்றிய இவர், முருகன் மீது பாடிய பாடல்களை ஆறு திருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். அவை "திருவருட்பா" என வழங்கப் படும். "மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்! பசியினால் இளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோரென்
நேருறக் கண்டு உளந் துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்
சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்"

என நெஞ்சம் உடைந்து பேசும் போது, நாமும் கண்ணீர் விடுகிறோம்!

3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை:

திருச்சி மாவட்டத்தில் 1814ஆம் ஆண்டில் பிறந்தார். திருவாடுதுறை ஆதீன தமிழ்ப் புலவராகத் தொண்டாற்றிய இவர், அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் இயற்றி, "மகா வித்துவான்" எனும் பட்டம் பெற்றார். இவர் எழுதிய "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" பலராலும் போற்றப்படுவ தாகும். பத்து பிள்ளைத் தமிழ் நூல்களும், பதினாறு அந்தாதிகளும், பதினாறு தல புராணங்களும் பாடியுள்ளார். நாளொன்றுக்கு முந்நூறு செய்யுள் இயற்றும் திறமிக்கவராய் விளங்கினார் என இவரைப் புகழ்வர். பல்வேறு உலா, கோவை, மாலை ஆகிய சிற்றிலக்கியங்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. டாக்டர், உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுக்கு இவரிடம் பாடங்கேட்ட பெருமையுண்டு.

வேதநாயகம் பிள்ளை:

கத்தோலிக்கக் கிறித்துவரான இவர், திருச்சி மாவட்டம் குளத்தூரில் தோன்றினார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்ற இவர், "சர்வ சமய சமரசக் கீர்த்தனை" எனும் கீர்த்தனங்களின் தொகுப்பை நல்கியுள்ளார். தமிழில் முதன் முதலில் "பிரதாப முதலியார் சரித்திரம்" எனும் நாவலைப் படைத்துத் தமிழ் நாவலின் தந்தை எனும் பெயருக்குரியவரானார். நீதிநூல், திருவருள் மாலை, பெரிய நாயகியம்மன் பதிகம், தேவமாதா அந்தாதி ஆகிய கவிதை நூல்களைப் படைத்துள்ளார். எள்ளலும், நகைச்சுவையும் இவரது கவிதைகளின் தனிச் சிறப்பாகும். நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிந்த இவர், "சித்தாந்த சங்கிரகம்" எனும் நூலை எழுதியதன் மூலமும் நல்ல தமிழ்த் தொண்டு ஆற்றியுள்ளார்.

சிறுகதை

"உரைநடையில் கற்பனை வளர்ந்த வேகமான வளர்ச்சியைக் காட்டுவன நாவலும் சிறுகதையுமே" என்பர், முனைவர் மு.வ. கதை சொல்லும் வழக்கம் மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வருவதாயினும், சிறுகதையை இலக்கியமாக வளர்க்கும் நிலை மேனாட்டினரைப் பின்பற்றியே ஏற்பட்டது. அமெரிக்கத் திருநாட்டில் முகிழ்த்த இவ்விலக்கிய வகை இன்று உலகெங்கினும் செல்வாக்குடன் மிளிர்கிறது. எட்கர் ஆலன்போ, கோகல் ஆகிய அறிஞர்கள் சிறுகதை இலக்கியத்திற்கு முன்னோடிகளாவர்.

சிறுகதை இலக்கணம்:

ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடிய வகையில் சுவையும் விறுவிறுப்பும் மிக்கதாக அமைவதே சிறுகதையின் சிறப்புக் கூறாகும். எந்தவொரு சொல்லுமே தேவையற்றது என ஒதுக்க முடியாத வகையில் உயிரோட்டமிக்க சொற்களைப் பெய்து, கதையைக் கூறுவது இன்றியமையாததாகும். யாதாயினும் ஒரு நிகழ்ச்சியையோ, உணர்ச்சியையோ ஆதாரமாகக் கொண்டும் சிறுகதை எழுதலாம். ஆனால் செட்சுவிக் என்பார் கூறுவது போலக் குதிரைப் பந்தயத்தில் காணப்படும் தொடக்கமும், விரைவும், சிறுகதையில் அமைந்திருக்க வேண்டும்.

தமிழில் சிறுகதை:

பழந்தமிழகத்தில் கதை கூறும் வழக்கம் இருந்தது உண்மையே. வாழ்வின் ஆறுதலுக்காகவும் நீதியுரைப்பதற்காகவுமே பல செவி வழிக்கதைகள் கூறப்பட்டு வந்துள்ளன. தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரக் கதைகளும் இவ்வகையினவே. மேனாட்டினாரைப் போன்று, சிறுகதையையும் ஓர் இலக்கிய வகையாகக் கருதி ஆர்வத்துடன் வளர்க்கும் நிலை தமிழ் நாட்டில் காணப்படவில்லை. மகாகவி பாரதியாரே தமிழ் கூறு நல்லுலகிற்குச் சிறுகதை இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார். தாகூரின் சிறுகதைகளை மொழி பெயர்க்கும் பணியிலும், தாமே சில சிறுகதைகளை எழுதி வெளியிடும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டார். வ.வே.சு.அய்யர் அவர்கள் எழுதிய "மங்கையர்க்கரசி காதல் முதலிய கதைகள்" (கி.பி.1927) மாதவய்யர் வெளிட்ட "குசிகர் குட்டிக் கதைகள்" ஆகியன தமிழ் மக்களின் கவனத்தைச் சிறுகதை உலகு நோக்கித் திருப்புதற்குப் பெரிதும் உதவின.

சிறுகதையின் மறுமலர்ச்சி:

தமிழ்ச் சிறுகதையுலகின் மறுமலர்ச்சிக்குப் பேருதவி புரிந்தவர் புதுமைப் பித்தனாவார். தென்னக மாப்பசாந்

எனச் சிறப்பிக்கப்படும் புதுமைப்பித்தன், சிறுகதையுலகில் பல சோதனைகள் செய்து வெற்றி கண்டார். உருவத்திலும், உள்ளடக்கத்திலும், நடையிலும் புரட்சி செய்து சிறுகதை யுலகின் முடிசூடா மன்னராக விளங்கினார். இவரது கடவுளும் கந்தசாமியும், கயிற்றரவு, அகல்யை சாப விமோசனம், பொன்னகரம், போன்ற கதைகள் சாகாவரம் பெற்றனவாம்.

தொடக்கக் காலத்தில் சிறுகதையை வளர்த்த பெருமைக்குரியோருள் கு.ப.ராவுக்குத் தனியிடமுண்டு. பாலுணர்வு பற்றிய பல்கோணப் பார்வைகளாகவே இவரது சிறுகதைகள் விளங்கிடினும் இனிய கவிதையைப் படிப்பது போன்ற அமைதியும் இனிமையும் ஆற்றொழுக்குத் தன்மையும் இவரது கதைகளில் காணப்படும் தனிச்சிறப்பாம். ஒருவர்க்கொருவர் ஐயங்கொண்டு வாழும் கணவர் மனைவியர் நிலை, ஏங்கித் தவிக்கும் இளம் விதவையர் மனப் போராட்டங்கள் ஆகியவற்றைத் திறம்படச் சித்திரிப்பதில் கு. ப. ரா. வல்லவர் நனவோட்ட உத்தியில் சிறுகதைகளைப் படைப்பவர் கு.ப.ரா. எனச் சிலர் கூறினும், வாசகர்களை மயக்குவதிலும் குழப்புவதிலும் மட்டுமே அவர் வெற்றி பெறுகிறார். ஏழைகளின் வாழ்க்கைத் துயரங்களை வேதனையுடனும் விம்மலுடனும் வடித்தவர் விந்தனாவார். உருவக எழுத்தாளராகப் புகழ் பெற்ற கு. அழகிரிசாமியும் சிறந்த சிறுகதைகளைப் படைத்துள்ளார். சிறுகதை வரலாற்றில் புதுயுகத்தைப் படைத்த செயகாந்தன் சாதனை மன்னராக விளங்குகிறார். யுகசந்தி போன்ற அவரது சிறுகதைத் தொகுப்புகள் காலத்தை வெல்வன, ஆரவாரமின்றிச் செல்லும் அகிலனின் சிறுகதைகள் சிறந்த கருத்தை வலியுறுத்துவன நா. பார்த்தசாரதி என்பாரின் சிறுகதைகள் கவிதைநயமிகுந்த கற்பனைச் சுரங்கங்களாகும். "கங்கை இன்னும் வற்றிவிடவில்லை எனும் அவரது சிறுகதைத் தொகுதி சிறப்பானது..

தமிழ்ச் சிறுகதை இன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தும், வளம் பெற்றும் வருகிறது. நாளிதழ்கள் அனைத்தும் சிறுகதை வெளியிடுவதில் ஆர்வம்

காட்டுகின்றன. மாத, வார இதழ்களில் சிறுகதைகள் தனி யிடம் பெறுகின்றன. இதழ்கள் அனைத்தும் சிறுகதைப் போட்டிகள் நடத்திச் சிறந்த கதைகள் மலர்வதற்கும் புதிய எழுத்தாளர்கள் தோன்றுவதற்கும் துணைபுரிகின்றன. இவ் வகையில் முன்னோடியாக விளங்கிய "ஆனந்த விகடன்" வார இதழின் பணி போற்றுதற்குரியது.

★★

நாவல் இலக்கியம்

சிறந்த நாவல் பொது மக்கட்கு வெறுங் கதையாகவும் அறிஞர்க்குக் கருத்து விளக்கக் கதையாகவும், சற்று ஆழ்ந்து உணர வல்லார்க்கு அனுபவத்தால் தெளியும் உண்மை விளக் கமாகவும் அமைய வேண்டும் என்பர், முனைவர் முரே. சிறு கதை ஒரு தென்னைமரமெனின் நாவல் வளர்ந்து படர்ந்த ஆலமரமாகும். இத்தாலிய நாட்டில் 1350ஆம் ஆண்டில் பொக்காஷியோ என்பவரால் அறிமுகப்படுத்திய இவ்விலக்கி யத்தைத் தமிழில் அறிமுகப்படுத்திய பெருமை வேதநாயகம் பிள்ளை அவர்களைச் சாரும்.

தோற்றமும் தொடர்ந்து வளர்ச்சியும்:

1879ஆம் ஆண்டில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதி வெளியிட்ட பிரதாப முதலியார் சரித்திரத்தில் நீதி போதனைகள் நிறைந்துள்ளதாலும், பல இடைக் கதைகள் மிகுந்துள்ளதாலும், நாவலின் உருவ அமைப்பு, உத்திமுறை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் சற்று நெருடலே தென்

படுகிறது. ஆயினும் பல கதைகளையும் நாவலின் முக்கியக் கருவுக்கும், கதையோட்டத்துக்கும் ஊறு நேராத வகையில் திறம்படச் சேர்த்துள்ளார். 1887ல் 'சுகுண சுந்தரி'' எனும் நாவலையும் அவர் வெளியிட்டார், இவர் கதையைத் தொடங்கும் போது கதை நிகழும் ஊரைப்பற்றியே வருணிக்கிறார். 1893ல் குருசாமி என்பவர் ''பிரேம கலாவத்யம்'' எனும் நாவலை வெளியிட்டார். இதில் பேச்சுத் தமிழ் வாடை உண்டு. கதையைத் துவங்குவதில் ஆசிரியர் புதுமையைச் செய்துள்ளார். பிரேமநாதசர்மா என்ற அந்தணச் சிறுவன் சாமிக்குச் சார்த்துவதற்குப் பூப்பறிக்க வருகிறாயா என நண்பனிடம் கேட்பதாகவே கதை தொடங்குகிறது 1896ல் இராசமய்யர் வெளியிட்ட 'கமலாம்பாள் சரித்திரம்'' ஆன்மீகக் கருத்து இழையோடப் புனையப்பட்டிருப்பினும், பாத்திரப் படைப்பில் தனிச்சிறப்பு மிக்கதாம். 1898ல் மாதவையா எழுதிய ''பத்மாவதி சரித்திரம்'' நீதி போதனைகள் நிரம்பியதாகும். நடேச சாத்திரி எழுதிய ''தீனதயாளு'' நாவல் குடும்பப் பாங்கான கதையை யதார்த்தமான முறையில் சொல்வதாகும். இவற்றுக்குப் பின் 1920ல் வடுவூர் துரைசாமி என்பார் எழுதிய ''மேனகா'' எனும் சமூக நாவல் இந்து சமய ஒற்றுமையை வற்புறுத்தும் பாங்கில் நகைச்சுவையுடன் படைக்கப்பட்டுள்ளது. தேசிய உணர்வு செழுமிய வகையில் படைக்கப்பட்ட வெங்கட்ரமணியின் ''தேசபக்தன் கந்தன்'' ''முருகன் ஓர் உழவன்'' ஆகிய நாவல்கள் நாவல் உலகின் புதிய திருப்புமுனைகள் எனலாம்.

சிறந்த கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லும் சீர்திருத்தக் கதைகளைப் படைத்துத் தமிழ் நாவல் உலகில் தனித்தன்மையுடன் விளங்கியவர், டாக்டர் மு. வ. அவரது அகல் விளக்கு, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள், கள்ளோ காவியமோ ஆகியன சிறந்த நாவல்கள் என்பதில் ஐயமில்லை. வில்லன் இன்றியே ''பாவை விளக்கு'' எனும் சிறந்ததொரு நாவலைப் படைத்து வெற்றி கண்டவர் அகிலன் ஆவார். தணிகாசலம் எனும் கதை மாந்தன் வாயிலாகத் தனிமனிதனின் அகப் போராட்டத்தையும், புறச் சூழலுக்கிடையில் நிகழும் சமூகப் போராட்டத்தையும் அவர் சிறப்பாகக் காட்டி

யுள்ளார். அவரது "வேங்கையின் மைந்தன்" எனும் வரலாற்று நாவலும் சிறப்பானது. செயகாந்தனின் நாவல்களும் சாகா வரம் பெற்றனவாகும். அவரது "பாரிசுக்குப் போ", ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்" ஆகியன குறிப்பிடத்தக்கன. இலட்சியக் கதை மாந்தர்களைப் படைத்துச் சமூக சூழலுக்கிடையில் அவர்கள் சந்திக்கும் போராட்டங்களைக் கவிநயம் பொங்கும் நடையில் சித்திரிப்பவர், நா. பார்த்தசாரதி. இறுதியில் சமூகச் சூழலை வெற்றி காணமுடியாமல் அச்சமூகத்தினின்று இலட்சிய மாந்தர் ஒதுங்கி விடுவதாகவே தமது நாவல்களை இவர் முடித்துவிடும் பாங்கு உலகியலை உள்ளவாறு உணர்த்துகிறதென்றால் அது மிகையாகாது. அவரது குறிஞ்சி மலர், பொன் விலங்கு, ஆத்மாவின் ராகங்கள் போன்ற நாவல்களை அறியாதவரே இல்லை தி. ஜானகிராமனின் அம்மாவந்தாள், மோகமுள், செம்பருத்தி ஆகிய நாவல்களும், நீலபத்மநாபனின் தலைமுறைகள் போன்ற நாவல்களும் சிறப்பானவை.

வட்டார நாவல்கள் என்ற வரிசையில் கதை நிகழும் மண்ணின் மணம் கமழுமாறு நாவல்களைப் படைப்பதில் சண்முக சுந்தரம் பெயர் பெற்றவர். அவரது நாகம்மாள், சட்டி சுட்டதடா போன்ற நாவல்கள் கொங்கு மண்டல மண் வாசனை நிரம்பியவனவாம். பெண் எழுத்தாளருள் ராஜம் கிருஷ்ணன், லெட்சுமி, எச்சிபா ஏசுதாசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

நாவல் உலகில் தனிச்சிறப்புடன் புகழ்க்கொடி நாட்டிய "கல்கி" வரலாற்று நாவல்களை விறு விறுப்பாகக் கொண்டு செல்லும் திறம் மிக்கவர். விடுதலைப் போராட்டக் கால நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டு எழுதிய "அலையோசை" பொருளாதாரச் சிந்தனையும் கொண்டதாகும். சோழர் காலத்துப் பெருமை பகரும் "பொன்னியின் செல்வன்" பல கற்பனைப் பாத்திரங்களைக் கொண்டிருந்தாலும் புத்த மதத்திற்குச் சோழர் செய்த பெரும் பணியையும், சைவம், வைணவம், பௌத்தம் ஆகிய மதக் கொள்கைகள் செழித்த தன்மையையும் சிறப்பாகச் சித்திரிக்கிறது.

அவரது 'சிவகாமியின் சபதம்'' சாதனைக்கோர் மணிமகுடமாகும். சாண்டில்யன், கோவி, மணிசேகரன் ஆகியோரும் வரலாற்று நாவல்களைப் படைத்துள்ளனர்.

வேதநாயகம் பிள்ளை 1879 இல் துவங்கிய முயற்சி இன்று பொலிவோடு மலர்ந்து, கிளைத்துப் பூத்துக் கனிந்து குலுங்குகின்றது. அவ்வளர்ச்சி முறையாகவும் முழுமையாகவும் செழிப்பதற்குத் தாளிகை உலகும், வாசகர் வட்டமும் விழிப்புடனிருந்து உதவுவது வேண்டற்பாலதாகும்.

நாடகத் தமிழ்

சிறப்பின் மிகுதியால் முத்தமிழ் என வழங்கப் பெறும் பெருமைக்குரியது, பைந்தமிழ் மொழியாகும். இயல், இசை, கூத்து எனச் செழித்து வளர்ந்த தமிழ் மொழி,அவ்வப்போது எதிரிகளின் இடையூறு தொடர்ந்த போதினும், இடையூறு கட்கெல்லாம் ஈடுகொடுத்தும், இகல் வென்றும் பெரு வளர்ச்சி கண்டு வந்துள்ளது. எனினும் நாடகத் தமிழ் தமிழிலக்கிய உலகிற்குப் புதிது எனும் கருத்தும் உள்ளது. அதுபற்றி விரிவாக ஆய்வது நம் கடமையாகும்.

கூத்து வேறா?:

''சங்கத் தமிழ் மூன்றுந்தா'' என்ற ஔவையாரின் பாடல் சங்க காலத்தில் மூன்று தமிழும் வளர்ந்து செழித்திருந்தது என்பதை நிறுவும். ஆனாலும் முத்தமிழுள் ஒன்றான கூத்து நாடகத் தமிழினின்று வேறுபட்டதே ஆகும். சிலம்பின்

கூத்தின் வகை பேசப்படுகிறது. அகக் கூத்து, புறக்கூத்து என்ற இருபெரும் பிரிவுகளைக் கொண்டு பல்வகைக் கூத்துக் கள் நிகழ்த்தப்பட்டு வந்த செய்தி. சிலப்பதிகாரத்தின் மூலம் புலனாகும் இக்கூத்து நாட்டியமே அன்றி நாடகமாகாது. எனவே நாடகம் என்பது பிற்பட்ட கலைவடிவமே என முடிவிடுவதில் தவறில்லை. நாட்டியமாக முகிழ்த்த கூத்து, பின்னர் தெருக் கூத்து என்றவகையில் வளர்ந்து, தெருக் கூத்தின் பண்பட்ட வளர்ச்சி நிலையாகவே நாடகம் மலர்ந்தது எனக் கொள்ளலாம், பழந் தமிழகத்தில் கோயில் களில் நாடகம் நடத்தப் பெற்று வந்த செய்தி கல்வெட்டுக் களின் மூலம் தெரிய வருகிறது. ஆனால் நாடகம் தோன்றிய சரியான காலத்தை வரையறுத்துரைக்க முடியவில்லை "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என மாணிக்க வாசகர் பாடுவதிலிருந்து அவர் காலத்தில் நாடகம் பெரு வழக்காயிருந்தது என உணரலாம். அக்காலத்தில் சமயம் பற்றிய நாடகங்களே நடிக்கப்ப்ட்டு வந்தன நமக்குக் கிடைத்த முதல் நாடகம் "இராசராசே சுவர விசயம்" என்பதே. இது தஞ்சை பெரிய கோயில் வரலாறு கூறுவதாம். கி. பி 1119 இல் கமலாய பட்டர் என்பவர் "பூம்புலியூர் நாடகம்" எழுதியதாக அறிகிறோம்.

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டு:

இசையும் பாட்டும் தமிழர் வாழ்வில் பெரும் பங்கு வகித்து வந்ததால், எதையும் இசைப்பாட்டு வடிவில் கேட் பதிலேயே பழந்தமிழர் ஆர்வம் கொண்டு விளங்கினர் என்ப தற்கு அக்காலத்து நாடகங்களும் சான்றாகும். 17ஆம் நூற்றாண்டில் திரிகூடராசப்ப கவிராயர் எழுதிய குற்றாலக் குறவஞ்சி பாட்டு வடிவில் தோன்றிய நாடகமாகும. 18ஆம் நூற்றாண்டில் கோபாலகிருஷ்ண பாரதி எழுதிய "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை" என்ற புராண நாடகம் புகழ் பெற்ற தாகும். அருணாசலக் கவிராயர் எழுதிய ராம நாடகம் அல்லி நாடகம், அபிமன்யு நாடகம், அசோகமுகி நாடகம் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன,

நாடக மறுமலர்ச்சி:

19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடக உலகில் மறுமலர்ச்சி உண்டாயிற்று. புராண நாடகங்களே வெளியான நிலைமாறி,வரலாற்று நாடகம், சமூக நாடகம், நகைச்சுவை நாடகம் ஆகியனவும் தோன்றின. பாட்டு வடிவிலான நாடகங்களுடன் உரைநடை வடிவில் அமைந்த நாடகங்களும் படைக்கப்பட்டன. ''பிரதாப சந்திர விலாசம்'' உரை நடையில் வெளிவந்த நாடகமாகும். காசி விசுவநாத முதலியார் எழுதிய ''டம்பாச்சாரி விலாசம்'' முதலில் தோன்றிய சமூக நாடகமாகும். ''தேசிங்குராச நாடகம்'' முதலில் தோன்றிய வரலாற்று நாடகமாகும்.சனோமனோல்லாசினி'' எனும் நாடகம் நகைச்சுவை நாடகமாகும். இவை தவிர, மதுரைவீரன் விலாசம்,நல்லதங்காள் நாடகம், பவளக்கொடி நாடகம், காத்தவராயன் நாடகம், ஸ்ரீமகாபாரத விலாசம், சகுந்தலை விலாசம், அரிச்சந்திர விலாசம் ஆகியனவும் இக்காலத்தில் நடிக்கப்பட்டன. கிறித்துவ மதச் சார்பான ஞானதச்சன் நாடகம்'' வேதநாயக சாஸ்திரியார் எழுதியதாகும். முகமதியரும் அல்லிபாதுஷா நாடகம் போன்ற இசுலாமிய நாடகங்களை எழுதினர்.

ஆங்கிலேயர் தொடர்பாலும், கல்வி வளர்ச்சியாலும் சேக்சுபியரின் நாடகங்கள் தமிழாக்கம் பெற்றன. சலோசலோசன செட்டியார் ''சரசாங்கி'' எனும் பெயரில் Cymbeline நாடகத்தைத் தமிழாக்கினார். சங்கரதாசு சுவாமிகளும் பல்வேறு நாடகங்களை எழுதி நாடகத் தமிழுக்கு நல்வாழ்வு தந்தார். பல ஆங்கில நூல்களையும் தமிழாக்கி வழங்கினார். பரிதிமாற் கலைஞர் எனும் தமிழ் வித்தகர் ''நாடக இயல்'' எனும் இலக்கண நூலை எழுதியதுடன், ரூபாவதி, கலாவதி, மான விசயம் ஆகிய நாடகங்களையும் தந்தார். சுந்தரம் பிள்ளை அவர்கள் வழங்கிய 'மனோன்மணீயம்'' தழுவலாயினும், தலைசிறந்த இலக்கியப் படைப்பாக நிமிர்ந்து நிற்பதாகும்.

20ஆம் நூற்றாண்டு:

நாடகத் தமிழுக்குப் புத்துணர்ச்சியும் புது வாழ்வும்

தந்தவர், பம்பல் சம்பந்த முதலியார் எனலாம்.எண்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியதோடன்றித் தாமே நடித்தும் நாடகக் கலைஞர்க்குத் தனிமரியாதை தேடித் தந்தவர் இவரே. இவரது நாடகங்கள் எள்ளல் தன்மை கொண்டவை. மனோகரா, லீலாவதி, சுலோசனா, அமலாதித்யன் சபாபதி போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

விடுதலைப் போராட்டத்தின் தாக்கமாக தேசிய நாடகங்களும் இக்காலத்தில் வெளிவந்தன. கதரின் வெற்றி, பம்பாய் மெயில், போன்ற நாடகங்கள் சிறப்பானவை கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்களின் சிறந்த படைப்புகளான ''கவியின் கனவு'' ''மனிதனும் மிருகமும்'' ஆகியன வீறுமிக்க தேசிய நாடகங்கள் ஆகும்.வரலாற்று நாடகம் எழுதி வெற்றி கண்ட அரு. ராமனாதனின் ''இராஜ ராஜ சோழன்'' காலத்தை வென்ற கவின்மிகு படைப்பாகும், பகுத்தறிவு இயக்கத்தின் செல்வாக்கு புரட்சிப் பார்வையும், சமுதாய சீர்திருத்த நோக்கும் கொண்ட நாடகங்கள் மலர உறுதுணை புரிந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் சீர்திருத்த நாடகம் தோன்ற வித்திட்டவர்களுள் தலையாயவர். அவரது வேலைக்காரி, ஓர் இரவு, நீதிதேவன் மயக்கம் போன்ற நாடகங்கள் இறவாப் படைப்புகளாகும். இந் நூற்றாண்டில் தோன்றிய நாடகங்களைப் பட்டியலிடுவது கூடாத காரியமாகும்.

பல்வேறு நாடக சபைகள் தோன்றி நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. ஆயினும் பல நாடகங்கள் இலக்கியத் தரமும், தமிழ் மணமும் இன்றிச் சூம்பிய பிறவிகளாகவே தவழுகின்றன. திரைப்பட நடிகர் மனோகர் அவர்களின் நாடகங்களும், விசு போன்றவர்களின் நாடகங்களும் இவ்வகையினின்று மாறுபட்டவையாகும். சிறந்த நாடகங்கள் தோன்றுவதற்குத் தமிழக மக்களின் விழிப்புணர்வும், பெருந்துணையும் வேண்டற்பாலனவாகும்.

★★

இசைத் தமிழ்

"இசை இன்பத் தேனையும் வெல்லும்" என்பார் பட்டுக் கோட்டை கலியாணசுந்தரம். இசைக்கு இசையார் எவருமிலர். எவ்வுயிரையும் வயப்படுத்தும் ஆற்றல் இசைக்குண்டென்பதை இன்றைய அறிவியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. இசையின் பெருமையுணர்ந்த பழந்தமிழர் அதனை முத்தமிழுள் ஒன்றாகக் கொண்டு பேணி வளர்த்தனர். நம் முன்னோர் 11991 இசை வகைகளைக் கண்டுணர்ந்து பயின்று வந்தனர் என இசை வல்லார் கணக்கிட்டுரைப்பர்.

இசையின் விளக்கம்:

ஒளியில் ஏழுவகை நிறமிருந்து இயங்குதல் போல, ஒலிகளும் ஏழு வகையாக இயங்கும் என்பர். அவ்வேழு வகை ஒலிப்பிரிவுகளையே ஏழு நரம்புகள் எனப் பகுப்பர், ஏழு நரம்புகள் இயைந்ததே பண் எனப்படுகிறது. ஏழு நரம்புகள் கொண்ட ஒலி வகையைப் பழந்தமிழர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிட்டு வழங்கினர்.

பழந்தமிழ் இசை நூல்கள்;

கலையை அடிப்படையாகக் கொண்டு சமுதாய வாழ்க்கையை அமைத்துக் கொண்ட பழந்தமிழர் வாழ்வு, இசையும் கூத்துமாகவே செழித்திருந்தது என்பதை இலக்கியங்கள் உணர்த்தும். ஆயினும் அயலவர் சூழ்ச்சியானும். ஆதிக்கத்தானும், பிற இனத்தவரொடு நெருங்கிப் பழகி இணைந்து வாழ முயன்ற தமிழர்களின் அன்பின்பாற்பட்ட அறியாமை

யானும் அவர்தம் புலமைச் சிறப்பிணையும், செழுமைக் கலைக் கூறுகளையும் முழுமையாக அறிந்துகொள்ளும் பேறு நமக்குக் கிட்டவில்லை. பல்வேறு பழந்தமிழ் இலக்கியங்கள் அழிந் தொழிந்தது போல இசைத்தமிழ் நூற்களும் இறந்துபட்டன தமது சிலப்பதிகார உரையில் (உரைப்பாயிரம்) "இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும், தேவ விருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாவுள்ள தொன் னூல்களும் இறந்தன" என அடியார்க்கு நல்லார் குறிப்பிட் பிட்டுள்ளார். "........ ......சிகண்டி யென்னும் அருந்தவ முனி........ செய்த இசை நுணுக்கமும், பாரசவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திர காளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த 'பரதசேனாதீயமும்' அழிந்துபட்ட நூல்கள் என்பதையும் அடியார்க்கு நல்லார் உரை குறிப்பிடுகின்றது, சிலப்பதிகார உரையில் அக்காலத்தில் வழங்கிவந்த முப்பதுக்கும் மேற்பட்ட தோற்கருவிகள் பற்றிய செய்தி அறியக் கிடக்கின்றது. இதனால் பழந்தமிழ கத்தில் இசைத்தமிழ் செழித்திருந்தது என்பதை அறியலாம். மலைபடுகடாம் எனும் நூலில்,

"கார் கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையீர்"

எனப் பாணர்கள் சுமந்து செல்லும் இசைக் கருவிகளுக்குக் கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்கும் பலாக்காய் களை உவமையாகக் கூறியுள்ளதைக் காண்கிறோம். பாடிப் பரிசில் பெறும் பாணர் இனம் குறித்த பல்வேறு பாடல்களும் இசைத் தமிழ் வளர்ச்சியை உணர்வதற்குத் துணை புரிவனவாம்.

பல்லவர் காலம்:

சங்க காலத்திற்குப் பின்னர் புறச்சமய நீரோட் டத்தை எதிர்த்து நின்ற பத்தி இயக்கத்தின் செல்வாக்கு, தமிழிசைக்கு மறுவாழ்வு அளித்த செய்தியை அறிகிறோம். பாவுற்ற செந்தமிழ் இன்சொல்வளப் பதிகத் தொடை பாடி நாவுக்கரசு சென்று உலகேழினும் நண்ணப் பெற்றவர், திருநா

வுக்கரசர். தேவாரத்தின் மூலம் யாழ், வீணை, குழல் கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம், ஏமாந்தை, மிருதங்கம், மத்தளம், தமருகம், துந்துபி, குடமுழா, தத்தலகம், முரசம், உடுக்கை, தாளம், துடி, கொடு கொட்டி ஆகிய இசைக் கருவிகள் வழங்கிய செய்தி அறியப்படும். காரைக்காலம்மையாரின் பதிகங்களும் தமிழிசைக்கு வாழ் வளித்த பாடல்களாகும்.

பத்தி இயக்கக் காலத்திற்குப் பின்னர் இசைத்தமிழ் செழித்து வளர்ந்த தன்மை குறித்துத் துல்லியமாக அறிய முடியவில்லை. எனினும் குலோத்துங்க சோழன் இசைநூலி யற்றிய செய்தியைக் கலிங்கத்துப்பரணி கூறும். புரவலர்கள் அருகியதால் பிற்காலத்தில் தமிழிசை மறையத் தொடங் கிற்று, 17-ஆம் நூற்றாண்டு முதல் தெலுங்கிசையே செல் வாக்குப் பெற்றது. அக்கால அரசியல் சூழ்நிலை தமிழிசை மூடங்கிப் போனதற்குப் பெருங்காரணமாகும். தியாகராயர் கீர்த்தனங்கள் தெலுங்கில் பாடப்பெற்ற காலத்தில், கோபாலகிருஷ்ணபாரதி அவர்களின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், வேதநாயகம் பிள்ளை அவர்களின் சர்வ சமய சமரசக்கீர்த்தனைகள், துவண்டுபோன தமிழிசையைத் தூக்கி நிறுத்தும் முயற்சியாகத் தோன்றின. 19-ஆம் நூற்றாண்டில் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச்சிந்து தமிழிசைக் கோர் கிளர்ச்சியைத் தந்தது. பள்ளுப்பாடல்கள், குறவஞ்சி ஆகியன தமிழிசையின் ஆதார சுருதியாக விளங்கித் தமிழர் களின் இசைத் தன்மைக்குப் புது மெருகு கூட்டிய போதினும், சங்கீத வித்துவான்கள் தமிழிசை வளர்ச்சியைத் திட்ட மிட்டுக் கெடுக்கும் சூழ்ச்சி 19-ஆம் நூற்றாண்டு வரை அடர்ந்திருந்தது.

மறுமலர்ச்சி:

20-ஆம் நூற்றாண்டில் தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு வழிகாணும் துடிப்பும் முனைப்பும் காணப்பட்டது. ஆபிர காம் பண்டிதர் கருணாமிருத சாகரம் எனும் நூலை இசை மரபொட்டி ஆக்கினார். விபுலானந்த அடிகளாரின் "யாழ்

நூல்" தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு விளக்கமாயிற்று. ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தமிழிசைக் கல்லூரி நிறுவி, இசை மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். அவர் தியாகய்யர் கிருதிகளைப் பாடும் சங்கீத சபாக்களில் தமிழிசை உலாவர வழிவகுத்தார். சிதம்பரத்தில் கூட்டிய மாநாட்டில் இசை வல்லார்கள் சேர்ந்து, தமிழ்ப் பாடல்களே பெரும்பாலும் பாடப்பட வேண்டும் எனத் தீர்மானித்தனர். நல்ல தமிழ்ப் பாடல்கள் இயற்றவும் பாடவும் ஊக்கமளிக்கும் வகையில் பெருந்தொகையை நன்கொடையாக வழங்கிய பெருந்தகை ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர் களின் அருமுயற்சிக்கிடையிலும், "நமது வித்துவான்கள் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடாமைக்குக் காரணம் கச்சேரி களை கட்டத் தகுந்த பாட்டுகள் தமிழில் இல்லாத தோஷந்தான்" என எதிர்முழக்க மிட்டோர் உண்டு. எனினும் தமிழிசை இயக்கத்திற்கு எதிராக நடந்த முயற்சி களை முறியடிப்பதற்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமது பாடல்கள் வழியாகவும், அறிஞர் அண்ணா அவர்கள் தமது எழுத்து, பேச்சு ஆகிய இருவழியாகவும் பெரும் போர் தொடுத்தனர், தமிழிசை இயக்கத்தை மிகுமக்கள் இயக்க மாக மாற்ற இந்நூற்றாண்டில் பெருமுயற்சி மேற்கொள்ளப் பட்டபோதினும் சங்கீத சபாக்களில் தமிழிசை தனியாட்சி செய்யும் நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பதை நினைக் கும்போது வருத்தமே மிஞ்சுகிறது.

பிறநாட்டார் தமிழ்ப்பணி

[கிறித்துவர்]

செந்தமிழ்த் தேனை அள்ளிப் பருகி அகமகிழ்ந்த பிற நாட்டு அறிஞர் பெருமக்கள் தாமும் தமிழன்னைக்கு நலங் கூட்ட விழைந்தனர். அவர் தம் புலமை வளமும், பகுத்தாயும்

திறமும் தமிழிலக்கியத்திற்குப் பெருமை சேர்த்ததோடு, தமிழர்களின் கண்களையும் திறந்தன. வறண்ட கோடையின் தாகம் தீர்க்கும் நறுந்தமிழ்ச் சுனையாகவும். களைத்து வந்த தமிழ் உள்ளங்கட்கு இளைப்பாறக் கிடைத்த குளிர் சோலையாகவும் அவர்தம் படைப்புகள் விளங்கின. இந்நாட்டில் பிறந்தவர்க்கு இல்லாத தமிழ்த் தொண்டுணர்வு அவர்களிடம் காணப்பட்டது. தன்மான உணர்வின்றிச் சொந்த மொழியையே இகழ்ந்தும், சிதைத்தும், விலைபகர்ந்தும் வாழ்ந்து வந்த இமை மூடிகளின் கண்களைத் திறந்தும், தமிழின் தனிச் சிறப்புக்களை வெளிக் கொணர்ந்தும் தமிழ்த் தொண்டாற்றிய அப்பேரறிஞர்களின் பணி போற்றி வணங்கத் தக்கது. தமிழில் முதன் முதல் வெளிவந்த உரைநடை நூல் மேனாட்டார் வெளியிட்ட கிறித்துவ சமய நூலாகும்.

1. தத்துவ போதகர்:

இத்தாலியிலிருந்து கி. பி. 1606-ல் தமிழகம் போந்த 'ராபர்ட் டி நொபிலி' என்பார் தமது பெயரையே தத்துவ போதகர் எனத் தமிழில் மாற்றியமைத்துக் கொண்டவர் ஆவர். தத்துவக் கருத்துக்களை எளிய நடையில் எடுத்து விளக்கிய இவர் ஞானோபதேச காண்டம், தத்துவக் கண்ணாடி, கடவுள் நிர்ணயம், 'ஆத்தும நிர்ணயம், மந்திர மாலை, தூஷணதிக்காரம்,ஏசுநாதர் சரித்திரம், பரம சூட்சும அபிப்பிராயம், சகுண நிவாரணம், வேதலட்சணம், நித்ய சீவன், சல்லாபம், புனர்ஜென்ம ஆட்சேபம் போன்ற நூல்களை எழுதினார். தமிழ்த் துறவி போல மதுரையில் வாழ்ந்த இவரது நடையில் வடசொல் கலந்திருக்கும். தமிழ்-போர்த்துக்கிசிய அகராதி ஒன்றும் இவர் வெளியிட்டுள்ளார்.

சீகன் பால்கு:

கி. பி. 1706-ல் தரங்கம்பாடி வந்து, அச்சகம் நிறுவி, புரட்சிக் கிறித்துவ "சமயம் சார்ந்த துண்டுப் பிரதிகளை வெளியிட்டார் தமிழில் பல நூல்களையும் அச்சிட்டார். "தமிழ்-இலத்தீன் ஒப்பிலக்கண ஆய்வு" எனும் நூலை

எழுதினார். இங்கிலாந்தில் இவரது சமயத் தொண்டைப் பாராட்டிப் பேசிய விழாவில் இலத்தீனிலும் தமிழிலும் பேசி மகிழ்ந்தார். கிறித்துவ நூல்கள் பலவற்றைத் தமிழாக்கிய பெருமைக்குரியவர்.

எல்லீசு:

தமிழிலும் வடமொழியிலும் புலமை கொண்ட இவர் சென்னை மாவட்டாட்சியராகப் பணியாற்றினார். திருக்குறளின் முதல் பதின்மூன்று அதிகாரங்களுக்கு ஆங்கிலத்தில் உரை எழுதினார். வீரமாமுனிவரின் வரலாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரத் துணை புரிந்தார். தமிழ் ஏட்டுச் சுவடிகளைச் சேகரிப்பதில் பெரிதும் ஆர்வங் காட்டினார்.

இரேனியசு ஐயர்:

பாளையங் கோட்டையிலிருந்து சமயப் பணி புரிந்து வந்த ஜெர்மானியர். டாக்டர் போப் இவரைச் சிறந்த தமிழறிஞர் எனப் பாராட்டியுள்ளார். 'வேத உதாரணத் திரட்டு' என்பது இவர் எழுதிய நூலாகும். நெல்லை மாவட்டத்தில் டோனாவூரை அமைத்த பெருமைக்குரியவர்.

போப்:

நெல்லை மாவட்டம் சாயர்புரத்தில் சமயப்பணி ஆற்றிய இவர், தம் கல்லறையில் 'தாம் ஒரு தமிழ் மாணவர்' எனக் குறிப்பிடச் சொன்னவர் ஆவார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழாசிரியப் பணிபுரிந்தார். தமிழின் பெருமை பகரும் பல கட்டுரைகளை வடித்துள்ள இவர் திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். "தமிழ் நாட்டுக் கவிஞர்கள்" (Poets of the Tamil Lands) "புறநானூறு மற்றும் புறப்பொருள் வெண்பா மாலையின் சாரம்" ஆகிய ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். இவரது தமிழ்ப்பணியும் தமிழுணர்வும் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன.

கால்டுவெல்:

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த இடையன் குடியில் பணியாற்றிய இவர் அயர்லாந்து நாட்டினர். கி.பி. 1738-ல் தமிழகம் வந்தார். நெல்லை மாவட்ட வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற அரிய நூல் வழியாகத் திராவிட மொழிகள் ஓரினத்தன என்ற உண்மையை உலகுக்குணர்த்தினார். இவரது நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் ஆகிய நூல்கள் சிறந்தவையாகும்.

வீரமாமுனிவர்:

கிறித்துவ தொண்டுழியர்களுள் (Missionaries) ஜோசப் கான்ஸ்டைன் பெசுகி எனும் வீரமாமுனிவர் குறிப்பிடத் தக்கவர். இத்தாலி, கிரேக்கு, இலத்தின், எபிரேயம் போன்ற மொழிகளில் புலமை கொண்ட இவர், சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் கற்றார். இவர் பல கிறித்துவ இலக்கியங்களைப் படைத்தார். கம்பனின் காப்பிய அமைப்பை வியந்து போற்றிய வீரமாமுனிவர், தாமும் "தேம்பாவணி" என்ற கிறித்துவக் காப்பியத்தைப் படைத்துப் புகழ் பெற்றார். இவருக்கு வீரமாமுனிவர் என்ற சிறப்புப் பட்டம் வழங்கித் தமிழர்கள் பெருமை செய்தனர். மேலும் திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மாள் கீர்த்தனை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கருணாம்பரப் பதிகம் ஆகிய செய்யுள் நூல்களையும் இவர் இயற்றினார், தமிழ் நீதி நூல்களைத் தொகுத்து "தமிழ்ச் செய்யுள் தொகை" என பெயரிட்டார்.

இவர் இலக்கண நூல்களையும் எழுதியுள்ளார். ஐந்திலக்கணம் பற்றிய "தொன்னூல் விளக்கம்" என்னும் இலக்கண நூலையும், கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் இலத்தீன் நூலையும் இயற்றியுள்ளார்.

இவரது "சதுரகராதி" நான்கு அதிகாரங்களில் தமிழ்ச் சொற் பொருளை விளக்கும் அகராதி நூலாகும். இதுவே

அகராதிகளுக்கு வழிகாட்டி. மேலும் தமிழ்ச் சொற்கட்குப் பொருள் சொல்லும் இலத்தீன் அகராதி ஒன்றும், இலத்தீன் தமிழ் போர்த்துக்கீசிய அகராதி ஒன்றும் வெளியிட்டார்.

பல உரைநடை நூல்களும் இவரால் எழுதப்பட்டன. இவரது "பரமாரத்த குருகதை" சிறப்பானது. வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் மறுத்தல் போன்ற சமய சார்பான நூல்களையும் இவர் எழுதியுள்ளார். குறளின் முதல் இரண்டு பால்களையும் இலத்தினில் மொழி பெயர்த்துள்ளார்.

இவர் செய்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் புகழ் பெற்றதாகும். எகர, ஒகர வேறுபாடு காண்பதில் இருந்த குழப்பத்தையும் இடர்ப்பாட்டையும் நீக்கிய பெருமை இவருக்கே உண்டு.

இந்நாட்டுக் கிறித்துவர் தொண்டு:

வேதநாயகம் பிள்ளை: (பக்கம் 114 காண்க)

வேதநாயகம் சாத்திரியார்:

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த இவர் தம் இலக்கியப் படைப்புகள் வாயிலாகக் கிறித்துவ மக்களை விழிப்படையச் செய்தார். ஏசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு "பெத்லகேம் குறவஞ்சி" எனும் நாடகத்தை எழுதினார். "சென்னைப் பட்டண பிரவேசம்" "ஞானத் தச்சன் நாடகம்" ஆகிய நாடகங்களும் இவரது பெருமையை விளம்பும். பராபரன் மாலை, பேரின்பக் காதல், ஞான உலா, ஞானக் கும்மி, ஞான ஏற்றப் பாட்டு ஆகியனவும் இவரது சிறந்த படைப்புகளாகும்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்:

தமிழர் பயன்படுத்திய யாழ் என்ற கருவியை ஆராய்ந்து உருவாக்கிய இவர் தமிழிசையின் பெருமை

விளக்கிய வித்தகர் ஆவார். மேனாட்டிசை, தமிழிசை ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்தார். கர்ணாமிர்த சாகரம் என்பது இவரது இசை நூல்.

டாக்டர் சுவரிராயன்:

திருப்பத்தூரில் கிறித்துவ ஆசிரமம் நிறுவி, தேவாரம், திருவாசகம். போன்ற அமைப்புடைய கிறித்துவ பத்திப் பாடல்களை இயற்றி ''இறைவனை வழிபடத் தூண்டிய இவரது பணி பாராட்டத்தக்கது. பயண இலக்கியத்திற்கு முன்னோடியாக விளங்கியவர் இவரே என்றும் மொழிவர்.

கிருட்டிணபிள்ளை:

இவரது இரட்சணிய யாத்திரிகம் எனும் தழுவல் காப்பியம் 4000 விருத்தப் பாக்களைக் கொண்டது.இவரைக் கிறித்துவக் கம்பன் எனப் புகழ்வர். இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் போன்ற நூல்களையும் படைத்துள்ளார்.

சாமிநாதப்பிள்ளை:

எல்லீசுக்குத் தமிழ்ப் பயிற்சி தந்த புதுச்சேரிக்காரர் நசரைக் கலம்பகம் சாமிநாதன் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்களைப் படைத்துள்ளார்.

இவர்களைத் தவிர தனி நாயகம் அடிகள் போன்ற கிறித்துவ பெருமக்களின் தமிழ்த் தொண்டும் பாருள்ளளவும் நிலைபெறுவதாகும்.

முகமதியர் தமிழ்த் தொண்டு

பிற மதத்தவர் தமிழுக்கு அணிசெய்யும் இலக்கியங்களையும் சமய நூல்களையும் இயற்றித் தமிழுக்கும் சமயத்திற்கும் ஒருங்கே தொண்டாற்றிய பான்மை முகமதிய பெருமக்களையும் தமிழ்ப்பணியாற்றத் தூண்டிற்று. தாமும் தமிழ்த் தாய்க்குப் பெருமை சேர்க்க விழைந்து பல இலக்கியங்களைப் படைத்த முகமதியர்களுள் முன்னணியில் நிற்போர் சிலர் ஆவர். அவர் தம் படைப்புகளை இங்குக் காண்போம். இவர்களது படைப்பில் அரேபிய சொற்களும் இடம் பெற்றுள்ளன.

உமறுப்புலவர்:

எட்டயபுரத்து அரசவைக் கவிஞராகப் பணியாற்றிய பெருமைக்குரிய இவர் சீறாப்புராணம், சீதக்காதி கோவை, முதுமொழி மாலை ஆகிய இலக்கியங்களைப் படைத்துள்ளார். வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கிணங்க நபிகள் நாயகத்தின் பெருமைமிகு வாழ்க்கையை விளக்குவதற்காக இயற்றப்பட்ட 'சீறாப்புராணத்தில்' கம்பராமாயணம், சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களின் மணம் ஆங்காங்கே கமழுகிறது. அராபிய நாட்டைப்பற்றி வருணிக்கும் போதுகூடத் தமிழகத்தின் வாழைத் தோட்டங்களே புலவரின் கற்பனைக் கண்முன் தோன்றும் பான்மையை இதில் காண்கிறோம். இந்நூல் மூன்று காண்டங்களையும் 5026 பாக்களையும் கொண்டதாகும்.

வண்ணக் களஞ்சியப் புலவர்:

இவர் சீறாப்புராணத்தின் அடியொற்றி இராச நாயக

புராணம் எனும் நூலை 2240 விருத்தப்பாக்களில் படைத்தருளினார். வண்ணக் கவிகளைப் பாடுவதில் திறமை கொண்டவராதலால் அமீது இப்ராஹீம் எனும் பெயர் கொண்ட இப்புலவர் வண்ணக் களஞ்சியப் புலவர் என அழைக்கப்பட்டார். தீன்விளக்கம், முத்பு நாயகம், அலிபாஷா நாடகம் ஆகிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

குணங்குடி மஸ்தான்:

இவர் ஒரு துறவி. இவரது பாடல்கள் தாயுமானவர் பாடல்களைப் போன்றனவாகும். மிக எளிமையாகப் பேச்சுத் தமிழில் பாடல்களைப் புனைந்துள்ளார். திருமணத்தை வெறுத்துத் துறவு பூண்ட இவர்,

"என்னை விட்டால் மாப்பிள்ளைமார் எத்தனை
யோ உன்றனுக்கே
உன்னை விட்டால் பெண்ணெனக்கு உண்டோ
மனோன்மணியே"

என 'மனோன்மணிக் கண்ணியில்' பாடுவார். இவர் சதகம், நந்தீசுவரக் கண்ணி, ஆனந்த களிப்பு ஆகிய நூல்களையும் தந்துள்ளார்.

சவ்வாது புலவர்:

இவர் 'முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்' நூலை இயற்றினார். இவரைப் பின்பற்றிச் சையது மீரான் லெப்பை என்பவர் நபிநாயகம் பிள்ளைத்தமிழ் எனும் நூலைத் தந்தார்.

குலாம் காதிறு நாவலர்:

குலாம் காதிறு நாவலர் பாடிய 'புலவராற்றுப் படை' சிறப்பானதாகும்.

செய்கு தம்பிப் பாவலர்:

இவர் நாகைக் கோவை, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, இன்னிசை மாலை முதலிய நூல்களைப் படைத்துள்ளார், அவதானக் கலையிலும் இவர் புகழ்பெற்றவர்.

இசுலாமிய புலவர் தம் படைப்புகளாலும், எச்சமயத்தவரையும் உடன் பிறந்தவராகக் கருதும் தமிழர்களின் உறவுத் மனத்தாலும் பல அரேபிய சொற்கள் தமிழோடு கலந்துவிட்டன. அத்தர், அண்டா, வத்தி, கூஜா, சபாஷ், பேஷ், பலே, உஷார், ஜாக்கிரதை, மக்கூல், வஜா, அமீனா, வக்கீல், போன்ற சொற்கள் இத்தகையனவாகும்.

இருபதாம்
நூற்றாண்டுப் பாவலர்கள்

“தமிழிலக்கிய வரலாற்றில் புதுமைப் போக்கும் புரட்சிப் பார்வையும் ஆழப்பதிந்த காலம் இருபதாம் நூற்றாண்டாகும். பாட்டுத் துறையிலும் இந்நூற்றாண்டில் புத்தொளி பரவிற்று. விழிப்பும் துடிப்பும் புலவர் உணர்வை ஆட்கொண்டன. பொங்கி எழுந்த புதுமைப் பெருக்கில் புரட்சிப் பயிர் விளைக்க எழுந்த பாவலர் பெருமக்கள் வாழையடி வாழையாகப் பெருகினர். கவிதைப்பூங்காட்டில் மறுமலர்ச்சிப் பூக்கள் மணம் வீசி மலர்ந்தன”

மகாகவி பாரதியார்:

"இருபதாம் நூற்றாண்டுப் பாவலருள் தலைமைச் சிறப்பும் முதன்மைப் பேறும் மிக்கவர் பெரும்புலவர் பாரதியே ஆவார். எதையுமே புதுமைக்கண் கொண்டு நோக்குவதில் ஆர்வம் மிகுந்து விளங்கிய அவர் சுவை புதி தாய்ப் பொருட் புதிதாய் வளம் புதிதாய்ச் சொற் புதிதாய் விளங்கும் கவிதைகளை எளிமை நலங்கனிய எழுச்சியோடு தந்தார். தமக்குப் பின் பெரும்படை ஒன்றே திரண்டெழுந்து எளிய இனிய ஆற்றொழுக்கான கவிதைகளைப் புனைவதற்கு வழிகாட்டத் தகும் கவி வன்மை அவரிடம் உறைந்துகிடந்தது அக்கவி வன்மையால் தமிழ்ப் பயிர் செழிக்க அவர் ஆற்றிய தொண்டு அளப்பரிதாம். இந்நூற்றாண்டு கவிதை வளம் கொழிக்கத் துணை நின்று ஊக்கியவர் அவரே*"

ஆன்மீகம் எனும் வீணை ஒலியோடு இயைந்து செல்லும் தேசிய உணர்வுமிக்க சமுதாய மறுமலர்ச்சிக் குரலே பாரதியின் குரல். இனிமையான அக்குரல் இருபதாம் நூற் றாண்டுப் பாட்டுலகிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். செ. யா. திருந்திளையன் அவர்களின் பாட்டுலகில் பாரதி எனும் சிறு நூலில் இக் கருத்துக்கள் சற்று விரிவாகவே விளக்கப்பட் டுள்ளன.

பாரதிதாசன்

எளிமை உருவெடுத்த இருபதாம் நூற்றாண்டுப் பாட்டுலகில் தனியதோர் இனிமையுணர்வு தவழவும், புரட்சிக் கனல் பெருகவும் பாடல்கள் புனைந்து புகழ் முடியின் உச்சிக்கே குடியேறி விட்டவர் பாவேந்தர் பாரதிதாசனார்.

*"பாட்டுலகில் பாரதி"—செ.யா. திருந்திளையன் (1977)

சிந்தனை வனப்பும், செயல் முனைப்பும் மிக்க அவரது பாடல்கள் தமிழிலக்கிய உலகில் விவேகமானதொரு போக்குக்கும், வேகமானதொரு புரட்சிக்கும் வழியமைத்துத் தந்தன. அவை தமிழ் கூறும் நல்லுலகம் விழிப்புறுதற்கும், விழுமிய வாழ்வுக்கான நெறிமுறைகளை உணர்தற்கும் பேருதவி புரிந்தன என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. பாரதி சுட்டிக் காட்டிய கொடுமைகளை வெட்டிப் பிளந்து வீசியெறிந்தவரே பாரதிதாசன். உணர்ச்சித் தழலில் பழுக்கக் காய்ச்சிய சொற்கள் அவரது பாடல்களில் துள்ளிக் குதித்தன. பாரதி என்ற ஆணிவேரில் வலுவாக நின்று காய்த்துக் குலுங்கிய கனிமரமாகவே அவர் காட்சியளிக்கிறார்.*

பாரதிதாசனும் தமிழும்:

தமிழைச் சுவைக்கச் சுவைக்கப் பாடி மகிழ்ந்தவர் பாரதிதாசன். தனிச்சுவையுள்ள சொல்லை எங்கள் தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை என இறும்பூதெய்திப் பாடிய பாவேந்தர்,

சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும்
என்றன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்"

என வீறு கொண்டு பாடிய புரட்சிக்கவியாவார். கனிச்சுளையும் கரும்பின் சாறும், பனிமலர்த்தேனும் காய்ச்சு பாகிடை ஏறிய சுவையும், நனிபசு பொழியும் பாலும், தென்னை நல்கிய குளிரிள நீரும் இனியனவெனினும் தமிழே அவர்க்கு உயிராகச் சுவைத்தது. தமிழுக்காக உயிரும் உள்ளமும் உடலும் ஈந்து உவந்த பாவலர்,

"தமிழுக்கு நீ செய்யும் கேடு பெற்ற
தாய்க்குச் செய்யும் மானக் கேடு
சிமிழ்க்காதே சிந்தனைப் பீடு-நாளும்
செழிக்கட்டும் தமிழ் மறைக் காடு"

---

*விரிவான ஆய்வை எமது "தாசனும் கவிதைத் தன்மையும்" எனும் நூலிற் காணலாம்.

என முழங்கினார். தமிழ்ப் பகை நடுங்க முரசங் கொட்டியவர் பாரதிதாசனே ஆவார். தமிழை உயிர் மூச்செனக் கொண்டு வாழ்ந்த பாவேந்தர் எரியும் பெருநெருப்பாகவே மிளிர்ந்தார். தமிழ்ப் பகைவர்கள் அந்நெருப்பினை அணுகவும் முடியவில்லை; அவிக்கவும் முடியவில்லை. அந்நெருப்புக் கோளம் உமிழ்ந்த அனலால் தமிழ்ப் பகைவர்களும் தமிழுக்கு நலிவேற்படுத்திய துறைகளும் சுட்டெரிக்கப்பட்டனர். சமயத் துறை கூட அவரிடமிருந்து தப்பமுடியவில்லை.

"தமிழகத்தில் தமிழ்ப் பயிர்-அது
தமிழர் கட்கெல்லாம் உயிர்
தமிழிற் சிவம் பெரிதென்றால்-அது
தலையின் இழிந்த சிறுமயிர்"

எனத் தமிழ்ப் புரட்சி பாடிய பாவேந்தர், வடமொழியானது கோவில்களில் ஆட்சி செய்வதை வெறுத்தார்.

"எல்லா மதங்களும் நம் தமிழ்க்கே-மிக
எதிர்ப்புடையன என் மானே
பொல்லா மதங்கள் தொலைவ தெந்நாள்-தமிழ்
பொலிவ தெந்நாள் செந்தேனே?

என உள்ளம் மறுகுவார், கவிஞர்.

"உரையிலும் எழுத்திலும் செயலிலும் பிறரின்
உருவினை முழுமையும் ஒழித்தோம்"

...னும் நிலை ஏற்பட விழைந்தவர், பாவேந்தர்.

"செங்குருதி தன்னில் தமிழ்த்தன்மை வேண்டும்
சிறிதும் அயலான் கலப்பின்மை வேண்டும்"

...னும் நோக்கங் கொண்டு உழைத்த பாவேந்தரின் வருகை ...மிழையும், தமிழர்களையும் தலை நிமிரச் செய்ததெனின் ...து மிகையன்று. அவரது தமிழியக்கம் ஒவ்வொரு தமிழனின் ...்லத்திலும் ஒளி வீசுவது தேவையாகும்.

கவியரசு கண்ணதாசன்

திரைப் பாடல் துறையில் நுழைந்தபின் அரசியல் ஈடுபாட்டால் அரசியல் இயக்கப் பாடல்களும் புனைந்து வெற்றிக் கொடி நாட்டிய கண்ணதாசன், அனுபவம் முதிர்ந்த நிலையில் அமைதி தவழும் பாக்களையும், ஆன்மீக பாக்களையும், தத்துவ நயஞ்செறிந்த பாக்களையும் புனைந்து பெரும் புகழ் ஈட்டினார். பாரதியின் பழகு தமிழை மேலும் எளிமைப் படுத்தி வெற்றி கண்டவர் பாரதிதாசன் என்ற போதிலும். ஒரு சில அருஞ்சொற்களையாவது ஒவ்வொரு தமிழனும் அறிதல் வேண்டும் எனும் நாட்டங் காரணமாகப் புழக்கத்தில் இல்லாத இலக்கியச் சொற்களையும் தமது பாடல்களில் பயன் படுத்தியவர், பாரதிதாசன். கவிஞர் கண்ணதாசனோ பாமரரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய சொற்களையே எடுத்தாண்டு, தத்துவக் கருத்துக்களையும் மிக நளினமாக விளக்கிவிடும் வித்தகராகப் புகழ் முடி சூடியவர் ஆவார். அழுது புலப்புவதில் ஆர்வம் கொண்டவர் கண்ணதாசன். அவரது பாடல்களில் அழுகைச் சுவை தனியரசோச்சும். அவரைப் போன்று அழுது அழுது அவலத்தைப் பிழிந்து காட்டும் திறம் எவர்க்கும் கைவராத ஒன்றாகும். அழுகைக் காட்சியில் கம்பனையும் வென்று விட்ட திறம்மிக்கவர் கண்ணதாசன். இவரை அழுகைக் கவிஞர் என்று கூட அழைக்கலாம்.

"நுவலும் கவிதையிலோர்
நூல்புனைய எண்ணுகிறேன்
அவலக் கவிதையின்றி
அடுத்தொன்றும் தோன்ற வில்லை"

எனும் கவிஞர் கூற்றும் இதனை மெய்ப்பிக்கும்.†

---

†விரிவான திறனாய்வை எமது "கண்ணதாசனின் கவிதை வளம்" எனும் நூலிற்காணலாம்.

"நாளைப் பொழுதில் நாமிருப்ப துண்மையில்லை
வேளைக்கு வேளை விளையாடு சிறுமனமே"

என அவர் தமது நெஞ்சொடு புலம்பினாலும், கவன்று கதறும் நிலையை உதறித்தள்ள முடியாமல் அவர் தவிப் பதைக் காணலாம். இத் தவிப்பின் காரணமாகவே ஆழ் கடல் முத்துக்களாய்ப் பல தத்துவக் கருத்துக்களை அவரால் அள்ளித் தரமுடிந்தது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

தொல்காப்பியம்

பண்டைத் தமிழரின் அறிவுத் திறத்திற்கும் ஆற்றல் சிறப்பிற்கும், நாகரிக முதிர்ச்சிக்கும், நானிலம் மெச்சும் வளர்ச்சிக்கும் விளக்கமாகத் திகழும் பெருமை மிக்கது. தொல்காப்பியமாம். தமிழின் இலக்கணம் விளம்ப எழுந்த நூலாயினும், பழந்தமிழர் தம் நெறிப்பட்ட வாழ்வையும் நயமிகு பண்பையும் தெளிந்துரைக்கும் அருந்தமிழ்த் தொன்னூல் தொல்காப்பியமே. "முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத் தோனே போக்கருப னுவல்" எனும் தொல்காப்பிய பாயிர வரிகளால் தொல்காப்பியத்திற்கு முந்தி எழுந்த இலக்கண நூல் உண்டு என்பதும் போதரும். அகத்தியமே தொல்காப் பியத்திற்கு முன்னெழுந்த இலக்கண நூல் என்பதை இறைய னாரகப் பொருளுரை கூறும். எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்கள் தொல்காப்பியத்தில் உண்டு.

எழுத்ததிகாரம், நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஒன்பது பகுதி அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இதில் 'மரபு' எனும் சொல்லால் முடியும் அதிகாரங்களில் பிற அதிகாரங்களில் கூறுதல் போல முன்னோர் தம் கருத்துக்களை இடையிடையே கூறுதலோடு இறுதி நூற்பாவில் முன்னோர் கருத்தினைக் கூறியே முடிக்கிறார். பிறப்பியலில் எழுத்துக்கள் எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வாறு பிறக்கும் என்பதை இன்றைய மொழி நூலாரும் வியக்குமளவிற்குத் துல்லியமாகக் கூறியுள்ளார். தொல்காப்பியர்க்கு முன்னரே மொழியைக் குறித்து ஆழ்ந்து ஆராய்ந்துரைத்த அறிவின் வல்லார்தம் வழிகாட்டுதலே, இன்று தொல்காப்பியரை மொழியியலார் வியந்து நோக்குமளவுக்கு உயர்த்தியுள்ளது. "தத்தம் திரிபே சிறிய வென்ப" என்ற பிறப்பியல் நூற்பா தொல்காப்பியர்க்கு முன்னரே இத்தகைய ஆய்வு நோக்கு காணப்பட்டது என்பதை நிறுவும்.

திருத்திக் கொள்க

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
1	பிணக்கிற்கே	பிணக்கிற்கோ	7
	அவர்கள்	அவர்கள்.	11
2	அகம்புறம்	அகம், புறம்	12
	ஆற்றுப் படையும்	ஆற்றுப்படையும்	4 கீழிருந்து
3	கூறுவான்	கூறுவான்.	13
	பொருந்தி யமைந்து	பொருந்தியமைந்து	15
	உள்ளுறையுவமாகும்	உள்ளுறையுவமமாகும்	17
4	வழிப்பாட்டை	வழிபாட்டை	8
	கிறப்பை	சிறப்பை	17
	காண்கிறோம்	காண்கிறோம்.	25
5	உலகபெருநோக்கமும்	உலகப்பெருநோக்கமும்	1
	சொல்லின்	செல்லியின் (Shelly)	10
	கொடியையாடு	கொடியொடு	21
	பெற்றிய வாய்ச்	பெற்றியவாய்ச்	25
6	நிகழ்கிகளை	நிகழ்ச்சிகளை	16
	ிளங்கினர்	விளங்கினர்	20
7	உரமூட்டிய	உரமூட்டிய	3
	படைப்புகள்.	படைப்புகள்,	7
	இறையனராகப்	இறையனாரகப்	11 கீழிருந்து
	கூறுகிறது	கூறுகிறது.	6 ,,
9	பொய் யென்று	பொய்யென்று	5
	துணிகுவர்	துணிகுவர்.	14
10	யெய்த	செய்த	15

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
11	முடியவிலிலை	முடியவில்லை	3
12	கருத்து கொண்ட	கருத்துக் கொண்ட	3
	பாரிபாடல்	பரிபாடல்	4 கீழிருந்து
	மரபின	மரபின்	3 ,,
14	முடிகிறது	முடிகிறது.	12
	கூற்றாகும்	கூற்றாகும்.	13
16	ஏந்துங்	ஏத்துங்	11
	படல்களாக	பாடல்களாக	5 கீழிருந்து
	நூால் (வருமிடமெல்லாம்)	நூல்	6 மேலிருந்து
17	பொருட் மாட்சி	பொருண் மாட்சி (அல்லது) பொருள் மாட்சி	5
	நாடும்	நாட்டும்	5 கீழிருந்து
18	நாச்சினார்க் கினியர்	நச்சினார்க்கினியர்	7
	குறுந்தொகை	குறுந்தொகை.	11
20	வழங்கப்பெறும்	வழங்கப்பெறும்.	4
	சார்ந்தன வென்றும்	சார்ந்தனவென்றும்	8, 9, 10.
	மிகுதி,	மிகுதி.	14
	1451 புலவர்கள்	145 புலவர்கள்	3, 4.
21	குறிஞ்சித்கலி	குறிஞ்சிக்கலி	17
	ஒரே புலவரே	ஒரு புலவரே (அல்லது) புலவர் ஒருவரே	21
22	மாட்டு சென்ற	மாட்டுச் சென்ற	5
	உள்ளன	உள்ளன.	14
	கொண்டது	கொண்டது.	17

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
23	காயிறு	கயிறு	4 கீழிருந்து
25	இருந்ததைதக்	இருந்ததைக்	17
	ஒரு	ஒரு	15
28	ஒன்றாம்	ஒன்றாம்.	6 கீழிருந்து
29	படைடையும்	படையையும்	3
30	உழத்	உறழத்	7
31	பெருநராற்றுப்	பொருநராற்றுப்படை	4
	தெல்	நெல்	12
	விறலின்	விறலியின்	6 கீழிருந்து
32	சிறுபானாற்றுப் படை	சிறுபாணாற்றுப்படை	13
	கடையெழூ	கடையெழு	5 கீழிருந்து
35	வட்டிவை	வட்டிலை	4, 5.
	இரு பெரு	இருபெரு	8 கீழிருந்து
	சஹறப்படுகின்றன	கூறப்படுகின்றன	4 ,,
36	வாடை யானனம யால்	வாடையானமையால்	11
39	புலவர்க்கு	புலவர்க்குப்	6 ,,
40	சோயாற்றின்	சேயாற்றின்	11 ,,
	படைமரம்	படைமறம்	9 ,,
	ஆகியவற்ரையும்	ஆகியவற்றையும்	9 ,,
	தொகுத் துறைப்துப்	தொகுத்துரைத்துப்	8 ,,
41	கீழ்க் கனக்கில்	கீழ்க்கணக்கில்	3
	தோன்றியினி ருக்கக்	தோன்றியிருக்கக்	10
	முறையின்று	முறையினின்று	11
	ஜந்து	ஐந்து	13

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
42	சளவியல்	களவியல்	14
	இகு	இரு	15
	உலவுக்	உலகம்	18
43	கற்பே	காப்பே	6
44	விளைக்குமால்	விளக்குமால்	13
	பகடியுள்ளதால்	பாடியுள்ளதால்	3 கீழிருந்து
45	சங்கால	சங்க காலக்	2
	ஊனுண்மை மையயும்	ஊனுண்ணாமையையும்	5
	இனியவையாக நந்நான்கு கருத்துக்கள்	நந்நான்கு இனிய கருத்துக்கள்	15
46	ஆசாரங்களை	ஆசாரங்களைக்	11
47	இந்நூலை	இந்நூலைக்	16
48	ஆர்கவி யுலகக்து	ஆர்கலியுலகத்து	14
49	உள்ளத்தை	உள்ளத்தைத்	5
	சேர்ந் தனார்	சேந்தனார்	15
50	கிதைவுற்ற	சிதைவுற்ற	11கீழிருந்து
	கேரமான்	சேரமான்	1 ,,
53	பிரிவுகளை	பிரிவுகளைக்	7
54	சொல்கிறார்	செல்கிறார்	14
57	மணிபல்லவ	மணிபல்லவத்	15
61	சுந்திரன்	சந்திரன்	5
	தொழுந்த	தெழுந்த	9
	அலழக்கப்படும்	அழைக்கப்படும்	12
	சிவபாத விருதயர்	சிவபாதவிருதயர்	1 கீழிருந்து

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
62	வழிபட்டுத்	வழிபடச் செல்லும்	
	திரும்பும் வழியில்	வழியில்	1
	விருதயர்	இருதயர்	7
64	அநிதிதை	அநிந்திதை	5 கீழிருந்து
65	கொற்றட்டி யாளர்	கோற்றட்டியாளர்	2 ,,
67	அழுதனார்	அமுதனார்	11 ,,
69	அற்புத திருவந்தாதி	அற்புதத்திருவந்தாதி	2
70	துவலும்	நுவலும்	5
	கனிவலவ	கவிவலவ	7
71	கறுவான்	கூறுவான்	1
	திருக்கட்ட	திருக்கூட்டச்	12 கீழிருந்து
	நிறவப்	நிறுவப்	10 ,,
84	பாளி	பாவி	16
	யாப்பருக்கல	யாப்பருங்கல	20
86	வித்துக்	கிழித்துக்	7
	கெல்லரம்	கெல்லாம்	5 கீழிருந்து
90	தண்டவை	தண்டலை	10
91	உணர்ச்சிக் கஞக்கும்	உணர்ச்சிகளுக்கும்	6
	கலி	கவி	15
	எயிறென்றுனும்	எயிறென்னும்	18
	பல்லவமங்க	பல்லவமனுங்க	24
94	நலிவெண்புா	நளவெண்பா	2 கீழிருந்து
	சொல்ளச்	சொல்லிச்	1 ,,
97	காமிகைக்கு	காரிகைக்குக்	13

பக்கம்	பிழை	திருத்தம்	வரி
98	அசுர ாதி	அகராதி	5
	நாயகர் காலம்	நாயக்கர் காலம் (தலைப்பு)	7
	அறைகூவலாகக்	அறைகூவலாக	11கீழிருந்து
99	ஆ சிக்	ஆட்சிக்	5
	பாபிண்திணை	பாடாண்திணை	4 கீழிருந்து
114	ஆலன்போத	ஆலன்போ	2 ,,
115	மேனாட்டிரைப் போன்று	ஆனால் மேனாட்டினரைப் போன்று	14 ,,
	சிறுகதைகளே	சிறுகதைகளை	10 ,,
119	நிரம்பியவனவாம்	நிரம்பியனவாம்	13 ,,
123	தூற்றாண்டில்	நூற்றாண்டில்	10 ,,
	பம்பல்	பம்மல்	1 மேலிருந்து
	வருகின்றள	வருகின்றன	24
128	நூலாகும்	நூலேயாகும்	13மேலிருந்து
132	கவரிராயன்	சவரிராயன்	4 ,,
138	தொவை தெந்	தொலைவ தெந்நாள்	12 கீழிருந்து (பாடல்)
141	ஒன்பது பகுதி	ஒன்பது	3மேலிருந்து
6	குறுந்தொகை	ஐங்குறுநூறு	சிறுதலைப்பு

அச்சுக்குத் தயாராக உள்ள ஆசிரியரின் பிற நூல்கள்

1. புதுக்கவிதை தேவையா?
2. மேத்தாவின் கவிதை—ஓர் ஆய்வு.
3. தாசனும் கவிதைத் தன்மையும்.
4. கண்ணதாசனின் கவிதை வளம்.
5. வாழ்வில் உயர.........



